*Approved by the Madras Text Book Committee for Class use,*
*Vide, Fort St. George Gazette Part I-B dated 14-5-'46, Page 16*

# செந்தமிழ்க் கோவை

## முதற் புத்தகம்

(நான்காம் பாரத்துக்கு உரியது)

தொகுத்தவர்:
**வித்துவான் - R. விசுவநாதையர்,** எம்.ஏ., பி.ஓ.எல்.,
தமிழாசிரியர், இராஜதானிக் கலாசாலை,
சென்னை.

ஜி. எஸ். விச்வா & கம்பெனி
திருவல்லிக்கேணி :: சென்னை
1946

உரிமை பதிவு செய்யப்பெற்றது] [விலை ரூ. 1-2-0

First Edition 1945
Second „ 1946
Third „ 1947

## நன்றியுரை

இதிற் கண்ட செய்யுட்களையும், கட்டுரைகளையும் பிரசுரிக்க உரிமை யளித்தருளிய ஆசிரியர்களுக்கும், பிரசுரகர்த்தர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தை நன்றியறிதலுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—பிரசுரகர்த்தர்கள்.

Printed at the B. N. K. Press, Madras, Q. H. No. MS. 100/B
for G. S. Viswa & Co., Triplicane, Madras, Q. H. No. MS. 103/B.-3,000-47.

# முகவுரை

சங்ககால முதல் இன்று வரையில், தமிழகத்துச் சான்றோர் களால் பாடப்பெற்ற பனுவல்களினின்று எடுக்கப்பெற்ற சிறந்த பாடற்பகுதிகளையும், கட்டுரைப் பகுதிகளையுங்கொண்டு இக்கோவை நூல்கள் யாக்கப் பெற்றுள்ளன. மாணவர்கள் இலக்கியச் சுவையையும் இலக்கிய வரலாற்று முறையையும் உணர்ந்து இன்பமுற்றுப் பயன்பெறும் வண்ணம் இவை வகைப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதிக்கும் முன் அமைக்கப் பெற்றிருக்கும் முகவுரைகள் அவ்வப் பகுதியின் தன்மைகளையும் ஆக்கியோரின் நிலையையும் அறிந்துகொள்ளப் பயன்படும். பயிற்சிகள் மூல பாடங்களை ஆழ்ந்தறிதற்குத் துணையாயுள்ளவை. துரைத்தனத்தார் அண்மையில் வெளியிட்டுள்ள கட்டுரையாக்கம் பொருள் விளக்கம் (Composition & Comprehension) என்ற திட்டங்களுக்கொவ்வ பயிற்சிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

தொன்று தொட்டுத் தமிழகத்தில் தோன்றி வளர்ந்து வரும் சிறந்த உரைநடை முறைகளை உதாகரிப்பனபோல் வசனபாடங்கள் அமைந்திருத்தலைக் காணலாம். ஆழ்ந்த படிப்பு, மேலெழுந்த வாரியாய்ப் படிக்கவேண்டியவை என்ற இருபகுதிகளில் முன் வகையே இப்புத்தகங்களுக்கு வேண்டியதாதலால் அக்கருத்தைக் கொண்டே உரைநடைப் பகுதி அமைக்கப்பெற்றுள்ளது. தமிழகத்தில் ஒப்புயர்வற்று விளங்கும் உரைநடையாசிரியர்கள் எழுதிய சிறந்த பகுதிகளைக் கோவைப்படுத்த எம் முயற்சி அவ்வாசிரியர்களின் அன்பு நிறைந்த ஆசியால் ஒருவாறு முடிந்ததை உன்னி மகிழ்கின்றோம். தத்தம் கட்டுரைகளையும் பாடல்களையும் நாங்கள் பயன்படுத்திக்கொள்ள அருளிய அவர்களுடைய அன்புடைமையைக் குறித்து அவர்களிடத்து என்றும் மாறா நன்றி யுடையவர்களாவோம்.

தமிழ்க்கல்வி நாடோறும் முன்னேறிக்கொண்டு வரும் இந்நாளில் புதிய முறையில் உயர்ந்த பகுதிகள் பாடங்களாக அமைவது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. பாடங்களில் அமைந்துள்ள உண்மைப் பொருள்களையும் நடைமுறைகளையும் மாணவர்கள் நன்கு உணர்ந்து, தமிழ்மொழியைத் தங்கள் வாழ்க்கை முறையிற் சிறந்த கருவியாக ஆக்கிக்கொள்ள உதவவேண்டுமென்று பயிற்சிகள் அமைந்திருத்தலை ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திக் கொள்வார்களாக.

இந்நோக்கங்கள் இனிது நிறைவேறும் வண்ணம் இறைவன் இன்னருள் பாலித்தருள வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம்.

—பிரசுரகர்த்தர்.

# பொருளடக்கம்

## செய்யுட் பகுதி

I *கடவுள் வாழ்த்து .... 1

II *சங்கச் செய்யுட்கள்

1. புறநானூறு .... 6
2. நான்மணிக்கடிகை .... 10
3. திரிகடுகம் .... 13

III காவியங்கள்

1. சிலப்பதிகாரம் .... 16
2. மணிமேகலை .... 20

IV காதைப்பகுதி

1. *கம்ப ராமாயணம் .... 26
2. நைடதம் .... 38
3. திருவிளையாடற் புராணம் .... 43
4. கண்ணகி .... 50

V வருணனைப்பகுதி .... 54

VI பல் சுவைப் பாடல்கள் .... 58

* இக் குறியிட்டவை மனப்பாடம் செய்தற்குரியவை.

## உரைநடைப் பகுதி

1. சிலப்பதிகாரம் - உரைபெறு கட்டுரை -
இளங்கோவடிகள் .... 65

2. கல்வெட்டு -
திருப்பதியம் .... 67

3. சத்திய வேதம் -
மத்தேயு .... 70

4. மநுமுறைகண்ட வாசகம் -
ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் .... 75

5. தமிழருக்கு -
மகாகவி சுப்பிரமணிய பாரதியார் .... 79

6. நிலவில் மலர்ந்த முல்லை -
மகாமகோபாதயாய டாக்டர் உ. வே.
சாமிநாதையர் .... 83

7. இயற்கை வரவேற்பு -
திரு. வி. கலியாணசுந்தர முதலியார் .... 92

8. சிறுகதை -
இராவ்சாகிப் எஸ். வையாபுரி பிள்ளை .... 99

9. சேக்கிழார் - தன்மை அணி -
C. K. சுப்பிரமணிய முதலியார் .... 103

10. பண்டைக் கைத்தொழில்கள் -
இராவ்சாகிப் மு. இராகவையங்கார் .... 109

11. பத்திரிகைகள் -
சுவாமி சுத்தானந்த பாரதியார் .... 116

12. தமிழ் நாடகக்கலையின் வளர்ச்சி -
வித்துவான் ஆர். விசுவநாதையர் .... 120

13. கீசகன் -
கா. ரா. நமச்சிவாய முதலியார் .... 125

14. சுவாமி விவேகாநந்தர் கடிதம் -
சுவாமி விவேகாநந்தர் .... 136

# செந்தமிழ்க் கோவை

## முதற் புத்தகம்

## (செய்யுட் பகுதி)

### I. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடியே நூல்களைத் தொடங்குவது தமிழ் மரபு. ஆகவே, ஒவ்வொரு தமிழ் நூலின் முகப்பிலும் கடவுள் வாழ்த்தாகப் பல பாடல்கள் காணப்படும். அன்றியும், கடவுளின் பெருமைகளைப் பற்றிக் கூறவே எழுந்த பல அருட்பாடல் நூல்களும் தமிழில் உண்டு. இவ்விருவகை நூல்களினின்றும் எடுக்கப்பட்ட சில பாடல்கள் இப்பகுதியில் தொகுக்கப் பெற்றுள்ளன.

கடவுள் என்ற சொல்லுக்குக் கடத்தல் என்பது பொருள். மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்ததாயுள்ள ஒன்றைத் தமிழர் கடவுள் எனப் பெயரிட்டிருக்கின்றனர். கடவுள் மதந் தோறும் வேறுபட்ட பெயரைக்கொண்டு அழைக்கப்பட்டாலும், அவ்வாறு வரும் பெயர்களெல்லாம் ஒரு பொருளைப் பற்றியனவே. அப்பொருளே முழு முதற் கடவுளாகும்.

1. இஃது ஒரு பழம் பாடல். இதனில் அயன், அரன், அரி என்னும் மும்மூர்த்திகளின் இடம், கொடி, படைக்கலம், பெயர், நிறம், தொழில் ஆகியவை வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

#### முதற் கடவுள்

பூமலை நீருறையுள் ; புள்ளேறு புட்கொடி ;
வாய்மைவே லாழி படைக்கலம் ;—நாமம்
பிரம னிறைக்கண்ணன் ; பொன்நீக்கார் மேனி ;
கருமம் படைப்பழிப்புக் காப்பு.

—பழம்பாடல்

2. சைவ சமயாசாரியருள் ஒருவராகிய திருவாதவூரடிகள் என்ற மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் என்ற நூலின் திருச்சதகம் என்ற பகுதியிலிருந்து இஃது எடுக்கப்பெற்றது. திருவாசகம் அடையடுத்த ஆகுபெயர். வாசகம் - சொல்; வாச்சியம் - பொருள். திருச்சதகம் - நூறு செய்யுட்களைக் கொண்ட பகுதி. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழி இந்நூலின் பெருமையை உணர்த்தும்.

இப்பாடல், கடவுள் எல்லாமாயிருப்பவர் என்பதை உணர்த்தும்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

—திருவாசகம்

3. இது கம்ப ராமாயணத்தின் முதற் செய்யுளாகும். 'உலகம்' என்ற மங்கல மொழியை முதலில் அமைத்துக் கம்பர் தம் இராமாயணத்தைத் தொடங்கினார்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

—கம்ப ராமாயணம்

4. இப்பாடல் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாடியது. இவர் சிறந்த நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் சமரச நோக்கமும் உடையவர். இப்பாடல் எல்லா மதத்தினர்க்கும் பொதுவாய் அமைந்திருப்பதைக் காண்க.

### இறைவன் தன்மை

உலகெலாம் படைத்துக் காத்து
உருவிலா தழித்து நாளும்
உண்மையாய் எண்ண மாள
ஒருவனாய் அருவ னாகி
சலமிலா தெண்ணு வோர்க்குச்
சத்திய மயமே யாகி

தனித்தனி பிரித்த போதும்
தானதிற் பிரியா னாகி
மலரின்மேல் தேவ னாகி
மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி
மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப்
பற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும்
பரமனார் பெருமை போற்றி!

—கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

5. வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய பாரதத்துக்குப் பாயிரம் பாடிய அவர் மகனார் வரந்தருவார் என்பவரால் இச்செய்யுள் பாடப் பெற்றது. இதனில் தமிழின் வளர்ச்சி மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது.

### தமிழ்த் தாய் வாழ்த்து

பொருப்பிலே பிறந்து, தென்னன்
புகழிலே கிடந்து, சங்கத்(து)
இருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்(து), ஓர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்.

—வரந்தருவார்

6, 7, 8. இவை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதித் தலைமைப் பேராசிரியராய் விளங்கியவரும், உயர்நீதிமன்ற நியாயவாதியுமான திரு. ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்., அவர்கள் இயற்றிய 'மாரி வாயில்' என்ற நூலினின்று எடுக்கப்பெற்றவை.

தமிழினைப் போற்றுதும், தாய்த்தமிழ் போற்றுதும்
தாயைச் சேய்பேணல் தலையறம், நம் மெல்லவர்க்குந்
தாய்தமிழே யாமாத லால்;

தென்மொழி போற்றுதும், தீந்தமிழ் போற்றுதும்,
தாயிற் சிறந்தம்மம் தானும்வாழ் நாளெல்லாம்
ஆய்சுவை யோடளித்த லால்;

தொன்மொழி போற்றுதும், சொற்றமிழ் போற்றுதும்,
போனகமாய்த் தாரகமாய்ப் போக்கியமாய் நாமார
வானமுதின் மேலினித்த லால்.

—ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.

## குறிப்புரை

1. உறையுள்-தங்குமிடம். உறையுள் பூ, மலை, நீர் என மாற்றுக. பூ - தாமரைப்பூ; மலை - கைலாயம்; நீர் - திருப்பாற்கடல்.

கொடி - புள், ஏறு, புள் என்பன. புள் - அன்னப்புள்; ஏறு - இடபம்; புள் - கருடன்.

படைக்கலம் வாய்மை, வேல், ஆழி என்பன. வாய்மை - நிறைமொழி. அஃதாவது: 'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி' (குறள் - 28, பரிமே.) வேல் - வேலாயுதம், ஆழி - சக்கரம்.

நாமம் - பெயர். பிரமன், இறை, கண்ணன். கண்ணன் - திருமால்; கரியோன் என்பது பொருள்; யாவர்க்கும் கண்ணாகவுள்ளவன் என்றும பொருள் கூறலாம்.

மேனி - நிறம். பொன், தீ, கார்.

கருமம் - தொழில். படைப்பு, அழிப்பு, காப்பு.

2. வான் - வானம். வளி - காற்று. கோன் - இறைவன். யானென்பது அகங்காரம் என்றும், எனதென்பது மமகாரம் என்றும் கூறப்படும். நின்றுயை - நின்றுயாகிய நின்னை.

வாழ்த்துக்கு அடங்காத நிலையில் கடவுள் இருக்கின்றார் என்பது கருத்து.

3. உளவாக்கல் - படைத்தல்; நிலைபெறுத்தல் - காத்தல்; நீக்கல் - அழித்தல்; இம் முத்தொழில்களுக்கும் தலைவராவார் முழுமுதற் கடவுள். அலகிலா - எல்லையில்லா. சரண் நாங்கள். சரண் - அடைக்கலப் பொருள்.

4. அருவனுகி - உருவமில்லாதவனுகி. சலம் - சஞ்சலம்; சூது. மலரின்மேல் தேவன் - பிரமன். மாதொருபாகன் - சிவபிரான். மால் - திருமால்.

5. பொருப்பு - பொதியமலை. பொருப்பிலே பிறந்தது, தமிழ் தந்த அகத்திய முனிவர் அங்கு வாழ்ந்தமையால். தென்னன் - பாண்டியன். வைகை ஏட்டிலே தவழ்ந்ததும் நெருப்பிலே நின்றதும், திருஞானசம்பந்தமூர்த்தியால் வைகையில் இடப்பட்ட ஏடு வைகையில்

எதிரேறிச் சென்றதையும், நெருப்பிலே இடப்பட்ட ஏடு எரியாமல் விளங்கியதையும் உட்கொண்டு கூறப்பட்டன. பேதை இளமைப்பருவப் பெண். ஏனம் - பன்றி. பாவை - பூமாதேவியாகிய பெண்.

5. போற்றுதும் - போற்றுவோம். தம்மைப் பெற்ற தாயைப் போற்றுதல் தலையறம்; நம் எல்லார்க்கும் தாய் தமிழே ஆதலால் (நாம்) தமிழைப் போற்றுவோம்.

6. அம்மம் - தாய்ப்பால். தாய் தன் குழவிக்கு இளமைப்பருவத்தே மட்டும் பாலூட்டுவாள்; தமிழ்த்தாயோ தன் மக்களுக்கு அவர்தம் வாழ்நாளெல்லாம் பாலூட்டுவாள் என்றபடி.

7. தாரகம் - உயிரை உடலின்கண் நிலைப்பிப்பது. போனகம் - போஷகம்; உடலை வளர்ப்பது. போக்கியம் - நுகர்வாய் அமைவது. செய்யுள் நோக்கி முறை மாறி இயைந்தது. வான் அமுதைக்காட்டிலும் இனித்தலால் என்பது பொருள்.

### பயிற்சி

#### சொற்கள்

(1) பொருள் கூறுக. உறையுள். ஏறு. வளி. அலகிலா. அருவன். சலம். பரமன். பொருப்பு. மருப்பில். பேணல். போனகம் தாரகம். போக்கியம்.

(2) இப்பகுதியில் நேர்ந்துள்ள தெய்வப் பெயர்களை எடுத்தெழுதுக.

(3) தமிழ் என்ற சொல்லுக்கு அடைமொழிகளாக அமைந்தவை யாவை?

#### வினாக்கள்

(1) முதற் கடவுளின் முப்பெயர்கள் யாவை?

(2) அக்கடவுளரின் உறையுள், கொடி, படைக்கலம், மேனி, கருமம் ஆகியவற்றை வரிசையாக எழுது.

(3) சைவ சமயகுரவர்கள் யாவர்?

(4) திருவாசகத்தின் பெருமை என்ன?

(5) கடவுள் எவையெவையா யிருக்கின்றாரென்று திருவாசகப் பாடல் கூறுகின்றது?

(6) யான் எனது என்பன வேறு எவ்வாறு வழங்கும்?

(7) அலகிலா விளையாட்டுடையார் — அவ்விளையாடல்கள் எவ்வாறு கூறப்பட்டன?

(8) கடவுள் எல்லா மதத்தினர்க்கும் பொதுவானவர் என்பது எவ்வாறு காட்டப்பட்டது?

(9) தமிழின் வளர்ச்சியை வரந்தருவார் எவ்வாறு கூறுகின்றார்?

(10) வைகையேட்டிலே தவழ்ந்த வரலாறு என்ன?

(11) ஏனமருப்பிலே பயின்ற பாவை—விளக்கப் பொருள் கூறுக.

(12) தமிழினைப் போற்றுதும்—என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?

(13) 'தாயிற் சிறந்து' என்று தமிழைப் பாராட்டியது என்?

(14) தமிழ் நமக்கு எம்மூன்று நிலையினும் உறுபொருளாய் அமைகின்றது?

(15) வானமுதத்துக்கும் தமிழுக்கும் ஒப்புமை யாது?

### இலக்கணம்

(1) கடவுள், உறையுள்—இவை என்ன சொற்கள்?

(2) காப்பு, ஆக்கல், விளையாட்டு, இருப்பு, இறை—இவற்றின் பகுதிகள் யாவை?

(3) வாழ்த்துவன், போற்றுதும்—இவற்றிற்குச் சொல்லிலக்கணம் கூறுக.

(4) சரணுங்களே, பொன்றீக்கார், தலையறம், வானமுது—இவற்றைப் பிரித்தெழுதுக.

### கட்டுரையாக்கம்

(1) கடவுளின் தன்மைகளையும் நாம் அவர்க்குச் செய்யவேண்டிய கடமைகளையும்பற்றிப் பத்து வரிகளில் எழுதுக.

(2) தமிழால் நாம் அடையும் பேறுகள் யாவை? ஐந்து வரிகளில் எழுதுக.

(3) தமிழின் வரலாறுகளைக் குறித்துத் தமிழே சொல்வதுபோல் ஒரு பாரா எழுதுக.

## II. சங்கச் செய்யுட்கள்

மதுரையம்பதியில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே நடந்தேறிய கடைச் சங்கத்தைச் சார்ந்த சான்றோர்களால் இயற்றப்பட்ட பல செய்யுட்கள் சங்கச் செய்யுட்கள் என்ற பெயர்பெறும். அவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் புறநானூறு என்பது எட்டுத்தொகை வகையையும், நான்மணிக்கடிகை, திரிகடுகம் என்பன பதினெண்கீழ்க்கணக்கு வகையையும் சாரும்.

### 1. புறநானூறு

பொருள் அகம், புறம் என இருவகைப்படும். இவற்றுள் அகம் என்பது மக்களின் அகத்துணர்வாலே அனுபவிக்கப்படும் இன்பமாகும். புறம் என்பது அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கமாகும். இத்தகைய புறப் பொருளைப் பற்றிக் கூறும் 400 பாடல்களைக் கொண்டுள்ள இத்தொகை நூல் புறநானூறு என்ற பெயரைப் பெற்றது. இப்பாடல்களைப் பாடிய

புலவர்கள் பலராவர். இப்பாடல்கள் இனிய செந்தமிழ்ச் சொற்களால் அமைந்தவை.

## 1. புறநானூறு

### புதல்வர் பெருமை

1. படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

—பாண்டியன் அறிவுடை நம்பி

### கல்வி

2. உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

—பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

### சான்றாண்மை

3. நாடா கொன்றோ; காடா கொன்றோ;
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!

—ஒளவையார்

4. பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்

இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப;
சாலார் சாலார் பாலரா குபவே.

—கண்ணகனார்

## குறிப்புரை

1. இதனைப் பாடியவர் **பாண்டியன் அறிவுடை நம்பி** என்ற அரசர். புதல்வர்களின் சிறப்பை இவர் இப்பாடலில் விளக்கியுள்ளார்.

படைப்பு - படைக்கப்படும் செல்வம். உடை பெரும் செல்வர். இட்டும் - கலத்தினுள் கிடந்ததைத் தரையிலே இட்டும். தொட்டும் - கூடப் பிசைந்து தோண்டியும்; கூட வாரிப் பிடித்தும் என்றும் கூறலாம். கவ்வியும் - வாயால் கவ்வியும். துழந்தும் - கையால் துழாவியும். அடிசில் - சோற்றை. மெய்பட விதிர்த்தும்-உடம்பிலே படச் சிதறியும். மயக்குறு - பெற்றவரின் அறிவை இன்பத்தால் மயக்கும். பயக்குறை - பயனாகிய முடிக்கப்படும் பொருள். குறை - முடிக்கப்படுங்கால் முடிக்கப்படும் பொருள்; இன்றியமையாப் பொருள்.

2. இதனைப் பாடியவர் **ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** என்ற பாண்டிய மன்னர். கல்வியின் சிறப்பையும் கல்வி கற்கும் முறையையும் இச் செய்யுள் கூறுகின்றது.

உற்றுழி - தன் ஆசிரியருக்கு ஏதேனும் ஒரு துன்பம் உண்டாகுங் காலத்து. உறுபொருள் - மிக்க பொருள். பிற்றை நிலை - வழிபாட்டு நிலை. முனியாது - வெறாது. ஓர் அனைய - ஒரு தன்மையாகிய. சிறப்பின் பாலால் - கல்வி விசேடத்தால். தாயும் மனம் திரியும். அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் - அறிவுடையோன் சென்ற வழியே அரசனும் செல்வான். 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்' (வெற்றிவேற்கை) என்பதனை இதனோடு ஒப்பிடுக. நாற்பால் - நான்கு குலம். அவன்பாற் படும் - அவனிடத்தே சென்று வழிபடுவான்.

3. இச்செய்யுள் **ஔவையார்** பாடியது. நாட்டிற்குப் பெருமை ஆங்குள்ள மக்களாலேயே அமையும் என்பது இச்செய்யுளின் பொருள்.

நிலனே, நீ நாடு ஆக ஒன்றோ: நிலமே, நீ ஒன்றில் நாடு ஆகுக. அவல் - பள்ளம். மிசை - மேடு. வாழியர் - வாழ்வாயாக.

தீய நிலமேயானாலும் ஆங்கு நல்லோர் உறைவார்களானால் அது நல்ல நிலமாகும்; நல்ல நிலமேயானாலும் ஆங்குத் தீயோர் வாழ்வார்களானால் அது தீய நிலமாகும். ஆகவே, நிலத்திற்குத் தனி இயல்பு இல்லையென்று அதனை இழித்து உரைத்தார்.

ஒன்றோ, எண்ணிடைச் சொல்.

4. இதனைப் பாடியவர் **கண்ணகனார்** என்ற புலவர்.

கோப்பெருஞ் சோழன் என்ற மன்னன் உலகத்தை வெறுத்து வடக்கிருத்தல் என்ற முறையைப் பின்பற்றி உயிர்நீத்தான். அதனைக் கண்டு, அவனுடைய நண்பரான பிசிராந்தையார் என்ற புலவர் அவனைப் போலவே வடக்கிருந்தார். அப்பொழுது அவரைக் கண்ட கண்ணகனார், இனம் இனத்தோடு சேரும் என்ற கருத்துப்பட இச்செய்யுளைப் பாடினார்.

துகிர்-பவளம். மன்னிய-நிலைபெற்ற. காமம் மரு மணியும்-விரும்பத் தக்க மணியும். இடைபட - இடைவெளி உண்டாக. சேயவாயினும் - ஒன்றற்கொன்று தூரத்திலுள்ளனவாயினும். தொடைபுணர்ந்து - கூடி. நன்கலம் - நல்ல அணிகலம். ஒருவழி - ஓரிடத்தில். ஆங்கு - போல. சான்றோர் - குணஅமைதியுடையவர். பாலர் ஆப - பக்கத்தவராவார்.

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்; கற்பிலா மூக்கரை மூர்க்கர் முகப்பர்' (மூதுரை) என்பதோடு ஒப்பிடுக.

## பயிற்சி

### சொற்கள்

(1) **பொருள் கூறுக:** திழந்தும், அடிசில், சான்றாண்மை, அவல், மிசை, துகிர், சேய, தொடை.

(2) **இருபொருள் கூறுக:** சங்கம், உடை, முனி, பால், நாடு, அவல், தொடை.

### வினாக்கள்

(1) கடைச்சங்கம் எவ்வூரில் எக்காலத்தில் நடைபெற்றது?

(2) புறநானூறு என்ற பெயர் எவ்வாறு உண்டாயிற்று?

(3) குழந்தைகளின் விளையாடல்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?

(4) எவை இருந்தும் பயனில்லை?

(5) ஆசிரியர்க்கு வழிபாடு செய்யும் விதம் எவ்வாறு கூறப்பட்டது?

(6) அரசன் எத்தகையோர் வழியைப் பின்பற்றுவான்?

(7) தாயின் மனம் யார்பால் திரியும்?

(8) குலத்தைவிடக் கல்வியே சிறந்தது என்பது எவ்வாறு கூறப்பட்டது?

(9) நாட்டிற்குப் பெருமை எதனால் அமையும்?

(10) நன்கலத்தில் அமையும் அருவிலைப் பொருள்கள் யாவை?

(11) பொன், துகிர், முத்து, மணி—இவை விளையும் இடங்கள் யாவை?

(12) சாலார் சாலார் பாலராகுவர்—இதற்குத் தக்க ஓர் உவமை கூறுக.

### இலக்கணம்

(1) முதற் செய்யுளிலுள்ள வினையெச்சங்களை எடுத்தெழுதுக.

(2) அருவிலை, நன்கலம், ஒருவழி—இவற்றைத் தொகாநிலைத் தொடர்களாக எழுதுக.

(3) புணர்த்திக் காட்டுக: நாடு + ஆக + ஒன்றோ. அறிவு + உடையோன். அவன்கண் + படும்.

(4) பின்வரும் தடித்த சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக :- அரசுஞ் **செல்லும்.** **வாழியர்** நிலனே. **மன்னிய** மாமலே.

### கட்டுரையாக்கம்

(1) வீட்டில் குழந்தைகள் விளையாடும் தன்மைகளைக் குறித்து ஒரு பாரா வரைக.

(2) ஒரு சபையிலுள்ள சான்றோர்க்கு நன்றிகூறும் வாயிலாக 3, 4 பாடல்களின் கருத்தையமைத்துப் பேச்சு ஒன்றைத் தயாரிக்க.

## 2. நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை சங்க நூல்களுள் ஒன்றாகிய பதினெண் கீழ்க்கணக்கு வகையைச் சார்ந்தது. இதனை இயற்றியவர் விளம்பி நாகனார் என்றவர். இது நூற்றொரு வெண்பாக்களாலாகிய சிறந்த ஒரு நீதி நூல். கடிகை - தோள்வளை. நான்கு மணிகளைக் கொண்டு இழைத்த கடிகையைப்போல் அரிய பொருள்கள் நந் நான்கு அடங்கிய பாக்களையுடைமையால் இந்நூலுக்கு இப்பெயர் உண்டாயிற்று. புறத்திரட்டு என்ற நூலில் உள்ளபடி இப்பாடல்களின் வரிசை அமைக்கப்பட்டுள்ளது.

1. கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை; மக்களின்
ஒண்மை வாய்சான்ற பொருளில்லை; ஈன்றாளின்
என்ன கடவுளு மில்.

2. நலனு மிளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்;
குலனும் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்;
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம்; பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

3. நல்லார்க்குத் தம்மூரென் றூரில்லை; நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை;—கல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை; தங்கைத்(து)
உடையார்க்கு மெவ்வூரு மூர்.

4. பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக மாற்றாரைக் கால மறிந்தே

திருக்குக யார்மாட்டு முண்டி—சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

5. எள்ளற்க வென்றும் எளியரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேலாக-உள்சுழலும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல்ல வற்றை விரைந்து

6. திருவொக்குந் தீதி லொழுக்கம்; பெரிய
அறனெக்கு மாற்றி னெழுகல்;—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல்; புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

7. இன்னாத வேண்டி னிரவெழுக; இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

8. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்;
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்; குற்றம்
தமரல்லாக் கையகத் தூண்.

## குறிப்புரை

1. கண்ணில் - கண்போல. கொண்டான் - கணவன். துன்னிய - நெருங்கிய. கேளிர் - உறவினர். ஒண்மை - ஒளி. புதல்வரைப்போல நல்ல நெறிக்கு அமைந்த பொருளில்லை என்பது பொருள். ஈன்றாள் - பெற்றவள்.

2. நலன் - அழகு. நல்குரவு - வறுமை. சாம் - கெடும். வளம் - நீர் வருவாய். பரம் - பாரம். பரமல்லாப் பண்டம் - சுமக்கும் அளவுக்கு மிக்க பண்டம். பகடு - வண்டியிழுக்கும் எருது.

3. நல்லோர் - கல்வியான் நல்லவர். எல்லா ஊரும் பயன்படும் என்றவாறு. நன்னெறிச்செல்வார்க்கு-நல்ல மார்க்கத்திலே செல்வார்க்கு; தவச்செல்வம் உடையவர்க்கு. அச்செல்வர் எவ்வூரிலும் பற்றுடையவராகார். கடையானவர்களுக்குத் தம் ஊரிலேயே செல்வாக்கிராது.

4. நட்டாரை நன்றின்பால் உய்த்துப் பெருக்குக - நண்பர்களை நன்மையின்கண் செலுத்திப் பெருக்குவிக்க. மாற்றாரைக் காலமறிந்து திருக்குக - பகைவரைக் காலம் பார்த்து வெல்க. 'ஒட்டாரை' என்றும்

பாடம். யார்மாட்டும் உண்டி சுருக்குக - எவர் வீட்டிலும் உண்ணலைத் தவிர்க. செல்லாவிடத்துச் சினம் சுருக்குக - தனக்குச் செல்லா இடத்தில் கோபத்தைக் குறைத்துக்கொள்க.

5. எள்ளற்க - இகழாதொழிக. எல்லாம் பெறினும் தான் சென்று கொள்ளத் தகாதார் கைமேலாக அவரிடம் கொள்ளாதொழிக. மேல்வர, மேலாக என்பன பிரதிபேதம். சிற்றில் (சிறுமை + இல்) - தாழ்ந்த குலம். தாழ்ந்த குலத்திற் பிறந்தார் செய்த பிழை தன் உள்ளத்தைச் சுடுகின்றதாயினும் அவரை வெகுளாதொழிக. கூறல்லவற்றை - தான் சொல்லத்தகாச் சொற்களை.

6. தான் பிறந்த குலத்துக்குத் தீதுவாராமல் ஒழுகும் ஒழுக்கம் செல்வத்தோடொக்கும். ஆற்றின் - நெறியோடு; நெறியோடு ஒழுகும் ஒழுக்கம் மிக்க அறம் செய்தலோடு ஒக்கும். கண்மாறல் - கண்ணோட்டம் இல்லையாதல்; கருணையற்றிருத்தல். கண் - கண்ணோட்டம். ஒருவனை நட்பாகக் கொண்டுவைத்துப் பிறகு அவனிடம் கண் மாறுதல் அவனைக் கொல்லுதலை ஒக்கும். போற்றுதார் - விரும்பாதவர். தன்னை விரும்பா தவரிடம், அவராலாகும் ஒரு பயனைக் கருதிப் போதல்.

7. இன்னாத - பொல்லாப்பு. இரவு - பிச்சையெடுத்தல். ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வரவேண்டினல் பிச்சையெடுக்கும் தொழிலைச் செய்க. மன்னுதல் - நிலைபெறுதல். இசை - புகழ். வெகுளி - கோபம்.

8. வளம் - செல்வம் (வருவாய்). கிளைஞர் - சுற்றத்தார். தமர் - தம்மைச் சேர்ந்தவர். 'மேவாதார் கைத்துண்டல் காஞ்சிரங்காய்' (நாலடி - 217) என்பதோடு ஒப்பிடுக.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக: துன்னிய. கேளிர். நல்குரவு. பகடு. தருக்குக. அருக்குக. திரு. கண்மாறல். வெகுளி.

(2) எதிர்ப்பதங்கள் கூறுக: இல்லை. நல்லார். நன்னெறி. பெருக்குக.

### வினாக்கள்

(1) பொருளிற் சிறந்தது யாது?
(2) நல்குரவால் அழிவன யாவை?
(3) குலமும் குடிமையும் எப்பொழுது அழியும்?
(4) தம்மூரென்றூரில்லை—யார் யாருக்கு? என்?
(5) நட்டாரைப் பெருக்குவது எவ்வாறு?
(6) மாற்றாரை அடிக்சக் காலம் எது?
(7) உள்சுடினும் சீறற்க—யார்மாட்டு?
(8) கொலையொக்கும்—எது?
(9) இரத்தலால் உண்டாகும் கேடென்ன?
(10) அறத்தின் பயன் என்ன?

(11) கோபத்தாலுண்டாகும் கெடுதி யாது ?

(12) குற்றங்களெனக் கூறப்பட்டவை யாவை ?

### இலக்கணம்

(1) அறம், குலம் என்ற சொற்கள் இப்பாடல்களில் எவ்வாறு எழுதப்பட்டுள்ளன ?

(2) பிரித்தெழுதுக : நன்னெறி. சிற்றில்.

(3) ஊண், செலவு, கொலை—இவை என்ன சொற்கள் ? இவை எவற்றிலிருந்து பிறந்தன ?

(4) இச்செய்யுள்களில் வந்துள்ள வியங்கோள் வினைமுற்றுக்களை எடுத்தெழுதுக. அவற்றுள் எதிர்மறைகள் யாவை ?

## 3. திரிகடுகம்

இந்நூலும் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. 'திரிகடுகஞ் சுக்கொடு திப்பிலி மிளகுமாகும்' (சூடாமணி நிகண்டு) என்றபடி மூன்று பொருள்கள் சேர்ந்த ஒரு மருந்தின் பெயர் திரிகடுகம் என்பது. அதைப்போல் ஒவ்வொரு செய்யுளிலும் மூன்று நல்ல பொருள்கள் பெற்று இந்நூல் அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றது. இதனில் 100 செய்யுட்கள் உள்ளன.

இந்நூலை இயற்றியவர் நல்லாதனுர் என்பவர். இவர் வைணவ மதத்தைச் சார்ந்தவர். இவர் மும்மூன்று சிறந்த பொருள்களை ஒரு தலைப்பின்கீழ் அடக்கி இந்நூலை யாத்துள்ளார். இவர் காலத்துக்கு முன்னிருந்த பல நீதிநூல்களினின்றும் உண்மைகளைப் பொறுக்கி இந்நூலை இயற்றியுள்ளார் என்பர். இதற்குப் பழைய உரையொன்றுண்டு.

இப்பகுதி புறத்திரட்டில் கண்ட வரிசையையொட்டித் தொகுக்கப் பெற்றுள்ளது.

### திங்களுக்குரிய குணம்

1. கரப்பவர் நீர்மைத்தாய் நண்பகலிற் றேன்றல்
இரப்பவர்கண் தேய்வேபோல் தோன்றல்—இரப்பவர்க்
ஈவார் முகம்போ லொளிவிடுத லிம்மூன்றும் [கொன்று
ஓவாதே திங்கட் குள.

### இருளுலகம் சேராத வழி

2. ஈதற்குச் செய்க பொருளை ; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை ;—யாதும்

அருள்புரிந்து சொல்லுக சொல்லை; இம்மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு.

### மும்மாரிக்கு வித்து

3. செந்தீ முதல்வ ரறம்நினைந்து வாழ்தலும்,
வெந்திறல் வேந்தன் முறைநெறியாற்—சேர்தலும்
பெண்பால் கொழுநன் வழிச்செலவு மிம்மூன்றும்
திங்கள்மும் மாரிக்கு வித்து.

### மழை இல்லாமற் செய்வன

4. கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள்.

### ஊராண்மை பெறுதல்

5. பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
திறன்வேறு கூறிற் பொறையும்—அறவினையைக்
காராண்மை யாக வொழுகலு மிம்மூன்றும்
ஊராண்மை யென்னும் செருக்கு.

### நன்மை பயவாதவை

6. கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும்—பாத்துண்ணுந்
தன்மை யிலாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில.

### உலகம் எனப்படுபவர்

7. ஒல்வ தறியும் விருந்தின னு மாருயிரைக்
கொல்வ திடைநீக்கி வாழ்வானும்—வல்லிதிற்
சீல மினிதுடைய வாசானு மிம்மூவர்
ஞால மெனப்படு வார்.

### குறிப்புரை

1. கரப்பவர் - ஒளிப்பவர். நீர்மைத்தாய் - தன்மை யுடையதாய். இரப்பவர் - யாசிப்பவர். ஓவாதே - நீங்காமல்.

2. செய்க - தேடுக. பெரு நூலைச் செய்க - பெரிய நூல்களைக் கற்க. யாதானும் ஒரு சொல்லைச் சொல்லின் அருளை விரும்பிச் சொல்லுக ; சொல்லும்போது அருளுடன் சொல்லுக என்பதும் பொருளாகலாம். இருளுலகம் - நரகம்.

3. செந்தீ முதல்வர் - அந்தணர். கொழுநன் - கணவன். திங்கள் தோறும் பெய்யும் மூன்று மழைக்கும் காரணமாவன. அன்றியும், ஐப்பசி முதல் மூன்று திங்களும் பெய்யும் மழைக்கு வித்தாம்.

4. கொள்பொருள் - கொள்ளும் பொருள். வெஃகி - விரும்பி. அலைக்கும் - துன்புறுத்தும். உள்பொருள் - அவைக்களத்தில் சொல்லப் படும் உண்மைப்பொருள். சலமொழி - பொய்மொழி. எல்லை கடப்பாள் - வரம்புமீறி வாழும் மனைவி. அருக்கும் - இல்லாமற் செய்யும். கோள் - கிரகங்கள்.

5. பேணுங்கால் - புகழும்போது. பேணுர் - பேணுமல். திறன் - தகுதி. வேறு கூறின் - வேறுபடச் சொன்னபோது. காராண்மை - மேகம் ; கைம்மாறு வேண்டாது உதவும் மேகம். ஒழுகல் - வளர்த்தல். ஊராண்மை - ஊரை ஆளுந்தன்மை. செருக்கு - பெருமிதம்.

6. கணக்காயர்-ஓதுவிப்பார். பிணக்கு-கலகம் ; குற்றம். அவைக் களன் - சபை. பாத்துண்ணுத் தன்மை - பகுத்து உண்ணுத குணம்.

7. தன்னுல் விரும்பிச் சொல்லப்பட்டார்க்கு இயல்வதறிந்து அத னுல் இன்புறும் விருந்தினனும். அருமை + உயிர் = ஆருயிர். கொல்வது - பிறர் கொல்வதை. வல்லிதின் - வலிமையுடைத்தாக. சீலம் - ஒழுக்கம். ஆசான் - ஆசாரியன். ஞாலம் - உலகம்.

• 'உலக மென்பது உயர்ந்தோர் மேற்றே' என்பதை ஒப்பிடுக.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக : நீர்மை. ஒவாதே. கொழுநன். வெஃகி. சலமொழி. அருக்கும். கோள். பேண். பொறை. ஊராண்மை. கணக்காயர். பிணக்கு. பாத்துண்ணு. ஒல்வது. ஞாலம்.

(2) பின்வரும் வினையடியாகத் தொழிற்பெயர் உண்டாக்குக : கா. தோன்று. ஈ. நாண். கொல். பொறு.

### வினுக்கள்

(1) திரிகடுகம் என்ற பெயர் வரக் காரணம் என்ன ?
(2) இப்பாடல்களின் பொருளமைப்பின் சிறப்பு யாது ?
(3) திங்கட்குள மூன்றும் யார் யார்பால் காணப்படும் ?
(4) நூல்களைப் படிப்பது எதற்கு ?
(5) பொருளின் பயனென்ன ?
(6) திங்கள் மும்மாரிக்கு வித்து எனப்படுபவை யாவை ?
(7) மழையருக்குங் கோள்கள் யாவை ?

(8) ஊராண்மை ஒருவர்க்கு எவ்வாறு உண்டாகும்?

(9) நன்மை பயவா மூன்று யாவை?

(10) ஆசானின் இலக்கணம் யாது?

### இலக்கணம்

(1) இப்பாடல்களினின்று இரண்டு குறிப்பு வினைமுற்றுக்கள் எடுத்தெழுதுக.

(2) ஈதல், ஈவார்—இவ்விரண்டுக்கும் உள்ள வேற்றுமை என்ன? இப்பகுதியினின்று நந்நான்கு தொழிற்பெயர்களும் வினையாலணையும் பெயர்களும் எடுத்தெழுதுக.

(3) செய்க, சொல்லுக—இவை என்ன சொற்கள்?

## III. காவியங்கள்

### 1. சிலப்பதிகாரம்

தமிழ் மொழியிலுள்ள பழைய காப்பியங்கள் ஐந்தாகும். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பனவாம். அவற்றுள் மிகப் பழையதான சிலப்பதிகாரம் ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னே சேரமுனியாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது. இஃது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப் பெற்றது. பண்டைத் தமிழரின் நாகரிகத்தை அறிய இதனைவிடச் சிறந்ததொரு கருவி இப்பொழுது கிடைக்கவில்லை.

இந்நூல் கோவலன் கண்ணகி என்ற இருவரின் வரலாற்றை உணர்த்துவதாகும். இது புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

(i) ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதி மதுரைக் காண்டத்தில் உள்ளது. கோவலன் மதுரையில் அநியாயமாகக் கொல்லப்பட்டான். கண்ணகி அடைக்கலம் புகுந்திருந்த ஆய்ச்சியர் சேரியில் சில உற்பாதங்கள் உண்டாயின. அவற்றைக் கண்டு ஆய்ச்சியர் கண்ணனைக் குறித்துக் குரவையாடல் புரிந்தனர். அப்பொழுது அவர்கள் பாடிய பாடல்களிற் சில இங்குப் பாடமாக அமைந்துள்ளன.

குரவை: எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்தாடுங் கூத்து.

## (i) ஆய்ச்சியர் குரவை

### முன்னிலைப் பரவல்

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி
கடல்வண்ணன்! பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே!
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை!
மலர்க்கமல வுந்தியாய்! மாயமோ? மருட்கைத்தே! 1

அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே!
உண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்!
வண்டுழாய் மாலையாய்! மாயமோ? மருட்கைத்தே! 2

திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே!
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி!
மடங்கலாய் மாறட்டாய்! மாயமோ? மருட்கைத்தே! 3

### படர்க்கைப் பரவல்

மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே! 4

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே! 5

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை, நூற்றுவர்பா னூற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே!
நாராயணாவென்னா நாவென்ன நாவே! 6

## (ii) அறவுரை

பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின் ;
தெய்வந் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின் ;
பொய்யுரை யஞ்சுமின் ; புறஞ்சொற் போற்றுமின் ;
ஊனூண் டுறமின் ; உயிர்க்கொலை நீங்குமின் ;
தானம் செய்ம்மின் ; தவம்பல தாங்குமின் ;
செய்ந்நன்றி கொல்லன்மின் ; தீநட் பிகழ்மின் ;
பொய்க்கரி போகன்மின் ; பொருண்மொழி நீங்கன்மின் ;
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின் ;
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின் ;
பிறர்மனை யஞ்சுமின் ; பிழையுயி ரோம்புமின் ;
அறமனை காமின் ; அல்லவை கடிமின் ;
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின் ;
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா ;
உள்நாள் வரையாது ; ஒல்லுவ தொழியாது ;
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின் ;
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென். 7

## குறிப்புரை

### (i) ஆய்ச்சியர் குரவை

**முன்னிலைப் பரவல் :**—கண்ணபிரானை முன்னிலையாக வைத்துப் போற்றுதல்.

1. வடவரை - வடக்கிலுள்ள மலை ; மந்தரகிரி. நாண் - கயிறு. கடல் வண்ணன் - கண்ணு ; அண்மை விளி. வயிறு - நடு. கமலமலர் உந்தியாய்.

2. அறுபொருள் - ஐயம் அற்ற பொருள் ; வினைத்தொகை. தீர்ந்த பொருள் என்றும், அறுவகைச் சமயத்தாரும் துணிந்த பொருள் என்றும் பொருள் கூறுவர். 'அறிபொருள்' என்பது பிரதிபேதம். கணம் - திரள். உறுபசி - மிக்க பசி. வண துழாய் மாலையாய்.

3. அமரர் திரண்டெடன மாற்றுக. திருமால் நின். மடங்கல் - நரசிங்கம். மாறு - பகை. அட்டாய் - கொன்றாய். மருட்கைத்து - எங்களுக்கு மயக்கத்தைத் தருவதாயிருக்கிறது.

**படர்க்கைப் பரவல்:**—கண்ணனைப் படர்க்கையிற் கொண்டு புகழ்தல்.

4. ஈரடியால் முறை நிரம்பாவகை-இரண்டடிக்குக் குறைபடும்படி. செம்மை + அடி = சேவடி. சேப்ப - சிவக்கும்படி. சோ - வாணசுரனின் நகரம். போர் மடிய - போரின்கண் தொலைந்து மடிய. கட்டழித்த-

காவலழித்த. சேவகன் - வீரன். மண்ணிலும் மரத்திலும், கல்லிலும் செவியுண்டாமாதலால் செவியென்ன செவி யென்றார்.

5. பெரியவனை - எல்லாத்தேவரினும் பெரியவனை. பேருலக மெல்லாம் - பெரிய உலகத்தினையும். விரிகமல உந்தியுடை - விரிக்கின்ற கமல உந்தியையுடைய ; விரிகமலம் - வினைத்தொகை. செய்ய - சிவந்த. செய்ய கரியவன், விரோதமென்னும் அலங்காரம். இமையாது காண்டலின்றி - இமைத்துப் பார்ப்பார் கண்கள் என்ன கண்களோ என்றபடி. கண்ணிமைத்துப் பார்ப்பார் என்றதற்குப் பூவுலகத்தோர் என்றும் பொருள் கொள்ளலாம்.

6. மடமை-அறிவின்மை. தாழ்தல்-தங்குதல். கஞ்சனார்-கம்ஸன். நாற்றிசையும் போற்ற - திசை நான்கினுமுள்ள தேவர்கள் போற்ற. ஆரணம்-வேதம். பஞ்சவர் - பாண்டவர்க்காக. கிருஷ்ணபிரான் பாண்டவர்களுக்காக நூற்றுவர்பால் தூது நடந்த வரலாறு குறிப்பிடப்பட்டது. ஏத்தாத - புகழாத.

### (ii) அறவுரை

இப்பகுதி சிலப்பதிகாரத்தின் கடைசிக் காதையான **வரந்தரு காதை**யின் கடைசிப் பகுதியாகவும் இளங்கோவடிகள் உலகத்தாரை நோக்கிக் கூறும் அறவுரையாகவும் அமைந்துள்ளது.

பரிவு-குற்றம், வருத்தம். இடுக்கண்-துன்பம். போற்றுமின்-பரிகரிமின். பொருண்மொழி-மெய்வார்த்தை. பிழையுயிர்-மரிக்கிறவுயிர். அறமனை - மனையறம். வெள்ளைக்கோட்டி - பயனற்ற சொற்களைக் கூறுவார் கூட்டம். விரகினில்-உபாயத்தால். உளநாள் வரையாது-உள்ள நாளை வீணாக்காது. ஒல்லுவது ஒழியாது - முடிந்தவற்றைக் கைவிடாமல். செல்லும் தேஎம் - (இறந்தபிறகு) போகும் ஊர். உறுதுணை - உற்ற உதவி.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக : குரவை, வரை, உந்தி, மாறு, அரண், அரணம், பரிவு, கரி, பொருண்மொழி, அறமனை, வெள்ளைக்கோட்டி.

(2) திருமாலுக்குரிய பெயர்களாக இப்பகுதியுள் வந்துள்ள தொடர்களை எடுத்தெழுதி அவற்றிற்குக் காரணம் காட்டுக.

(3) அறவுரையில் 'நீக்கு' என்று பொருள்படும்படி வந்துள்ள சொற்கள் யாவை ?

### வினாக்கள்

(1) சிலப்பதிகாரக் கதை யாது ?

(2) ஆய்ச்சியர் குரவை எப்பொழுது ஆடப்பெற்றது ?

(3) முன்னிலைப் பரவலில் திருமால் செய்துள்ளனவாகக் கூறப் பெற்றுள்ள பெரிய காரியங்கள் யாவை ?

(4) அப்பகுதியில் கண்ணனின் செயல்களாகக் கூறப்பெற்றவை யாவை?
(5) மலர்க்கமல வுந்தியாய்! மடங்கலாய் மாறட்டாய்! இரண்டடியால் மூவுலகும் நடந்தனை!—இவற்றுள் அடங்கிய வரலாறுகள் யாவை?
(6) சோவரண் கட்டழித்த வரலாறு யாது?
(7) கண்ணனைச் செய்ய கரியவன் என்றது ஏன்?
(8) கஞ்சனார் யார்? அவர் ஏன் வஞ்சம் புரிந்தார்?
(9) பகைவர்க்குத் தூதாக நடந்த வரலாறு யாது?
(10) அறவுரையில் செய்யவேண்டியனவாகக் கூறப்பெற்றவை யாவை?
(11) அவ்வுரையில் தவிர்க்கவேண்டியனவாகக் கூறப்பெற்றவை யாவை?
(12) செல்லுந் தேஎத்துக் குறுதுணை—என்பது யாது?

### இலக்கணம்

(1) தொடரிலக்கணங் கூறுக: கடல் வயிறு. அறுபொருள். உறு பசி. வண்டுழாய். துழாய் மாலை. செங்கமலம். மூவுலகு. தொல்லிலங்கை. செய்ந்நன்றி.
(2) பிரித்து எழுதுக: மூவுலகு. சேவடி. ஊனூண்.
(3) இக் குற்றியலுகரங்களுக்கு வகை கூறுக: வயிறு, தூது, இரண்டு, நட்பு.

### கட்டுரையாக்கம்

இப்பாடப் பகுதிகளால் கண்ணனின் பெருமைகளையும் தோற்றங்களையும் திருவிளையாடல்களையும் பற்றி நீவிர் அறிந்தனவற்றைத் தொகுத்தெழுதுக.

## 2. மணிமேகலை

இக்காப்பியம் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்ற புலவர் பெருமானால் அருளிச் செய்யப்பட்டது. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்ற மாதின் வரலாற்றைக் கூறுவது. பௌத்த மதக் கருத்துக்கள் பலவற்றை இந்நூல் பலவிடங்களிலும் விளக்கிக் கூறும். இதனிலமைந்துள்ள வருணனைகளும், அறவுரைகளும் படிப்பவர்க்குப் பெருமகிழ்ச்சியை ஊட்டுவனவாக விருக்கும்.

இக் குறிப்புரைகள், இந்நூலைப் பதிப்பித்தருளிய மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்களின் குறிப்புரைகளைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன.

### (i) பித்தன் இயல்பு

கணவிர மாலையிற் கட்டிய திரள்புயன்;
குவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்;
சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத்
த்தர்வீழ் பொடித்துக் கட்டிய வுடையினன்;

வெண்பலி சாந்த மெய்ம்முழு துறீஇப்
பண்பில் கிளவி பலரொடு முரைத்தாங்(கு)
அழூஉம் விழூஉ மரற்றுங் கூஉந்
தொழூஉ மெழூஉஞ் சுழலலுஞ் சுழலும்;
ஓடலு மோடு மொருசிறை யொதுங்கி
நீடலு நீடு நிழலொடு மறலும்.

### (ii) புறங்காட்டின் இயல்பு

சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்
இரவும் பகலும் இளிவுடன் றரியா(து)
வருவோர் பெயர்வோர் மாறாச் சும்மையும்
எஞ்சியோர் மருங்கி னீமஞ் சாற்றி
நெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையுந்
துறவோ ரிறந்த தொழுவிளிப் பூசலும்
பிறவோ ரிறந்த வழுவிளிப் பூசலும்
நீண்முக நரியின் றீவிளிக் கூவுஞ்
சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்
பலவூண் பொருந்திய குராலின் குரலும்
ஊண்டலை துற்றிய வாண்டலைக் குரலும்
நன்னீர்ப் புணரி நளிகட லோதையின்
இன்னா விசையொலி யென்றுநின் றறாது.

### (iii) செங்கோன்மைச் சிறப்பு

கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்;
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்;
மாரி வறங்கூரின் மன்னுயி ரில்லை;
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்.

### (iv) யாக்கையின் இழிபு

வினையின் வந்தது; வினைக்குவிளை வாயது;
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது;
மூப்புவிளி வுடையது; தீப்பிணி யிருக்கை;
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்;

புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை ;
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது ;
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோர் யிதனைப் புறமறிப் பாராய்!

## (v) தீவினையும் நல்வினையும்

தீவினை யென்ப தியாதென வினவின்,
ஆய்தொடி நல்லாய்! ஆங்கது கேளாய்;
கொலையே, களவே, காமத் தீவிழை(வு)
உலையா உடம்பிற் றோன்றுவ மூன்றும்;
பொய்யே, குறளை, கடுஞ்சொற் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்;
வெஃகல், வெகுளல், பொல்லாக் காட்சியென்(று)
உள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவ ராயின்,
விலங்கும் பேயும் நரகரு மாகிக்
கலங்கிய உள்ளக் கவலையிற் றோன்றுவர்;
நல்வினை யென்ப தியாதென வினவிற்
சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வகுத்த வொருமூன்று திறத்துத்
தேவரும் மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பய னுண்குவர்.

## குறிப்புரை

### (i) பித்தன் இயல்பு

காவிரிப்பூம்பட்டினமென்ற நகரின் வீதியில் ஒருநாள் காணப்பட்ட பித்தனொருவனின் தோற்றமும் செயலும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. இது **'மலர்வனம் புக்க காதை'** என்ற பகுதியினின்று எடுக்கப்பட்டது.

1. கணவிரமாலை - அலரி மாலை.
2. சிதவல் துணி - கிழிந்த ஆடை.

3, 4. சினைத்ததர் வீழ்பு - கிளைகளிலுள்ள செறிந்த சுள்ளிகள். வீழ்பு - ஆகு பெயர். ததர் - கொத்துமாம்.

5. வெண்பலி - வெண்ணீறு; விபூதி. சாந்தம் - சந்தனம்.

6. பண்பு இல் கிளவி - நன்மையற்ற சொல்.

8. சுழலலுஞ் சுழலும் - சுழலலையும் செய்வான்.

9. சிறை - பக்கம்.

10. நீடும் - தங்குவான்.

## (ii) புறங்காட்டின் இயல்பு

புறங்காடு - நகர்க்குப் புறத்திலேயுள்ள சுடுகாடு. **சக்கரவாளக்கோட்ட முரைத்த காதை** என்ற பகுதியினின்று இஃது எடுக்கப்பட்டது.

1. சுடுவோர் - பிணங்களைச் சுடுவோர். இடுவோர் - கொணர்ந்து அவற்றைச் சும்மா போகடுவோர். தொடுகுழி - தோண்டப்பட்ட குழி.

2. தாழ்வயின் அடைப்போர் - பள்ளமாகிய இடங்களில் பிணங்களை அடைத்து வைப்போர். தாழ்வயின் - தாழ்ந்த இடம். தாழியிற் கவிப்போர் - பிணங்களைத் தாழியினுலே மூடுவோர். இது முதுமகட்டாழி எனவும் வழங்கும்.

3. இளிவுடன் - அருவருப்புடன்.

4. சும்மை - ஒலி.

5. எஞ்சியோர் - சீவித்திருப்போர். ஈமம் சாற்றி - ஈமம் உண்டென்பதைச் சொல்லி.

6. நெய்தல் - சாப்பறை.

7. தொழுவிளிப் பூசல்-துதி முழக்கம்; துறவோராதலால் தொழுவிளிப் பூசல் கூறப்பட்டது.

8. பிறவோர் - இல்லறத்தோர்.

10. பயிரும் - அழைக்கும். கூகை - பேராந்தை.

11. குரால் - கோட்டான்.

12. ஊண் தலை துற்றிய - உணவாகத் தலை மூளையைக் கடித்துண்ட. ஆண்டலைப் பறவை - ஆண் மகனது தலைபோன்ற வடிவமுள்ள ஒருவகைப் பறவை.

13. புணரி நளி கடல் - அலைகளையுடைய பெரிய கடல். ஓதையின் - ஓசைபோல.

14. இன்னா இசை ஒலி - துன்பத்தை இசைக்கின்ற ஒலிகள்.

1-14. மாரூச் சும்மையும், நெய்தலோசையும், தொழுவிளிப் பூசலும், அழுவிளிப் பூசலும், கூவும், குரலும், குரலும் ஆகிய இன்னா இசைகள் அரு திருக்கப் பெற்ற என்று கூட்டுக.

### (iii) செங்கோன்மைச் சிறப்பு

1. இது, **துயிலெழுப்பிய காதை** என்ற பகுதியினின்று எடுக்கப் பெற்றது.

2. கோல் + நிலை = கோனிலை. கோள் + நிலை = கோணிலை. கோல்- செங்கோல். கோள் - கிரகம்.

3. மாரி வறம் கூரும் - மழை வற்றிப்போம்.

5. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்' என்ற புறநானூற்றின் கருத்தை ஒப்பிடுக.

### (iv) யாக்கையின் இழிவு

**பளிக்கறைபுக்க காதை** என்ற பகுதியினின்று இஃது எடுக்கப் பட்டது.

1. வினையின் வந்தது - கன்மத்தால் வந்தது. வினைக்கு விளைவாயது - கன்மத்திற்கு விளைநிலமாகவுள்ளது.

2. புனவன - சந்தனம் மலர் முதலியவை.

3. மூப்பு விளிவுடையது - முதுமையையும் சாதலையுமுடையது. தீப்பிணியிருக்கை - கொடிய நோய்களுக்கு இருப்பிடமாகவுள்ளது.

5. அரவு அடங்கு புற்றின். செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது. சேக்கை - தங்குமிடம்.

6. அவலம் - வருத்தந் தோன்றி நிற்றல். கவலை - யாது செய்வ லென்றல். கையாறு - மூர்ச்சித்தல். அழுங்கல் - வாய்விட்டழுதல்; அரற்றல்.

7. தவலா - நீங்காத.

8. யாக்கை இதுவென - யாக்கையின் தன்மை இதுவென்று. 'இது'வென்றது 'வினையின் வந்தது' என்றது முதலியவற்றை.

9. மிக்கோய்; விளி. இதனை - இவ்வுடம்பை. புறமறிப் பாராய் - புறமறியாகப் பார்ப்பாயாக.

### (v) தீவினையும் நல்வினையும்

இப்பகுதி **ஆபுத்திரனுடடைந்த காதை** என்றதினின்று எடுக்கப் பெற்றது.

3. காமத் தீ விழைவு - காமமாகிய கொடிய விருப்பம்.

3-5. கொலையும் களவும் காமமும் என உடம்பில் தோன்றுவன மூன்றும்.

5. குறளை - கோள்.

5-6. பயனில் சொல் - அறம் பொருள் இன்பங்களுள் ஒன்றும் பயவாத சொல்.

7. வெஃகல் - விரும்பல்; காமம். வெகுளல் - கோபித்தல்; பொல்லாக் காட்சி - மயக்கம்.

8. உருப்பன - தோன்றுவன.

1-9. தீவினை யென்பது உடம்பில் தோன்றுவ மூன்றும், சொல்லில் தோன்றுவ நான்கும், உள்ளத்தில் தோன்றுவ மூன்றும் எனப் பத்து வகைப்படும்.

10. இத்திறம் - கொலை முதலிய தீவழிகளில். படரார் - செல்வார்.

11-12. இத் தீவழிகளிற் செல்பவர் விலங்கு முதலிய பிறப்புக்களெடுத்துக் கவலையில் தோன்றுவர்.

15. சீலம் - கொல்லாமை, பொய் சொல்லாமை, களவின்மை, காமமின்மை, இரவாமை என்பனவாகிய **பஞ்ச சீலம்**; இவை இல்லறத்தார் எல்லோருக்கும் உரியன.

16. மேலென வகுத்த ஒரு மூன்று திறத்து - அறுவகை உயிர்கள் என்று கூறப்பெற்ற மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என்ற வற்றுள் மேலாகச் சொல்லப்பட்ட பகுதியில்.

19. மகிழ்ச்சி வினை - நல்வினை.

## பயிற்சி

### சொற்கள்

1. பொருள் கூறுக: கணவிரமாலை, சிதவல் துணி, ததர்வீழ், வெண்பலி, தொடுகுழி, இளிவு, நெய்தலோசை, பயிரும், கூரை, குரால், துற்றிய, வறங் கூரும், மன்னுயிர், அவலம், கையாறு, புறமறிப் பாராய், குறளை, பயனில் சொல், பொல்லாக் காட்சி.

2. புறங்காட்டின் இயல்பைப் பற்றிய பகுதியில் **ஒலி** என்ற பொருள் படும் சொற்களாக வந்துள்ளன யாவை?

3. பொருள் வேற்றுமை கூறுக: துனி, துணி. தொடு, தோடு. கோனிலை, கோணிலை. மாரி, மாறி. விளை, விலை.

### வினுக்கள்

(1) பித்தனின் கோலம் எவ்வாறிருந்தது?
(2) அவன் செய்த தொழில்கள் யாவை?
(3) பிணங்களைப் போக்கும் வழிகள் யாவை?
(4) புறங்காட்டில் எழும் பல்வகை ஒலிகள் யாவை?
(5) அக்காட்டில் காணப்படும் பிராணிகள் யாவை?
(6) மன்னன் உலகத்துக்கு உயிராவது எங்ஙனம்?
(7) உடலின் தன்மைகள் யாவை?
(8) உள்ளந்தன்னில் உள்ளவை யாவை?
(9) புற்றடங்கரவு—இவ்வுவமையை விளக்குக?
(10) பத்து வகை என்று கூறப்பட்ட தீவினைகள் யாவை?
(11) தீவினையாளர் எடுக்கும் பிறப்புக்கள் யாவை?
(12) நல்வினை யென்பது யாது?
(13) சீலம் என்பவை யாவை?
(14) நல்வினையாளர் அடையும் பேறுகள் யாவை?

### இலக்கணம்

1. இப்பகுதிகளில் வந்துள்ள அளபெடைகளை யெல்லாம் எடுத்தெழுதி, அவற்றின் பயன்களை ஆராய்க.

2. தொடரிலக்கணங் கூறுக: நன்னீர். மக்கள் யாக்கை. ஆய்தொடி. அவலக் கவலை.

3. கொலையே, களவே— ஏகாரத்தின் பொருள் யாது?

4. 5-ஆம் பகுதியில் வந்துள்ள தொழிற்பெயர்களை எடுத்தெழுதுக.

5. 4-ஆம் பகுதியிலுள்ள வினைமுற்றுக்களை எடுத்தெழுதுக.

### கட்டுரையாக்கம்

1. பித்தனுடைய இயல்புகளையும், செயல்களையும் அவனுக்குப் பித்தந் தெளிந்தபின் மற்றொருவர் அவனிடம் கூறுவதுபோல் எழுதுக.

2. யாக்கையின் உயர்வைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

# IV. காதைப் பகுதி

## 1. கம்பராமாயணம்

### கிஷ்கிந்தா காண்டம்—மராமரப் படலம்

கம்ப ராமாயணம் என்பது கம்பரது ராமாயணம் அல்லது கம்பரால் செய்யப்பட்ட ராமாயணம் என்று பொருள்படும். ராம என்ற சொல்லுக்கு மகிழ்விப்பவன் என்பது பொருள். அயநம் என்ற சொல் அடைய அல்லது அறியக் கருவியாயுள்ளது என்ற பொருள் தருவது. இராமனை அடையவோ அறியவோ கருவியாயுள்ள இராமாயணம் என்ற இந்நூலை ஆதியில் வான்மீகி பகவான் வடமொழியில் பாடியருளினார். இதனை வடமொழியிலுள்ள இதிகாசங்களுள் ஒன்றென்பர்.

கம்பர் இவ்விதிகாசத்தைப் பின்பற்றித் தம் இராமாயணத்தை இயற்றியருளினார். என்றாலும், அவர் முதனூலை முற்றிலும் தழுவிச் செல்லாமல், பற்பல விடங்களில் வேறுபட்டும் சென்றிருக்கின்றார். அவருடைய கற்பனாசக்தியும், சொல்லாட்சித் திறனும் கற்பவர் மனத்தைக் கவர்வனவாயுள்ளன. தமிழ் நூல்களில் கம்ப ராமாயணம் மிக ஓங்கி விளங்குவதொன்று.

இராமாயணம் ஏழு காண்டங்கள் கொண்டுள்ளது. அவற்றுள் கிஷ்கிந்தா காண்டம் நான்காவதாகும். கிஷ்கிந்தம் என்ற

மலைநாட்டில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி இக்காண்டம் கூறும். கிஷ்கிந்தத்தை ஆண்டு வந்த வாலி என்ற வானர மன்னனுக்கும் அவன் தம்பியான சுக்கிரீவனுக்கும் பகைமை மூள, வாலி சுக்கிரீவனை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டான். கானகத்தில் தன் மனைவியை இழந்த இராமபிரான் தன் தம்பி இலக்குமணனுடன் அலைந்து கொண்டிருந்தபோது, சுக்கிரீவனின் துணைவனும் அமைச்சனுமான அநுமான் அவர்களைச் சந்தித்து, அவ்விருவரையும் சுக்கிரீவனுடன் நட்புச் செய்வித்தான். சுக்கிரீவன் வாலியைக் கொன்றருளும்படி இராமபிரானை வேண்ட, அவன் அதற்கு ஒப்புக்கொண்டு, அவ்வாறு செய்வதற்குத் தனக்கு வல்லமையுண்டென்று காட்ட ஓர் அம்பெய்து ஏழு மராமரங்களைத் துளைத்தான். இச் செய்திகளை இப்படலம் கூறும். இப்படலத்திலுள்ள 145 பாடல்களுள் 24 பாடல்களே இங்குப் பாடமாய் அமைந்துள்ளன.

இப்பகுதியில் கம்பருடைய பலவகைக் கவித்திறனை நாம் காணலாம். ஓசையினிமை, அணிகளின் பொருத்தம், பாத்திரங்களின் குணவமைதிக்கேற்ற சொற்பொருத்தம், சான்றோர்களின் உளவமைப்பு, கதைப் போக்கின் செறிவு, இனிமை ஆகிய இப்பண்புகளையும், ஆசிரியர் இராமபிரானிடங் கொண்ட பக்திப் பெருக்கையும் இப்பாடல்கள் நன்கு தெரிவிக்கின்றன.

### இராம லக்ஷ்மணர் வருகையைக் கண்டு சுக்ரீவன் அஞ்சுதல்

1. எய்தினர் சவரிநெடி தேயமால் வரையெளிதின்
நொய்தினே றினரதனி னேன்மைசால் கவியரசு,
'செய்வதோர் கிலனிவர்க டெவ்வரா' மெனவெருவி
'உய்துநா' மெனவிரைவி னோடினன் மலைமுழையின்.

### அநுமான் அவர்களை ஆராய்தல்

2. அஞ்சனைக் கொருசிறுவ னஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகியொரு மாணவப் படிவமொடு,
'வெஞ்சினத் தொழிலர், தவமெய்யர், கைச் சிலைய'ரென
நெஞ்சயிர்த் தயன்மறைய நின்றுகற் பினினினையும்.

3. 'தேவருக் கொருதலைவ ராமுதற் றேவரெனின்
மூவர்மற் றிவரிருவர்; மூரிவிற் கரரிவரை
யாவரொப் பவருலகின்? யாதிவர்க் கரியபொருள்?
கேவலத் திவர்நிலைமை தேர்வெதக் கிழமைகொடு?,

அநுமான் அவர்பால் அன்புகொண்டு நிற்றல்

வேறு

4. என்பன பலவும் பன்னி
யிருவரை யெய்த நோக்கி,
அன்பின னுருகு கின்ற
உள்ளத்த னூர்வத் தோரை
முன்பிரிந் தனையர் தம்மை
முன்னினா னென்ன நின்றான்;
தன்பெருங் குணத்தாற் றன்னிற்
றானலா தொப்பி லாதான்.

அநுமான் பலவாறு எண்ணுதல்

5. "துன்பினைத் துடைத்து மாயத்
தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா
நெறியுய்க்குந் தேவ ரோதாம்!
என்பெனக் குருகு கின்ற
திவர்கின்ற தளவில் காதல்;
அன்பினுக் கவதி யில்லை
யடைவென்கொ லறித றேற்றேன்"

அநுமான் அவர்களை அணுக, இராமபிரான் அவனை விசாரித்தல்

6. இவ்வழி யெண்ணி, ஆண்டவ்
விருவரு மெய்த லோடும்,
செவ்வழி யுள்ளத் தானுந்
தெரிவுற வெதிர்சென் றெய்திக்
'கவ்வையின் றாக நுங்கள்
வர'வெனக் கருணை யோனும்
"எவ்வழி நீங்கி யோய்? நீ
யா"ரென வியம்ப லுற்றான்.

அநுமான் தன்னைத் தெரிவித்தல்

7. "இம்மலை யிருந்து வாழு
மெரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன்;
தேவ! நும் வரவு நோக்கி,

விம்மலுற் றனையா னேவ
வினவிய வந்தே'' னென்றான்
எம்மலைக் குலமுந் தாழ
விசைசுமந் தெழுந்த தோளான்.

**இராமன் அநுமானைக் குறித்து இலக்குமணனிடங் கூறுதல்**

8. மாற்றமஃ துரைத்த லோடும்,
வரிசிலைக் குரிசில் மைந்தன்
தேற்றமுற் றிவனி னாங்குச்
செவ்வியோ ரின்மை தேறி,
ஆற்றலு நிறைவுங் கல்வி
யமைதியு மறிவு மென்னும்
வேற்றுமை யிவனோ டில்லை
யா'மென விளம்ப லுற்றான்.

**இராமபிரான் இலக்குமணனிடம் கூறியவை**

9. "இல்லாத வுலகத் தெங்கு
மீங்கிவ னிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே'' யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொலிச் சொல்லின் செல்வன்?
வில்லார்தோ ளிளைய வீர!
விரிஞ்சனோ? விடைவல் லானோ?

**இராமபிரான் அனுமானை நோக்கி வினுதல்**

10. "எவ்வழி யிருந்தான் சொற்ற
கவிக்குலத் தரசன்? யாங்கள்
அவ்வழி யவனைக் காணு
மருத்தியா லணுக வந்தோம்;
இவ்வழி நின்னை யுற்ற
வெமக்குநீ யின்சொ லன்ன
செவ்வழி யுள்ளத் தோனைக்
காட்டுதி தெரிய'' வென்றான்.

அநுமானது முகமன்

11. இரவிதன் புதல்வன் றன்னை
யிந்திரன் புதல்வ னென்னும்
பரிவிலன் சீறப், போந்து
பருவரற் கொருவ னாகி,
அருவியங் குன்றி னென்னே
டிருந்தன னவன்பாற் செல்வம்
வருவதோ ரமைவின் வந்தீர்;
வரையினும் வளர்ந்த தோளீர்;

அநுமான், 'சுக்கிரீவனிடத்து உங்களைத் தெரிவிக்கும் வகை எவ்வாறு?' என்ன, இலக்குமணன் கூறும் விடை

12. "யாரென விளம்பு கேனா
னெங்குலத் தலைவற் கும்மை
வீர! நீர் பணித்தி" ரென்றான்
மெய்ம்மையின் வேலி போல்வான்;
வார்கழ லிளைய வீரன்
மரபுளி வாய்மை யாதும்
சோர்விலனிலைமை யெல்லாந்
தெளிவுறச் சோற லுற்றான்.

13. "புயறரு மதத்திண் கோட்டுப்
புகர்மலைக் கிறையை யூர்ந்து
மயறரு மவுணர் யாரு
மடிதர வரிவிற் கொண்ட
இயறரும் புலமைச் செங்கோன்
மனுமுதல் யாரு மொவ்வாத்
தயரதன் கனக மாடத்
தடமதி லயோத்தி வேந்தன்;

14. "அன்னவன் சிறுவ னாமிவ்
வாண்டகை யன்னை யேவத்
தன்னுடை யுரிமைச் செல்வந்
தம்பிக்குத் தகவி னல்கி

நன்னெடுங் கானஞ் சேர்ந்தா
னும்மு மிராம னென்பான்
இந்நெடுஞ் சிலைவ லானுக்
கேவல்செய் யடியன் யானே !''

15. என்றவன் றேற்ற மாதி
யிராவண னிழைத்த மாயப்
புன்றொழி லிறுதி யாகப்
புகுந்துள பொருள்க ளெல்லாம்
ஒன்றுமாண் டொழிவு றாம
லுணர்த்தின னுணர்த்தக் கேட்டு
நின்றவக் காலின் மைந்த
னெடியவ னடியிற் றாழ்ந்தான்.

அநுமான் சுக்கிரீவனை அழைத்து வருமாறு இராமபிரானிடம் விடைபெற்றுச் சென்று அச் சுக்கிரீவனிடம் இராமபிரானைப் பற்றி அறிவிப்பானானன் :

### அநுமான் வார்த்தை

### வேறு

16. ஆயமா னுகர்தா மாழியா னேயலால்
காயமா னயினன் யாவனே ? காவலா !
நீயமா னோர்தியா னிருதமா ரீசனார்
மாயமா னயினன் மாயமா னயினன்.

17. மாயையால் மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
தீயகா னெறியினுய்த் தன்னவட் டேடுவார் :
நீயையா ! தவமிழைத் துடையையா னெடுமனம்
தூயையா வுடையயா லுறவினைத் துணிகுவார்.

### சுக்கிரீவன் இராமபிரானைக் காணுதல்

### வேறு

18. கண்டன னென்ப மன்னோ
கதிரவன் சிறுவன், காமர்
குண்டலந் துறந்த கோல
வதனமுங் குளிர்ந்த கண்ணும்

புண்டரி கங்கள் பூத்துப்
புயறழீ இப் பொலிந்த திங்கள்
மண்டல முதயஞ் செய்த
மரகதக் கிரிய னானே.

19. தவாவலி யரக்க ரென்னுந்
தகாவிருட் பகையைத் தள்ளிக்
குவாலற நிறுத்தற் கேற்ற
காலத்தின் கூட்ட மொத்தார்
அவாமுத லறுத்த சிந்தை
யநகனு மரியின் வேந்தும்
உவாவுற வந்து கூடு
முடுபதி யிரவி யொத்தார்.

**சுக்கிரீவன் கூறிய முகமன்**

20. ஆயதோ ரவதி யின்க
ணருக்கன்சே யரசை நோக்கித்
"தீவினை தீய நோற்று
ரென்னின்யார்? செல்வ! நின்னை
நாயக முலகுக் கெல்லா
மென்னலா நலமிக் கோயை
மேயினன்; விதியே நல்கின்
மேவலா காதென்" னென்றான்.

**இராமபிரான் அபயங் கூறல்**

21. "மற்றினி யுரைப்ப தென்னே?
வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரெம்மைச் செற்றார்;
தீயரே யெனினு முன்னோ(டு)
உற்றவ ரெமக்கு முற்று
ருன்கிளை யெமதெங் காதற்
சுற்றமுன் சுற்ற நீயெம்
மின்னுயிர்த் துணைவ" னென்றான்.

அநுமான், சுக்கிரீவன் தன் மனைவியைத் துறந்திருக்கும் செய்தியை இராமபிரானிடம் கூறி, அவன் உதவியைத்தான் நாடியிருப்பதைத் தெரிவித்தான். அதன்மேல் ஸ்ரீராமன் சுக்கிரீவனை நோக்கி,

வேறு

22. "உலக மேழினோ டேழும்வந் தவனுயிர்க் குதவ
விலகு மென்னினும், வில்லிடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் றாரமு முனக்கின்று தருவேன்;
புலைமை யோயவ னுறைவிடங் காட்"டெனப் புகன்றான்.

அதற்குச் சுக்கிரீவன் மராமரங்களைக் காட்டினான்.

23. "ஏக வேண்டுமிந் நெறியென வினிதுகொண் டேகினன்
மாக நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள்
ஆக வஞ்சினோ டிரண்டினொன் றுருவினின் னம்பு
போக மன்றவென் மனத்திடர் போ"மெனப் புகன்றான்.

இராமபிரான் மராமரங்களைத் துளைத்தல்

24. ஏழு மாமர முருவிக்கீ ழுலகமென் றிசைக்கும்
ஏழு மூடுபுக் குருவிப்பி னுடனடுத் தியன்ற
ஏழி லாமையான் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபி னுருவுமா லொழிவதன் றின்னும்.

குறிப்புரை

1. அவ்வாறு சென்ற இராம லக்ஷ்மணர்கள், சவரியானவள் நெடுநாள் வாசஞ் செய்திருந்த பெரிய ருசியமூகபர்வதத்தின்மேல் எளிமையாகவும் விரைவாகவும் ஏறிச் சென்றனர். (அப்பொழுது) அம்மலையிலிருந்த வலிமை மிகுந்த குரங்குகட்கு அரசனான சுக்கிரீவ மன்னன், 'இவர்கள் பகைவர்கள்' என்றெண்ணிப் பயந்து, செய்யத்தக்கது இன்னதென்று அறியாமல், 'நாம் இப்பொழுது தப்பிப் பிழைப்போம்' என்றெண்ணி அம்மலையின் குகையொன்றுள் வேகமாய் ஓடினான்—இது பொழிப்புரை.

எய்தினார்—**எழுவாய்**; ஏறினர்—**பயனிலை**; கவியரசு—**எழுவாய்**; ஓடினான்—**பயனிலை**.

சவரி - சபரீ; சபரமென்னும் வேடர் சாதியிற் பிறந்தவள். இவள் இராம பிரானைக்கண்டு உபசரித்து அவனருளால் முக்தியடைந்தாள். அவள் வசித்துவந்த இடம் ருசியமூக பர்வதம் என்பது. சவரி நெடிதுஏய—என்பதற்குச் சவரியால் விளக்கமாகச் சொல்லப்பட்ட என்றும்

பொருள் கொள்ளலாம். கவி(கபி) - குரங்கு. நோன்மை - வலிமை; பெருமை.

2. அஞ்சனை - அஞ்சநாதேவி. அஞ்சனக்கிரி அனைய மஞ்சனை - நீலமலை போன்ற மைந்தனை; இராமபிரானை. மாணவப் படிவம் - பிரமசாரி உருவத்தோடு. அயிர்த்து - சந்தேகித்து. கற்பினில் - தன் கல்வித் திறமையால்.

வெஞ்சினத்தொழிலர், தவமெய்யர், கைச்சிலையர் ஆகிய கோலங்கள் ஒன்றற்கொன்று ஒவ்வாமையால் அயிர்த்தான் என்க.

மஞ்சன் போலி. கற்பு - தொழிற்பெயர். பு - விகுதி.

3. தேவர் மூவர்; இவர் இருவர். மூரி வில் கரர் - வலிய வில்லையுடைய கையினர். கேவலத்து - எளிதாக. எ கிழமை கொடு - எந்தத் தன்மையால்? விற்கரர் என்றது மூவரின் படைக்கலங்கள் வேறானமையை உட்கொண்டு.

4. பன்னி - சொல்லி. எண்ணி என்பது பாடபேதம். எய்த நோக்கி-நன்ருகப் பார்த்து. ஆர்வத்தோரை-அன்பர்களை. முன்னினான் என்ன - திரும்பவும் எதிரில் கண்டவன்போல. குணத்தால் தனக்குத் தானே ஒப்பானவன் அநுமான் என்றபடி.

5. துன்பினை - பிறவித் துன்பங்களை. மாய தொல்வினை - அஞ்ஞானத்தால் உண்டாகின்ற பழமையான வினைகளை. தென்புலம் - எமலோகம். மீளாநெறி - முத்திநெறி. இவர்கின்றது - மிகுகின்றது. அவதி - எல்லை. அடைவு என்கொல் - காரணம் யாதோ?

காரணமில்லாமல் தன்னிடம் உண்டான அன்பினை எண்ணி அநுமான் ஆராய்கின்ருன்.

6. செம் வழி உள்ளத்தான், அநுமான். நுங்கள் வரவு கவ்வை இன்ருக. கவ்வை - துன்பம். கருணையோன் - இராமபிரான்.

7. எரிகதிர்ப் பரிதிச் செல்வன் செம்மல் - சூரிய குமாரன்; சுக்கிரீவன். விம்மல் - கலக்கம். மகிழ்ச்சியென்றும் கொள்ளலாம். அனையான் - சுக்கிரீவன். வினவிய - விசாரிக்கும்பொருட்டு; செய்யிய என்னும் வாய்பாடு. மலைக்குலம் - மலைகளின் கூட்டம். இசை - கீர்த்தி.

8. வரிசிலை - கட்டமைந்த வில்லைத் தாங்கிய. குரிசில் - ஆண்பாற் சிறப்புப் பெயர்; தசரதனைக் குறித்தது. தேற்றம் உற்று - ஆராயத் தொடங்கி; மனந்தேறி என்றும் கொள்ளலாம். ஊங்கு - காட்டிலும். இல்லையாம் என.

9. இசைகள் கூர - புகழ் மிகும் வண்ணம். உலகத்து எங்கும் இல்லாதவே. என்னும் காட்சி - இப்படிச் சொல்லுதற்குரிய அறிவு. விரிஞ்சன்-பிரமதேவன். விடைவலான்-இடபவாகனனுன சிவபிரான்.

உலகத்தெங்கும் இல்லாத என்று பொருள்கொள்வதோடு, இவன் போகாத இடங்களிலும் இவன் புகழ் பரவும் என்று கொள்வதும் ஆம்.

அநுமானைப் பற்றிய அறிவு அவன் சொல்லாலே தோன்றிற்று. ஆதலின் அவன், 'சொல்லின் செல்வன்' என்றான்.

10. சொற்ற - நீ சொன்ன. அருத்தி - விருப்பம். நின்னை உற்ற எமக்கு. இன்சொல் அன்ன செம்வழி உள்ளத்தோனை - உன் இனிய சொற்களைப் போன்ற நன்னெறியில் செல்லுகின்ற மனமுடைய அச் சுக்கிரீவனை. இன்சொல், சுக்கிரீவனுக்கும் கூட்டப்படலாம்.

11. இரவிதன் புதல்வன் - சுக்கிரீவன். இந்திரன் புதல்வன்-வாலி. பரிவு இலன் - துன்பமில்லாதவன் ; அன்பில்லாதவன் எனினும் ஆம். பருவரல் - துன்பம். ஒருவனாகி - தனியனாகி. மனைவியையும் இழந்து என்று பொருள்பட, 'ஒருவனாகி' என்றான்.

12. மெய்ம்மையின் வேலிபோன்றான் - சத்தியமாகிய பயிர் அழியாமைக்குக் காவலாக இடப்பெற்ற வேலி போன்றவன். மரபு உளி - (கூற வேண்டிய) முறையை எண்ணி. மரபுளி - முறைப்படி என்றும் ஆம்.

விளம்புகேன்—ககர வொற்றிடைநிலை எதிர்காலங் காட்டிற்று.

வீர நீர்—ஒருமை பன்மை மயக்கம்.

13. புயல் தரு மதம் -மேகம்போன்ற மதநீர்ப் பெருக்கையும். திண் கோடு - வலிய தந்தங்களையும். புகர் - செம்புள்ளிகளையுமுடைய இறையை. மலைக்கு - மலைபோன்ற யானைகளுக்குத் தலைவனாகிய பட்டத்து யானையை. மயல் - மயக்கம். அவுணர் - அரக்கர். இயல் தரும் புலமை - இயல்பாகப் பொருந்திய நல்லறிவையும்.

தயரதன் - பத்துத் திக்குகளிலும் இரதத்தைச் செலுத்த வல்லவன். பண்புத் தொகையன்மொழி.

14. ஆண்டகை - ஆண்மைக் குணமுள்ள இராமன். அன்னை - கைகேயி. தகவில் நல்கி - அன்போடு கொடுத்து.

15. தோற்றம் - பிறப்பு ; தொழிற்பெயர். இராவணன் - கூச்ச லிடும்படி செய்பவன் என்ற பொருள். காலின் மைந்தன் - வாயுபகவானின் புத்திரன் ; அநுமான். நெடியவன் - இராமபிரான்.

16. காவலா - (சுக்கிரீவனை நோக்கி) மன்னனே! காயமான் ஆயினான் - (மானிட) உடலுடையவனாய் வந்த. ஆயமால் நாகர்தாழ் ஆழியானே அலால் - கூட்டமான பெருமை பொருந்திய தேவர்களால் வணங்கப்பெற்ற திருப்பாற்கடலில் எழுந்தருளிய திருமாலே அல்லாமல். நாகர் - தேவர். நீ அ மான் ஓர்தி - நீ அப்பெரியோனை அறிவாயாக. நிருதன் - மாரீசன். மாயம் மான் ஆயினான். நிருதன் - அரக்கன். ஆர் - நிறைந்த. (அவனுக்கு இராமபிரான்) மா யமான் ஆயினான் - பெரிய இயமனானான்.

'இங்கு மானிட உருவத்தில் தோன்றுபவன் திருமால் ; நீ அவன் பெருமைகளை உணர்ந்துகொள். அவனே மாரீசனைக் கொன்றவன்' என்று அநுமான் கூறினான்.

ஈற்றடி **யமகம்** என்னும் சொல்லணியின்பாற்படும்.

17. நிருதர் கோன் - இராவணன். உய்த்தனன் - கொண்டு போனான். அவள் தேடுவார். நீ தவம் இழைத்துடையயால், நெடு மனம் தூய்மையா உடைமையால் (உன்) உறவினைத் துணிகுவார்.

18. என்ப, மன், ஓ—அசைகள். கதிரவன் சிறுவன் - சுக்கிரீவன். காமர் - அழகிய. புண்டரிகங்கள் பூத்து - தாமரை மலரப்பெற்று. புயல் தழீஇ - காளமேகம் தழுவப்பெற்று. திங்கள் மண்டலம் உதயம் செய்த மரகதம் கிரி - சந்திர மண்டலம் உதிக்கப்பெற்ற மரகதமலையை. புண்டரிகங்கள் கை, அடி முதலான அவயவங்களையும், புயல் குழலையும், திங்கள் மண்டலம் முகத்தையும், மரகதகிரி நீலமேனியையும் ஒவ்வும். இல்பொருள் உவமையணி.

19. தவா - அழியாத. இருட்பகை - இருளாகிய பகை. குவால் அறம் - கூட்டமாகிய தர்மத்தை. ஏற்ற காலத்தின் கூட்டம் ஒத்தார் - தகுந்த காலத்தின் சேர்க்கையை ஒத்திருந்தார்கள். அவாமுதல் - ஆசையின் வேரை. அநகன் - குற்ற மற்றவன்; இராமன். அரி - குரங்கு. அரியின் வேந்து - சுக்கிரீவன். உவா - அமாவாசை. உடுபதி - சந்திரன். இரவி - சூரியன்.

இராமனும் சுக்கிரீவனும் கூடிய கூட்டம் உலகத்துக்குண்டான அரக்கர் பயமென்ற இருளைப் போக்க, நற்காலமெல்லாம் கூடியதை ஒத்திருந்தது. இராம (சந்திர)னும் சூரியபுத்திரனும் ஒன்று சேர்ந்தது, அமாவாசையன்று சந்திரனும் சூரியனும் கூடியதை ஒத்திருந்தது. உவமையணி.

20. அவதி - பொழுது. அருக்கன் சேய் - சூரிய புத்திரன். தீவினை - பாபங்கள். தீய - ஒழிய. நோற்றார் - தவம் செய்தவர். நின்னை உலகுக் கெல்லாம் நாயகம் என்னலாம். மேயினன் - அடைந்தேன். விதியே நல்கின் மேவல் ஆகாது என் - ஊழ்வினையே கூட்டுவித்தால் கூடாதது என்ன உண்டு? வேற்றுப்பொருள் வைப்பணி.

21. செற்றவர் - வருத்தியவர்.

22. அவன் உயிர்க்கு - வாலியின் உயிர்க்கு. விலகும் என்னினும் - தடுக்கும் என்றாலும். வீட்டி - அழித்து. நின் தாரமும் - உன் மனைவியையும். புலமையோய் - அறிவுடையவனே. புலமை எதுகை நோக்கிப் புலமை என்றாயிற்று.

23. மாகம் நீண்டன - பெரிய ஆகாயத்தை அளாவினவும். குறுகிட நிமிர்ந்தன - இவ்வாகாயம் குறுக்கிக் காட்டும்படி வளர்ந்தன. அஞ்சினோடு இரண்டு - ஏழு. ஒன்று உருவி நின் அம்பு போக மன்ற என் மனத்து இடர்போம் - ஒன்றில் உன் அம்பு உருவ அஃது எல்லாவற்றையும் துளைத்துச் சென்றால் என் மனதில் நிலைத்த இடர் போம்.

24. கீழ் உலகம் என்று இசைக்கும் ஏழும் ஊடு புக்கு உருவி. கீழுலகம் ஏழு: அதலம், விதலம், சுதலம், தராதலம், ரஸாதலம், மகாதலம், பாதாளம் என்பவை. பின்னும் உடன் அடுத்து இயன்ற ஏழு இலாமையால் மீண்டது. பகழி - அம்பு. இன்னும் ஏழு கண்டபின் உருவும்; ஒழிவதன்று. ஆல், அசை.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக :—நோன்மை, ஒர்கிலன், உய்தும், முழை, படிவம், மூரி, கிழமை, பன்னி, ஆர்வம், இவர்கின்றது, கவ்வை, விம்மல், ஊங்கு, விரிஞ்சன், அருத்தி, பருவரல், மரபுளி, புகர், நாகர், கிருதர், வதனம், தவா, குவால், அநகன், உவா, உடுபதி, தாரம், மாகம், பகழி.

(2) இருபொருள்கள் கூறுக :—மால், கவி, மெய், இசை, பண்ணி, மடி, ஆழி.

(3) கீழ்வரும் சொற்றொடர்கள் யார் யாரைக் குறிக்கும்? எவ்வாறு? கவியரசு, அஞ்சனக் கிரியனையன், பரிதிச் செல்வன், இரவிதன் புதல்வன், இந்திரன் புதல்வன், இளைய வீரன், காலின் மைந்தன், மரகதக் கிரியனான், அரியின் வேந்து.

### வினாக்கள்

(1) சவரி யார்?

(2) சுக்கிரீவன் பயந்தோடியது ஏன்?

(3) அநுமான் அயிர்த்ததற்குக் காரணம் என்ன?

(4) இராமனைக் கண்ட அநுமானுக்குண்டான உணர்ச்சி யாது? அவன் நினைத்தவை யாவை?

(5) அன்பினுக் கவதியுண்டோ; விதியே நல்கின் மேவலாகாதென்—இவற்றைச் சந்தர்ப்பங் காட்டி விளக்குக.

(6) இராமன் அநுமானைப்பற்றி இலக்குமணனிடம் கூறியவை யாவை?

(7) 'அவன்பாற் செல்வம் வருவதோரமைவின் வந்தீர்'—இதன் பொருத்தத்தை ஆராய்க.

(8) தசரதன் பெருமை எவ்வாறு கூறப்பட்டது?

(9) அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம்—இவற்றின் கருத்துக்கள் இங்குக் சுருக்கமாகக் கூறப்பட்டது எங்ஙனம்?

(10) மாய மானுயிருன் மாயமானுயிருன்—பொருள் கூறுக. இதனிலமைந்த அணி யாது?

(11) இராமனின் தோற்றம் எவ்வாறு வருணிக்கப்பட்டது?

(12) இராம சுக்கிரீவர்களின் சேர்க்கை எவ்வாறு வருணிக்கப்பட்டது?

(13) இராமன் சுக்கிரீவனுக்கு எவ்வாறு அபயம் அளித்தான்?

(14) இராமன் பகழியின் வலிமை எவ்வாறு கூறப்பட்டது?

### இலக்கணம்

1. இப்பாடல்களிலிருந்து உவமையணி, உருவகவணி இவற்றிற்கு ஒவ்வோருதாரணம் தருக.

2. தடித்த சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக: **யாது** இவர்க்கு **அரிய** பொருள்.

3. தொகைகளை விரித்துக் கூறுக: கவியரசு, அஞ்சனக்கிரி, திங்கள் மண்டலம், எரிகதிர், குரிசில் மைந்தன்.

4. வேற்றுப் பொருள் வைப்பணி என்றால் என்ன?

### கட்டுரையாக்கம்

1. 'சொல்லின் செல்வன்' என்று அநுமனைக் கூற அவனிடம் காணப்பெற்ற சிறப்பியல்புகளை மேற்கோள்களுடன் நிறுவுக.

2. கம்பர் இராமபிரானிடம் கொண்ட பக்தியை இப் பாடப்பகுதியால் எவ்வாறு அறியலாம்?

## 2. நைடதம்

### கலி தொடர்தல்

நிடத நாட்டு மன்னனான நளனது சரித்திரத்தைக் கூறுதலால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதன் முதனூல் ஸ்ரீ ஹர்ஷதேவரால் வடமொழியில் இயற்றப்பெற்ற நைஷதம் என்பது. 'நைஷதம் புலவர்க்கு ஔஷதம்' என்னும் பழமொழி இதன் பெருமையை உணர்த்தும். தமிழில் நைடதத்தை இயற்றியவர் அதிவீரராமபாண்டியர் என்ற சிற்றரசர். இவரது காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு என்பர். இவருடைய பாடல்கள் எளிமையும் இனிமையும் செறிந்து விளங்குவனவாகும்.

நளன், தமயந்தி என்பவளை மணந்துகொண்டதால் அவனுக்குச் சில தேவர்கள் பகைவர்களானார்கள். அவர்களில் ஒருவனான கலிபுருஷன் நளனுக்குத் தீமை விளைவிக்க வேண்டி, அவனைச் சூதாட்டத்தில் புகுவித்து, அவன் தன் நாட்டையும் பிற செல்வங்களையும் இழக்கச் செய்தான். அன்றியும், அவன் தன் மனைவியோடும் எளிமையுற்றுக் காடு நோக்கிச் சென்ற போதும், கலி அவனை விடாமல் வருத்தினான். அவனால் நளன் காட்டில் பட்ட துன்பங்களை இப்பகுதி கூறும். இங்குப் பாடல்கள் அவலச் சுவை ததும்ப அமைந்துள்ளதைக் காணலாம்.

### நளன் தமயந்தியை விட்டுப் பிரிதல்

#### நள தமயந்தியர் சென்ற கானகத்தின் இயல்பு

1. களிமயில் குனித்திடக் கால மன்றியும்
துளிமுகில் பிலிற்றின ; துணர்த்த பூங்கொடி ;
முளிசிலை தளிர்த்தன ; முகைத்த பைந்தரு ;
நளிகடற் றானையான் நடந்த கானமே.

2. விள்ளரும் அதரிடை வெதும்பும் வெம்பரல்
கள்ளவிழ் மலரெனக் குழைந்து காட்டின;
ஒள்ளழற் கதிர்சுட உலரும் வெஞ்சுரம்
வள்ளவாய் மலர்விரி மருதம் போன்றதே.

3. ஊறுசெய் தூன்சுவைத் துடம்பு வீக்கிய
ஆறலை கள்வரும் அளிய ராயினர்;
வேறினி உரைப்பதென்? வெருவும் ஆனொடு
மாறுகொள் உழுவையும் மாற்றம் தீர்ந்தவே.

காடு இவ்வாறு தோன்றிற்று. ஆகவே, நளனும் தமயந்தியும் அதனில் இனிமையாகவே நடந்தனர். வழியில் ஒரு குளக் கரையில் கலிபுருஷன் ஓர் அன்னப்பறவை உருக்கொண்டிருந்தான். அதனைப் பிடித்துத் தரும்படி தமயந்தி நளனை வேண்டினாள். இருவரும் ஓராடையை உடுத்து, மற்றதை அப்பறவையின் மேல் நளன் வீச, அஃது அவ்வாடையோடு பறந்து போயிற்று.

### நளன் கூற்று

4. கல்லதர் நடந்துபூங் கமலம் வாட்டிய
மெல்லடி சிவப்புறல் வீழி வாய்மயிற்
கொல்லுமே எனமனம் உருகி, "உந்தையூர்
செல்லுநீள் நெறியிது" என்று செப்பினான்.

### தமயந்தியின் வினா

5. ஆங்கது கேட்டலும், அழுது மாழ்கிநொந்(து),
"ஈங்குநின் அடியனேன் பிழைத்த தியாதுகொல்?
பூங்கழற் குரிசில்! நீ பொறியி லேன்எனை
நீங்கவோ இவ்வுரை நிகழ்த்தினாய்?" என்றாள்.

### நளன் கூறிய விடை

6. "செயிரறு மதிமுகம் பசப்பச் சிந்தைநொந்(து)
அயர்வொடு கண்பனித் தவலங் கொள்ளலை;
மயிலியற் பேதை! நிற் பிரிந்து வாழ்வெனோ?
உயிர்பிரிந் தாலுடல் உய்யுமோ?" என்றான்.

### சூரியாஸ்தமனம்

7. முருகுயிர்த் தளியினம் மூசு பூங்குழல்
கருதரு பெருந்துயர் காண்கி லேனெனாப்

பரிநெடுந் தேரொடும் பரிதி வானவன்
உரவுநீர்க் கருங்கட லொளித்திட் டானரோ.

அப்பால் இருவரும் செல்லும்போது கலியின் சூழ்ச்சியால் வழியில் ஒரு பாழ்மண்டபம் தோன்ற, அதனில் அற்றையிரவைக் கழிப்பதென்று அவர்கள் அங்கே படுத்தனர். அப்பொழுது நளன்,

8. "அனிச்சமென் புதுமலர் அமளி மேயினும்
பனித்திரு மெய்யெனப் பதைத்து வாடுவேன்;
கனிப்படு கிளவிவெம் பொடியிற் கண்படின்
இனித்தமி யேனுயிர் எங்ங னுய்யுமோ?"

என்று வருந்த, தமயந்தி,

9. "வளைகடல் உலகினின் மன்னர் தாள்தொழ
உளையரிப் பூந்தவி சுறையும் எம்பிரான்,
முளரியால் எங்கணும் முற்று மண்டபத்
தெளியர்போல் இருத்திகொல்?" என்று விம்மினள்.

அப்போது நளன், "இனி இவள் துயரத்தைக் கண்டு சகிப்பது என்னலாகாது. இவள் தந்தையின் ஊர் அருகே உள்ளது; இவளைவிட்டு நீங்கினல் இவள் அங்கே அடைவாள். இருவரும் உடுத்திருக்கும் இவ்வாடையைக் கிழித்துக்கொண்டு இவளை விட்டுப் பிரிதலே ஏற்றதாகும்" என்ருலோசித்தான். அங்கே, கலி ஒரு கத்தியாய்க் கிடக்க, அதனை எடுத்து நளன் ஆடையை நடுவில் அரிந்தான். பின்னர், "இவளைத் தனியே எவ்வாறு விட்டுப் பிரிவது?" என்றெண்ணி வருந்தினன்.

**நளனின் செய்கை**

10. எழும்; அகன் றூல்இனி என்கொ லாம்என
அழும்; உயிர் துறந்தென அவசம் மேற்கொளா
விழும்; இவட் காக்கென மெலிந்து தெய்வதம்
தொழும்; இனை யனபல துன்பம் எய்துமால்.

11. செல்லும்; வெந் துயரொடும் செல்லக் காலெழா(து)
ஒல்லையில் மீளும்; வெய் துயிர்க்கும்; ஒண்ணுதல்
கல்லத ரிடைத்தனி யேகின் பேய்க்கணம்
கொல்லுமென் றுருயிர் குழைந்து சாம்புமால்.

இவ்வாறு புலம்பிக்கொண்டே நளன் அவ்விடத்தை விட்டகன்ருன். நள்ளிரவில் தமயந்தி விழித்தெழுந்து நளனைக் காணுமல் திகைத்துப் புலம்பினள்.

12. "நேரலார் போரேறே! நிடதத்தார் கோமானே!
ஆரவரை மார்பா! அளியேன் உயிர்க்குயிரே!
காரிருள்வாய்யான்புலம்பக் கானகத்து விட்டகன்றும்
சாரலையால்! இன்னும் இதுவோநின் தண்ணளியே?

13. "நெஞ்ச மெலிவேன் நினது தடந்தோளும்
கஞ்ச மலர்முகமும் காணுது கண்பனிப்ப,
மஞ்சுதவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோன் அன்றளித்த
விஞ்சை பயின்று விளையாட் டயருதியோ?

14. "ஞாலத் திருள்நடப்ப, நாட்கமலம் வாய்நெகிழ,
வேலைத் திரள்முகட்டில் வெய்யோன் எடுத்தனனுல்
மாலைக் கதிர்வடிவேல் மன்னர் பெருமானே!
காலைக் கடவகடன் கழிக்க வாராயோ?

15. "வாவும் இளமான்காள்! மயில்காள்! மடப்பிடிகாள்!
கூவும் கரிய குயில்காள்!மென் புள்ளினங்காள்!
ஆவி யெனமேவி அகலேம் எனவகன்ற
காவலன் முன்போன வழியெனக்குக் காட்டீரே."

16. என்னு வுருகி யிருகணீ ராவியுகத்
தன்னுத் தழும்பப் புலம்பித் தமியளாய்
மின்னு ரிடைநுடங்கச் செல்வாள்; விறல்வேந்தன்
பொன்னுரடிநோக்கிப்பூங்கொடிபோல் வீழ்ந்தழுவாள்.

## குறிப்புரை

1. குனித்திட - கூத்தாட. பிலிற்றின - தூறின. துணர்த்த-பூங் கொத்துக்களை விட்டன. முளி - உலர்ந்த. சினை - கிளைகள். பைந்தரு - பசிய மரங்கள். முகைத்த - அரும்பின. நளி - நெருங்கிய. கடல் தானை யான் - கடல்போன்ற சேனையையுடைய நளன்; உவமைத்தொகை.

2. விள்ள - சொல்ல. அதர் - வழி. பரல் - கற்கள். குழைந்து - மென்மையாகி. அழல் - நெருப்பு. சுரம் - பாலைநிலம். வள்ளம் - கிண் ணம். மலர் - (இங்குத்) தாமரை. மருதம் - வயல் சூழ்ந்த நிலம்.

3. வீக்கிய - பருக்கச் செய்த. ஆறு அலை கள்வர் - வழி பறிப் போர். அளியர் - அருளுடையவர். உழுவை - புலி. மாற்றம் - பகை.

4. கல் அதர் - கல் வழி; பரற்கற்கள் நிறைந்த வழி. கமலம் வாட்டிய மெல்லடி - தன் மென்மையாலும் கமலத்தைத் தோற்கடித்த மெல்லிய பாதங்கள். வீழி-வீழிப் பழம். மயில் - தமயந்தி. நெறி - வழி.

5. மாழ்கி - வருந்தி. பொறியிலேன் - அறிவிலேன். 'குரிசிலோய் பொறியிலேன்' என்றும் பாடம்.

6. செயிர் - குற்றம். பசப்ப - பசலையேற. அயர்வொடு - சோர்வோடு. கண் பனித்து - கண்ணீர் விட்டு. அவலம் - துன்பம். நின் - உன்னை.

7. முருகு - தேன்; மணம். உயிர்த்து - வெளிப்படுத்தி. மூசு - மொய்த்த. பரிதி வானவன் - சூரியபகவான். உரவு நீர் - உலாவும் நீர். இச்செய்யுள் **தற்குறிப்பேற்றவணி**.

8. அனிச்சம்-ஒருவகை மரம்; அதன் மலர் மிகமென்மையானது என்பர். அமளி - படுக்கை. கனிப்படு கிளவி - பழச்சுவை போலும் சொற்களையுடைய தமயந்தி. பொடியில் - புழுதியில். கண்படில் - தூங்கினால்.

9. கடல்வளை - உலகு. தாள் - பாதம். உளை அரி பூம் தவிசு - பிடரி மயிரையுடைய சிங்கம் சுமந்த ஆசனம். முளரி - முட்செடி.

10. அவசம் மேற்கொளா விழும் - செயலற்று மூர்ச்சித்து விழுவான்; காக்க என.

11. ஒல்லையில் - சடுதியில். ஒண்ணுதல்—அன்மொழித்தொகை. சாம்பும் - வாடுவான்.

12. நேரலார் - பகைவர். ஏறு - ஆண்சிங்கம். ஆரம் - மாலை. சாரலை - சேர்ந்தாயில்லை.

13. கஞ்சமலர் - தாமரைமலர். மஞ்சு - மேகம். வெற்பு - மலை. வச்சிரத்தோன் - இந்திரன். இந்திரன் மலைகளுக்கிருந்த சிறகுகளை அரிந்தான் என்பது ஐதிகம். விஞ்சை - வித்தை. சுயம்வரத்துக்கு முன்பு, தேவர்கள் நளனைத் தமயந்தியிடம் தூதனுப்பியபோது இந்திரன், நளன் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதபடி இருக்க ஒரு மந்திரத்தை உபதேசித்திருந்தான். அதனை உட்கொண்டு தமயந்தி இவ்வாறு கூறினாள்.

14. வாய்நெகிழ - மலர. வெய்யோன் - சூரியன். கடவ - செய்ய வேண்டிய.

15. வாவும் - தாவும். காவலன் - அரசன்.

16. உக - சிந்த. தன்நா = தன்னா. மின் ஆர் இடை - மின்னல் போன்ற இடை.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக :—வள்ளம், உழுவை, அதர், செயிர், உளை, விறல்.

(2) தமயந்தியின் உடலுக்கும் அவள் அங்கங்கட்கும் உவமைகளாகக் கூறப்பட்டவற்றைப் பொறுக்கி யெழுதுக.

### வினக்கள்

(1) கானகத்தின் இயற்கை எவ்வாறு மாறுபட்டிருந்தது ?

(2) தமயந்தியும் நளனும் ஒருவரையொருவர் மிகவும் நேசித்தனர் என்பதை அவர்களின் சொற்களால் ஆராய்க.

(3) சூரியாஸ்தமனமும் சூரியோதயமும் எவ்வாறு வருணிக்கப் பட்டன ?

(4) தற்குறிப்பேற்றவணி—பொருள் கூறுக ; உதாரணம் தருக.

(5) தமயந்தியை விட்டுப் பிரிந்த நளனின் நிலை எவ்வாறு கூறப் பட்டது ?

(6) வச்சிரத்தோன் அன்றளித்த விஞ்சை—விளக்குக.

### இலக்கணம்

(1) அன்மொழித்தொகை என்றால் என்ன? இப்பாடத்தில் வந்துள்ள அன்மொழித்தொகைகளை எடுத்து அவை எவற்றினின்று பிறந்தன எனக் காட்டுக.

(2) இப்பாடத்தில் வந்துள்ள விளிவேற்றுமைச் சொற்களை எடுத்தெழுதி அவ்வேற்றுமை உருபுகளையுங் காட்டுக.

### கட்டுரையாக்கம்

(1) இப்பாடக் கருத்தை ஒரு நாடகமாக்கி வரைக.

(2) தமயந்தியின் குணதிசயங்களை ஆராய்க.

## 3. திருவிளையாடற் புராணம்

இந்நூலின் ஆசிரியர் சோழநாட்டிலுள்ள வேதாரண்யத்தில் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன்னே விளங்கிய பரஞ்சோதி முனிவர் என்ற பெரியார் ஆவர். இவர் துறவியானமையால் முனிவர் என்று அழைக்கப்பட்டார். இவர் சிறந்த சிவ பக்தர். இவர் சங்க நூல்களிலும் பிற்கால நூல்களிலும் நன்கு பழகியிருந்தமை, இவர் பாடல்களால் நன்கு புலப்படும். இவருடைய பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை செறிந்தனவாய் இலகுவில் பொருள் விளங்கும் தன்மையனவாயிருக்கும்.

திருவிளையாடற் புராணம் மதுரையில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளுடைய அருள்விளையாடல்களைக் கூறும். இவற்றைப்பற்றிக் கூறும் வேறு நூல்கள் தமிழிலும் வடமொழியிலும் உண்டு.

இங்கு அமைந்த பாடப்பகுதி, தருமி என்ற பக்தனின் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் செய்த திருவிளையாடலைக் கூறும். வங்கிய சூடாமணி என்ற பாண்டியன், ஒரு சமயம் தன் மனைவியின் கூந்தல், இயற்கை மணம் பெற்றதோ என ஐயமுற்று, அதனை எவரிடமுங் கூறுமல், தன் ஐயத்தைக் குறித்தும் அதனைத் தீர்த்தும் வைத்து ஒரு பாடல் பாடிவரும்புலவருக்காக என்று ஒரு பொற்கிழியைத் தமிழ்ச் சங்கத்தில் தூக்கினன். பல

புலவர்கள் அதனைப் பெற முயன்றும், அவர்களால் கூடவில்லை. அதன்மேல் நடந்த வரலாற்றைப் பாடத்திற் காண்க.

### தருமிக்குப் பொற்கிழி அளித்தல்

#### தருமி

1. அந்த வேளையில், ஆதி சைவரில்
வந்த மாணவன், மணஞ்செய் வேட்கையான்,
முந்தை ஆச்சிமம் முயலும் பெற்றியான்,
தந்தை தாயிலான், தருமி என் றுளான்.

#### அவன் சிவபிரானை வேண்டல்

2. "தந்தை தாய்இலேன், தனியன் ஆகிய
மைந்த னேன், புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செய்யும் செல்லல் தீர்ப்பதற்(கு)
எந்தை யே, இது பதம்" என் றேத்தியே

3. "ஐய, யாவையும் அறிதி யேகொலாம்;
வையை நாடவன் மனக் கருத்துணர்ந்(து)
உய்ய ஓர்கவி உரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டும்" என் றிரந்து செப்பினன்.

#### கடவுள் ஒரு பாடலை நல்குதல்

4. தென்ன வன்குல தெய்வம் ஆகிய
மன்னர், 'கொங்குதேர் வாழ்க்கை' இன்தமிழ்
சொல்ந லம்பெறச் சொல்லி, நல்கினர்;
இன்னல் தீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினன்.

#### தருமி நாவலர் கழகம் நண்ணுதல்

5. பொற்ற ளிர்ச்சடைப் புவன நாயகன்
சொற்றபாடல்கைக் கொண்டு, தொல்நிதி
பெற்றெ டுத்தவன் போன்று, பீடுறக்
கற்ற நாவலர் கழகம் நண்ணினன்.

#### புலவர்கள் உவகைபூத்தல்

6. கல்வி யாளர்தம் கையில் நீட்டினன்;
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளும் தூக்கியே,
'நல்ல நல்ல' என் றுவகை நண்ணினர்.

### அரசன் மகிழ்தல்

7\. அளக்கில் கேள்வியார், அரசன் முன்புபோய்,
விளக்கி அக்கவி விளம்பி னார்கள் ; தன்
உளக்க ருத்துநேர் ஒத்த லால், சிரம்
துளக்கி, மீனவன் மகிழ்ச்சி தூங்கினான்.

### அரசன் பொற்கிழி அளித்தல்

8\. "உணர்ந்த கேள்வியார் இவரொ டொல்லைபோய்ப்
புணர்ந்த ஆயிரம் பொன்னும் இன்தமிழ்
கொணர்ந்த வேதியன் கொள்க இன்"றென
மணந்த தாரினான் மகிழ்ந்து நல்கினான்.

### நக்கீரர் மறுத்தல்

9\. வேந்தன் ஏவலால், விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி அறுக்கும் நம்பியை
நேர்ந்து கீரன், 'நில்' எனவி லக்கினான்.

### தருமியின் நிலை

10\. குற்றம் இக்கவிக் கென்று கூறலும்,
கற்றி லான்நெடுங் காலம் வெம்பசி
உற்ற வன்கலத் துண்ணும் எல்லைகைப்
பற்ற வாடினான் பண்பு பற்றினான்.

11\. உலர்ந்த நெஞ்சுகொண் டொதுங்கி, நாயகன்
நலந்த ரும்கழல் நண்ணி னான்அவன்
மலர்ந்த பாடல்கொண் டறிஞர் வைகிடத்(து)
அலர்ந்த சிந்தைகொண் டடைந்த மைந்தனே.

### தருமி சிவபிரானிடம் முறையிடல்

12\. செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டஅப் பனவன், "என்னை? நீ,
மையுண் கண்ட,இவ் வழுவு பாடலைக்
கையுள் நல்கினாய் கதியி லேற்"கென.

வேறு

13. "வறுமைநோய் பிணிப்பப் பன்னாள்
வழிபடும் அடியேன் நின்பால்
பெறுபொருள் இழந்தேன் என்று
பேசிலேன்; யார்க்கும் மேலாம்
கறைகெழு மிடற்றோய், நின்தன்
கவிக்குற்றம் சில்வாழ் நாள்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னால்,
ஆர்உனை மதிக்க வல்லார்?

சிவபெருமான் புலவர் உருக்கொள்ளல்

14. "எந்தை,இவ் விகழ்ச்சி நின்ன
தல்லதை எனக்கியா" தென்னாச்
சிந்தைநோய் உழந்து சைவச்
சிறுவன்நின் றிரங்க, யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப்
பனுவலும் பயனும் ஆன
சுந்தர விடங்கன் அங்கோர்
புலவனாய்த் தோற்றஞ் செய்தான்.

அவர் புலவர்களை நோக்கி வினாதல்

15. ஆர்அவை குறுகி நேர்நின்
றங்கிருந் தவரை நோக்கி,
"யாரைநம் கவிக்குக் குற்றம்
இயம்பினார்?" என்னா முன்னம்,
கீரன்அஞ் சாது, "நானே
கிளத்தினேன்" என்றான்; நின்ற
சீரணி புலவன், "குற்றம்
யா"தெனத் தேராக் கீரன்.

கீரன் கூற்றும் சிவபிரானின் விடையும்

16. "சொற்குற்றம் இன்று; வேறு
பொருட்குற்றம்" என்றான்; தூய
பொற்குற்ற வேணி அண்ணல்,
"பொருட்குற்றம் என்னை?" என்றான்;

தற்குற்றம் வருவ தோரான்
"புனைமலர்ச் சார்பால் அன்றி,
அற்குற்ற குழற்கு நாற்றம்
இல்லையே" என்றான் ; ஐயன்.

இருவருக்கும் வாதம் நிகழ்தல்

17. "பங்கய முகம்மென் செங்கைப்
பதுமினி குழலோ ?" என்ன,
"அங்கதும் அனைத்தே" என்றான் ;
ஆலவா யுடையான், "தெய்வ
மங்கையர் குழலோ ?" என்ன,
"அன்னது மந்தா ரத்தின்
கொங்கலர் அணிந்து நாறும்
கொள்கையால் செய்கைத்" தென்றான்.

18. "பரவிநீ வழிபட் டேத்தும்
பரஞ்சுடர், திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத்
தமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவின்ஈர்ங் குழலும் அற்றே ?"
என, "அஃதும் அற்றே" என்ன,
வெருவிலான் சலமே முற்றச்
சாதித்தான் விளைவு நோக்கான்.

19. கற்றைவார் சடையான் நெற்றிக்
கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான்
"உம்பரார் பதிபோல் ஆகம்
முற்றும்நீர் கண்ஆ னாலும்
மொழிந்தநும் பாடல் குற்றம்
குற்றமே" என்றான், தன்பால்
ஆகிய குற்றம் தேரான்.

நக்கீரன் வீழ்ச்சி

வேறு

20. தேய்ந்த நாண்மதிக் கண்ணியான் நுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொறுது, பொற்பங் கயத்தடத்துள்

ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன்; அவனைக்
காய்ந்த நாவலன் இம்மெனத் தன்உருக் கரந்தான்.

## குறிப்புரை

(1) வேலை - பொழுது. ஆதி சைவர் - சிவப் பிராமணர்; சிவ பெருமானுக்குக் கோயிற் பூசை செய்யும் உரிமை பூண்டவர். வேட்கையான் - விருப்பமுள்ளவன். முந்தை ஆச்சிரமம் - பிரமசரியம்.

(2) செல்லல் - வறுமைத் துன்பம். பதம் - சமயம்.

(3) வையை நாடு - பாண்டி நாடு. உய்ய - வறுமையினின்று நீங்க.

(4) தென்னவன் - பாண்டியன். இறையனார் பாடிக்கொடுத்த கவி :—

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற் றறிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே—**குறுந்தொகை**

சொல்நலம் - சொற்சுவை. இன்னல் - துன்பம்.

(5) பீடு உற - பெருமை மிக. கழகம் - சங்கம்.

(6) சொல்லின் செல்வம் - சொல்நயம். பொருள் - பொருள்நயம்.

(7) கேள்வியர் - கேள்வியறிவுடையவர். தூங்கினன் - நிறைந்தான்.

(8) வி + புதர் = விசேடமான அறிவைப் பெற்றவர்.

(11) உலர்ந்த - வாடிய. கழல்—ஆகுபெயர். அலர்ந்த - விரிந்த.

(12) உளப்பையுள் - மனத் துன்பம். பனவன் - பிராமணன். மை உண் கண்ட - கரிய கழுத்துடையவனே; நீலகண்ட. வழுவு - குற்றமுள்ள.

(13) கறை - நஞ்சு. கெழு - பொருந்திய. மிடற்றோய் - கழுத்தையுடையவனே.

(14) அல்லதை - அல்லது. ஐ—சாரியை. பந்தம் - கட்டு. வீடு - முக்தி. பனுவல் - நூல். பயன் - அந் நூற்பயன். விடங்கன் - உளியினால் செதுக்கப்படாத (சுயம்பு) மூர்த்தி.

(15) ஆர் - நிறைந்த. அவை - சபை. யாரை - யார். ஐ—சாரியை. தேரா - இலக்கணமறியாத.

(16) பொற்கு உற்ற வேணி - பொன்போன்ற சடை. தன்குற்றம் - தனக்குக் குற்றம். மலர்ச் சார்பு - மலரின் சேர்க்கை. அற்கு உற்ற குழல் - இருள் போன்ற கூந்தல்.

(17) பதுமினி - நால்வகைப் பெண்களுள் முதற் பெண். ஆலவாய் - மதுரைக்கு ஒரு பெயர். மந்தாரம் - தெய்வலோகத்திலுள்ள ஐந்து மரங்களுள் ஒன்று. கொங்கு - வாசனை. அலர் - மலர்.

(18) அரவுநீர்ச் சடையார் - பாம்பையும் கங்கையையும் அணிந்த சடையார்; சிவபெருமான். இரவின் ஈர்ங்குழல் - இரவுபோலக் கரிய தண்ணிய கூந்தல். வெருவிலான் - அச்சமற்றவன். சலம் - வைரம்.

(19) பற்றுவான்-அத் தீயால் பற்றப்படுபவன். உம்பர் பதி - இந்திரன். இந்திரனுக்கு உடலெலாம் கண்கள் நிறைந்திருந்தன என்பது ஐதிகம். ஆகம் - உடல்.

(20) தேய்ந்த நாண் மதி - இளம்பிறை. கண்ணி - தலைமாலை. பாய்ந்த வெம்மை - பாய்ந்ததனல் உண்டாகிய வெப்பம். பொற்பங்கயத் தடம் - பொற்றாமரைக் குளம்; மதுரையிலுள்ளது.

## பயிற்சி

### சொற்கள்

(1) இப்பாடத்தில் நேர்ந்துள்ள சிவபெருமானுக்குரிய பெயர்களை அடைமொழிகளோடு எடுத்தெழுதி, அவற்றிற்குப் பொருளும் கூறுக.

(2) பாண்டியனுக்குரிய வேறு பெயர்கள் யாவை?

(3) 'சொல்' என்ற பொருளையுடைய வேறு சொற்கள் யாவை? இப்பாடல்களிலிருந்து எழுதுக.

### வினுக்கள்

(1) பின் வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் கூறிப் பொருளையும் விளக்குக:—

(i) ஆர் உனை மதிக்க வல்லார்?

(ii) அஃதும் அற்றே.

(2) பாண்டியன் கொண்ட ஐயம் யாது? அஃது எவ்வாறு தீர்ந்தது?

(3) தருமி, தன் பாடல் குற்றமெனக் கேட்டு, சிவபெருமானிடம் கூறியவை யாவை?

(4) புலவராக வந்த பெருமான் என்ன என்ன கேள்விகளால் தம் பாடல் குற்றமற்றது எனக் கூறினர்?

(5) பந்தமும் வீடும் வேதப் பனுவலும் பயனுமான சுந்தர விடங்கன்—விளக்கப் பொருள் கூறுக.

### இலக்கணம்

(1) இவ்வுவமைகள் எவற்றை விளக்க வந்தன?

(i) நெடுங்காலம் வெம்பசியுற்றவன் கலத்துண்ணும் எல்லை கைப்பற்ற வாடினன் பண்பு.

(ii) தொல்நிதி பெற்றெடுத்தவன்.

(2) பங்கய முகம், பங்கயத் தடம்—இவற்றிற்குத் தொடரிலக்கணம் கூறுக.

(3) பிரித்தெழுதுக:—பொற்றளிர், இன்தமிழ், சிற்றறிவு, அற்குற்ற குழல், செந்தீ.

**கட்டுரையாக்கம்**

(1) சிவபெருமான் புலவர் கோலங்கொண்ட காட்சியை வருணிக்க.

(2) நக்கீரருக்கும் சிவபெருமானுக்கும் நடந்த பேச்சை ஒரு சம்பாஷணையாக்கி எழுதுக.

## 4. கண்ணகி

இப்பாடல், பாலபாரதி ச. து. சுப்பிரமணிய யோகியார் என்ற புலவரால் பாடப்பெற்றது. இவர் சேலம் ஜில்லாவிலுள்ள சங்ககிரி என்ற ஊரில் பிறந்து வாழ்ந்து வருபவர். இவருடைய பாடல்களில் சிறந்தவை அகல்யா, மேரி மக்தலேனா, உமர்கயாம் என்பன. 'தமிழ்க்குமரி பாடல்கள்' என்ற பெயருடன் புத்தக உருவமாக இவருடைய பாடல்கள் பிரசுரிக்கப்பெற்றுள்ளன. பழந் தமிழ்ச் செய்யுட்களின் அழகும் பொருட்செறிவும் இவருடைய பாடல்களில் காணப்படுகின்றன. அன்றியும் இவை படிப்பதற்கு மிக எளியனவாகும்.

கண்ணகி சிலப்பதிகாரத்தின் கதாநாயகி. அவள், தன் கணவனை கோவலன் மதுரையில் அநியாயமாக வெட்டப்பட்ட செய்தியை அறிந்து மிகவும் வருந்தினாள். இப்பாடல்கள் அந்நிலையை விளக்கிக் கூறும். இவை வெகுளியுடன் கூடிய அவலத்தைப் புலப்படுத்துகின்றன.

1. கேட்டனள், எழுந்தாள், துன்பக்
   கிளர்ச்சியின் பொருமலோடு
வாள்தடம் கண்ணீர் சோர,
   மார்பகம் புடைத்து விம்ம,
'நாட்டுள வேந்தன் செய்கை
   நன்றிது ! நன்றிது!' என்னாக்
கோட்டிய புருவத் தோடு
   குதித்தனள் ; குமுறுகின்றாள்.

2. திங்களின் முகத்து வெய்ய
   தினகரன் தழல்கள் சேர
கொங்கலர் கூந்தல் காலன்
   கூற்றுறழ் பாசம் ஒப்ப,
கங்குலின் நெருப்புப் போல்வாள்
   கற்பெனும் கனலி நின்றாள் ;
மங்கையாள் சீற்றங் கண்டார் ;
   வானவர் மறுக்கங் கொண்டார்.

3. "என்னுடை உயிரை வாளால்
ஈர்த்தனர்; இனிஎன் செய்கை?
மன்னுடை மதுரை மூதூர்
வாழ்வெலாம் சுடுவேன்!" என்று,
மின்னிடை மெல்லி யாளின்
மேனியின் ரோமம் எல்லாம்
புல்நுனி வாளா னூற்போல்
பொங்கிய புகைந்த மாதோ.

4. பொற்பெலாம் சுமந்த மேனி
புண்ணிய வடிவத் தேவி,
கற்பெலாம் தஞ்சங் கொண்ட
காரிகை இல்லின் தெய்வம்;
வெற்பெலாம் இடிக்கத் தக்க
வெறியளாய் வெகுண்டு நிற்கும்
அற்புதச் சீற்றம் கண்ட
தெய்வமும் அஞ்சிற்(று) அன்றே.

5. தான்செய்த காதல் தன்மை
தனிஎரி யுற்றுப் பொங்கி
வான்செய்து மண்ணுஞ் செய்த
வலிக்கெலாம் வலிமைத் தாகி
கோன்தவச் சிவனின் நெற்றிக்
கண்எனக் குமுறல் பார்த்து,
தேன்செய்த மலரின் தேவன்
திகைத்துவாய் புதைத்து நின்றான்.

6. ஊழியோ! ஊழித் தீயின்
உறுமலோ! உறுமி நிற்கும்
ஆழியோ! ஆழி தூர்க்க
அலைந்திடும் சூறைக் காற்றோ!
சூழிய பேய்கள் சுற்றும்
சூரியோ! என்றென்(று) அஞ்ச,
ஏழினோ(டு) ஏழாம் அண்டம்
யாவையும் கலக்கும் சீற்றம்.

7. நெற்றியில் புடைக்கும்; காலால்
 நிலம்புக மிதிக்கும்; கையால்
பற்றித்தன் மார்பம் பிய்க்கும்;
 படபடத் துடிக்கும் வாயள்;
உற்றுற்று வெறித்துப் பார்க்கும்;
 உன்மத்த மாகி நிற்கும்;
சிற்றிடைச் சிறுமி கற்பின்
 சீற்றத்தின் வலிதான் என்னே!

8. கற்பெனும் கனலின் நேரே
 கடவுளின் வலிஎன் செய்யும்?
நிற்பன திரிந்த; மாறித்
 திரிந்தன திகைத்து நின்ற;
கற்பமும் முடிந்த போலக்
 கதிரவன் குருட னானன்;
அற்புதக் கற்பின் மேல்ஓர்
 அருந்தவப் பெருமை உண்டோ?

9. பிறங்கிய சீற்றச் செந்தீ
 பிளந்தது விண்ணும் மண்ணும்;
உறங்கிய கால வெந்தீ
 சுரிப்புற ஒளிந்து போய;
'மறங்கடை செய்த மன்னன்
 வல்உயிர் மாய்ப்பேன்!' என்னு,
கறங்கென மதுரை மூதூர்
 கலங்குறத் திரிந்தாள் அன்னே.

10. கையில்ஓர் சிலம்பு தாங்கி,
 காலிலே சூறை தாங்கி,
மெய்யிலே நெருப்புத் தாங்கி,
 விழியில்தீக் கணைகள் தாங்கி,
தையலாள் கோபம் தாங்கித்
 தமியளாய்ப் போதல் நோக்கி,
ஐயமில் அறமும் கண்ணீர்
 அலக்கணுற்(று) அழுத மாதோ.

11. பூங்கொடி மின்னில் பாய்ந்து,
புன்னகை இடியில் பூத்து,
தூங்கொளிச் சிலம்பு காலன்
சுடரொளி சுழற்றிக் காட்ட,
பாங்குடை மன்னன் செங்கோல்
பழிமிக வளைந்து போன
தீங்கினைத் தீங்கு செய்யும்
தெய்வமாய்க் கனலாய் நின்றாள்.

### குறிப்புரை

(1) வாள் - வாள்போன்ற. கோட்டிய - வளைத்த.

(2) திங்கள்போன்ற முகத்தில் சூரிய கிரணங்களின் வெப்பம் தோன்ற. வெய்ய - வெப்பமான. தினகரன் - சூரியன். கொங்கு - வாசனை. காலன் - யமன். உறழ் - பொருந்திய. கங்குல் - இருள். மறுக்கம் - அச்சம். இப்பாடலில் வந்த உவமைகளின் பொருத்தங்களை ஆராய்க.

(3) ஈர்த்தனர் - வெட்டினர். மின்இடை - உவமைத்தொகை.

(4) பொற்பு - அழகு. தஞ்சம் - சரணம். காரிகை - பெண்; இல்லின் தெய்வம். 'கற்புக் கடன்பூண்ட இத்தெய்வ மல்லது பொற் புடைத் தெய்வம்யாம் கண்டிலமால்' என்ற சிலப்பதிகார அடிகள் இங்கு நினைக்கத் தகுவன. வெற்பு - மலை. வெறியள் - சினத்தள்.

(5) மலரின் தேவன் - பிரமன்.

(6) ஊழி - யுகாந்தம். ஆழி - கடல். சூரியோ - பேயோ.

(7) புடைக்கும் - புடைப்பாள். உன்மத்தம் - பித்து.

(8) கற்பம் - காலத்தின் பெரும் பகுதி.

(9) மறம் - அதர்மம்; வீரம். கறங்கு - காற்றாடி.

(10) சூறை - வலிய காற்று. அலக்கண் - துன்பம்.

(11) மின்னில், இடியில்—இல்; ஐந்தாம் வேற்றுமை உருபு; ஒப்புப் பொருள்.

### பயிற்சி

#### சொற்கள்

(1) கண்ணகி செய்த செயல்களைக் குறிக்கும் வினையெச்சங்களையும் வினைமுற்றுக்களையும் எடுத்தெழுதுக.

(2) பின்வரும் சொற்கள் எவற்றினின்று பிறந்தவை:—கிளர்ச்சி, கற்பு, சீற்றம், குமுறல்.

### வினுக்கள்

(1) சந்திரன், சூரியன், இயமன், அக்கினி—இக்கடவுளரின் தன்மைகளைக் கண்ணகி எவ்வாறு கொண்டாள்?

(2) கண்ணகியைத் தெய்வமாய்ப் பாடியது எங்ஙனம்?

(3) மலர்த்தேவன் திகைக்கக் காரணம் என்ன?

(4) அவள் சீற்றத்தின் கொடுமை எவ்வாறு கூறப்பட்டது?

(5) 'கற்பின் நேரே கடவுளின் வலி என்செய்யும்?'—இவ்வுண்மை எவ்வாறு உதர்கரிக்கப்பட்டது?

(6) கண்ணகி தாங்கி நின்றவை யாவை?

(7) அவள் நின்ற கோலம் எவ்வாறு கூறப்பட்டது?

### இலக்கணம்

(1) இப்பகுதியில் நேர்ந்துள்ள உவமைகளையும் அவற்றிற்கேற்ற பொருள்களையும் எடுத்தெழுதுக.

### கட்டுரையாக்கம்

இப்பகுதியின் கருத்தை உரைநடையில், 3 பாராக்களில் அமைத்து எழுதுக.

## V. வருணனைப் பகுதி

இப்பகுதியில், ஆறு செய்யுட்கள் தரப்பட்டுள்ளன. தமிழ்க் கவிஞர்கள் தம் கற்பனு சக்தியில் ஒப்புயர்வற்று நிற்பவர்கள். தமிழ் நூல்கள் ஒவ்வொன்றிலும் இவ்வாற்றலின் மேன்மையைப் பரக்கக் காணலாம். இவற்றில் ஓசையினிமையும் சேர்ந்து நிற்கு மிடங்கள், படிப்பவர் மனத்துக்குப் பெரு மகிழ்ச்சியை விளைப்பன வாகும்.

### நாட்டுச் சிறப்பு

1. இச்செய்யுள், சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தி னின்று எடுக்கப்பெற்றது. பெரியபுராணம், அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறுகளைக் கூறும் ஒரு நூல். இது திருத் தொண்டர் புராணம் என்றும் பெயர் பெறும். இச்செய்யுளில் நீர்வளம் செறிந்த சோழநாட்டின் இயற்கை வளம் கூறப்பட் டுள்ளது.

காலெல்லாந் தகட்டுவரால்; கரும்பெல்லாங் கண்பொழிதேன்;
பாலெல்லாங் கதிர்ச்சாலி; பரப்பெல்லாங் குலைக்கமுகு;
சாலெல்லாந் தரளநிரை; தடமெல்லாஞ் செங்கழுநீர்;
மேலெல்லா மகிற்றூபம்; விருந்தெல்லாந் திருந்துமனை.

### மருத நில வனப்பு

2. வயலும், வயல் சூழ்ந்த இடமும் மருதம் எனப்படும். இந்நிலத்தின் தோற்றத்தை மருதநில மன்னன் கொலு வீற்றிருப்பதாக வருணித்திருப்பது படிப்பவர்க்கு மகிழ்ச்சி தருவதாகும். இதனைப் பாடியவர் கம்பர். இச்செய்யுள் கம்ப ராமாயணத்திலிருந்து எடுக்கப்பட்டது.

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம்வீற் றிருக்கு மாதோ.

### விடியற்கால நிலவு

3. இது திருத்தக்கதேவர் பாடிய சீவகசிந்தாமணி என்ற நூலில் கண்டது. சிந்தாமணி, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இப்பாடலில் அமைந்துள்ள உவமை இயற்கையோடு ஒத்திருப்பதை மனக்கண்ணாற் காணலாம்.

காழகச் சேற்றுள் தீம்பால்
கதிர்மணிக் குடத்தி னேந்தி
வீழ்தரச் சொரிவ தேபோல்
விளங்கொளித் திங்கட் புத்தேள்
சூழிருட் டொழுதி மூழ்கத்
தீங்கதிர் சொரிந்து நல்லார்
மாழைகொண் முகத்திற் றேன்றி
வளைகடன் முளைத்த தன்றே.

### சூரியோதயம்

4. இச்செய்யுள் வீர சோழியம் என்ற இலக்கண நூலின் உரையிற் கண்ட மேற்கோள் செய்யுளாகும். இதன் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. சூரியனை ஒரு கூத்தனாக வருணித்திருப்பது படித்து இன்புறத்தக்கது.

இரவிடை மதிய மென்பா
        ஞடிப்போய் மறையு மெல்லே,
விரியிரு ளெழினி நீக்கி
        விசும்பெனு மரங்கு தன்மேற்
கரைகடன் முழவ மார்ப்பக்
        கதிரெனுங் கைகள் வட்டித்(து)
எரிகதி ரென்னுங் கூத்த
        ஞடுவா னெழுந்து போந்தான்.

**மலே வளம்**

5, 6. இப்பாடல்கள் திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய நாடகத் தமிழ் நூலாகிய குற்ருலக் குறவஞ்சி என்னும் நூலி னின்று எடுக்கப்பெற்றவை. திருக்குற்ருலம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மலேயைச் சார்ந்த ஒரு சிவஸ்தலம். இங்குள்ள மலேக்காட்சிகளே ஆசிரியர் மிக்க இனிமையாக இப்பாடல்களில் காண்பிக்கின்ருர். ஒரு குறத்தி தன் மலேயை வருணிக்கும் முறையில் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
    மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பர்;
    கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளேப்பார்;
தேனருவித் திரையெழிப்பி வானின்வழி யொழுகும்;
    செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்;
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
    குற்ருலத் திரிகூட மலேயெங்கள் மலேயே.

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
    முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலேக்கொண்டோடும்;
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
    கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினே யிடிப்போம்;
செழுங்குரங்கு தேமாவின் பழங்களேப்பந் தடிக்கும்;
    தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்;
வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்
    வளம்பெருகும் திரிகூட மலேயெங்கள் மலேயே.

**குறிப்புரை**

(1) கால் - வாய்க்கால். தகட்டு வரால் - ஒருவகை மீன். கண் பொழிதேன் - கணுக்களிலிருந்து பொழியும் தேனே உடையன. பால்-

பக்கம். சாலி - ஒருவகை நெல். தரளம் - முத்து. நிரை - கூட்டம். தடம் - குளம். அகில் - தூபம். திருந்தும் - திருத்தமாய் அமையும். மனை - வீடு. இப்பாடலில் நாட்டின் வளமும் மக்களின் வாழ்க்கை நிலையும் கூறப்பட்டன.

(2) தண்டலை - சோலையில். விளக்கம் - விளக்கு. முழவின் - மத்தளம் போல. ஏங்க - ஒலிக்க. எழினி - திரைச்சீலை. தேம்பிழி - இனிய தேன். மகரயாழ் - மகரவீணை. மருதம் - மருதமென்னும் மன்னன். வீற்றிருத்தல் - கவலையின்றி இருத்தல்.

அரசன் கொலுவிருப்பதுபோல் வருணிக்கப்பட்டுள்ளது.

(3) பாலை மணிக் குடத்தினேந்திக் காழகச் சேற்றுள் வீழ்தரச் சொரிவதேபோல். மணிக்குடம் - பளிங்காற் செய்த குடம். காழகம் - கருமை. வீழ்தர - விழும்படி. திங்களாகிய புத்தேள். புத்தேள் - கடவுள். கதிரை இருள் தொழுதி மூழ்கச் சொரிந்து என மாற்றுக. தொழுதி - கூட்டத்தில். திங்களுக்குப் பாற்குடமும், இருளுக்குக் கருஞ்சேறும் உவமை. நல்லார் - பெண்களின். மாழை - பொன். மாழை கொள் முகம் - பசலைகொண்ட முகத்தைப்போல. வளைகடலில் முளைத்தது. அன்று, ஏ, அசைகள்.

விடியற்காலத்தெழுந்த நிலவு இருளைக் கெடுத்தலாற்றுமையால் இங்ஙனம் கூறினர்.

(4) இரவிடை - இரவில். எல்லை - பொழுது. எழினி - திரைச்சீலை. விசும்பு - ஆகாயம். அரங்கு - மேடை. கடல் முழவம் ஆர்ப்ப - கடலாகிய மத்தளம் முழங்க.

சூரியனைக் கூத்தனாக உருவகித்ததுபோலப் பிறவும் அமைந்திருப்பதைக் காண்க.

(5) மந்தி - பெண் குரங்கு. வான் - பெரிய. காயசித்தி - சித்துக்களுள் ஒன்று. பரிக்காலும் - குதிரையின் காலும். கூனல் - வளைந்த. வேணி - சடை.

(6) கழங்கு - ஒருவகைக் காய். அருவி சிற்றிலைக் கொண்டோடும். குறும்பலவீசர் - திருக்குற்றாலத்தில் குறும்பலா மரத்தடியில் எழுந்தருளிய ஈசர்.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக :—தரளம், தூபம், தண்டலை, குவளை, எழினி, காழகம், புத்தேள், தொழுதி, மாழை, அரங்கு, கவன சித்தர், காயசித்தி, சிற்றில்.

(2) பின்வரும் சொற்களுக்கு ஏற்ற அடைமொழிகளைக் கூட்டி எழுதுக :—பால், கடல், கதிர்.

### வினாக்கள்

(1) நாட்டில் காணப்பட்டவை யாவை? அவற்றில் நிறைந்திருந்தவை யாவை?

(2) அகில் தூபம் மக்களின் எத்தகைய வாழ்க்கையைக் காட்டும்?

(3) மருத மன்னன் கொலுவில் காணப்பட்டவை யாவை? அவை அரச சபையில் எவற்றை நினைப்பூட்டுகின்றன?

(4) சந்திரனுக்கும் சேற்றுக்கும் உவமை யாவை?

(5) மாழைகொண் முகத்தில் என்று சந்திரன் தோற்றத்தைக் கூறியது ஏன்?

(6) வீரசோழியப் பாடலுக்கும் கம்பர் பாடலுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

(7) கூத்தன் எழும்போது நிகழ்வன யாவை? சூரியன் எழும் போது அவை எவ்வாறு எழுந்தன?

(8) மலையில் வாழும் குரங்குகளின் செயல்கள் யாவை?

(9) மலையின் உயரம் எவ்வாறு அறிவிக்கப்பட்டது?

### இலக்கணம்

(1) இப்பாடல்களில் உருவக அணிகள் எங்கெங்குக் காணப்படுகின்றன.

(2) 5, 6 பாடல்களில் ஓசையினிமை எவ்வாறு அமைந்திருக்கிறது?

(3) இப்பாடல்களிற் கண்ட உவம உருபுகளைப் பொறுக்கி எழுதுக.

### கட்டுரையாக்கம்

(1) சூரியோதயத்தை ஓர் இளவரசன் உலாப் புறப்பட்டதுபோல் வருணிக்க.

(2) சூரியனின் பெருமை சந்திரனிடம் இல்லையென்று அதனைப் பழிப்பதுபோல் ஒரு கட்டுரை வரைக.

(3) கொஞ்சும் கெஞ்சும் என்பனபோல் ஓசை ஒத்துவர வேறு பத்துச் சொற்கள் எழுதுக.

## VI. பல்சுவைப் பாடல்கள்

இப் பகுதியில் அமைந்துள்ள பாடல்கள் பல பொருள்கள் பற்றியன; பல சுவைகளுடையன.

### 1. விநாயகர் வணக்கம்

1. கவிஞர் சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய நாஞ்சில்நாட்டு மருமக்கள் மான்மியம் என்ற பிரகசன நூலின்

கடவுள் வாழ்த்தாக இச்செய்யுள் அமைந்துள்ளது. நிந்தா ஸ்துதியாக நகைச் சுவை ததும்ப இப்பாடல் அமைந்திருத்தலைக் காண்க.

எம்பெரு மானே! இணையடி பரவும்
அன்பினர் வேண்டிடும் அவையெலாம் அளிக்க
யானை நீள்கரம் ஏந்திய கடவுளே!
உலகெலாம் போற்றும் ஒருவனே! உனது
தந்தையோ,
என்றும் கையில் தலையோ டேந்தி
இரந்து திரிவான்; இருப்பிட மில்லான்;
அம்பலந் தோறும் ஆடி அலைவான்;
அமிழ்தென நஞ்சையும் அள்ளி யுண்பான்;
பித்த னாகிப் பேயொடு குனிப்பான்;
நாடிய பொருளெலாம் நாசஞ் செய்வான்.
மாமனோ,
பூமக ளோடும் புவிமக ளோடும்
மதித்திட அரிய வளமெலாம் ஒருங்கு
வைகுந் திவ்விய வைகுந்தத்தில்
ஆயிரம் பணமுடி அரவணை மீதே
அரிதுயி லமர்ந்திவ் வகில மெல்லாம்
ஆளும் பெரிய அண்ணலே யாயினும்,
கபட நாடகன்; கையிற் சக்கரம்
இருந்தும், எவர்க்கும் ஈயாக் கள்வன்
ஆதலின், நீயும்
தந்தை வீடெனத் தங்கிட மின்றி
மாமன் வீடென மதிப்பிட மின்றிச்
சந்தியும் தெருவும் தண்ணீர்க் கரையும்
மரத்தி னடியும் வாழிட மாக
இருந்தனை; உன்போல் இருவழி கட்கும்
இடைவழித் தங்கி இடர்ப்படும் எங்கள்
வருத்த மெல்லாம் அறிந்திட வல்லவர்
அறிந்து முற்றும் அகற்றிடும் நல்லவர்,
நடுநிலை கண்ட நாயகர் வேறிங்(கு)
ஒருவரும் இல்லை; உன் திருவடி பணிந்து
மருமக் கள்வழி மான்மியம் பாடத்

தொடங்கினன் ; வந்து துணைநின் றிந்நூல்
இனிது முடிய இதயம்
கனிவு செய்தெனைக் காத்தருள் வாயே.

—சி. தேசிக விநாயகம் பிள்ளை.

## 2

### அட்டாவதானி-ஆதிசரவணப் பெருமாட் கவிராயர் காரை இலக்குமணபிள்ளைக்கு விடுத்த

### சீட்டுக் கவி

2. இதனை எழுதியவர் அட்டாவதானி-ஆதிசரவணப் பெருமாள் கவிராயர் என்பவர். இது காரை இலக்குமணபிள்ளை என்ற பிரபுவுக்கு எழுதப்பெற்றது. இதனில் அட்டாவதானத்தைப் பற்றிய குறிப்புக்களும் புலவர் பெருமிதத்துடன் தம் பெருமையைச் சொல்லிக்கொள்ளும் பகுதியும் படித்து இன்புறத்தக்கன.

மரபுதவி ராதவன் சோமசுந் தரகுரு
மலர்ப்பதம் பரவு தாசன்
வண்டமிழ்ச் சரவணப் பெருமாட் கவிச்சக்ர
வர்த்திதேர்ந் தெழுது நிருபம் ;
வளர்காரை யம்பதியின் மேவுதுரை லட்சுமண
மந்த்ரியெதிர் கொண்டு காண்க ;
வாணருக் குபகாரி நீயாகை யாலெமது
வல்லமையு மகிமையுங் கேள் ;
கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்ல, வாய்
கனவேலு மயிலு மென்னக்
காலிலொரு கவிதையுயர் தோளிலொரு கவிதையிரு
கையிலொரு கவிதை யெழுதக்
கணக்கொரு புறஞ்சொல விலக்கொரு புறஞ்சொலக்
காணுத திரைமறைவிலே
கனசூது சதுரங்க மொருகுதிரை யடிசொலக்
கன்னெல்லு முதுகி லெண்ணப்
பரிவுபெற் றப்புதுச் சேரியிற் சென் றினிய
பண்பரிற் சினைய வாத்தி
பண்புள குமரபா ரதிமதுர கவிவீர
பத்ரகவி கொண்டாடவே,

பாக்யனு னந்தநா தன்சபையி லுஞ்செய்து
பல்லக்கு வரிசை பெற்றேன் ;
பாரகா வியங்களுந் தெரிவே னளப்பரிய
பஞ்சலட் சணமு மறிவேன் ;
அரசரி லுயர்ந்ததுரை யாரெனிற் சேதுபதி
யாகுமவன் மணிவாயி லில்
அகத்திய முனிக்குமதி கங்கற்ற பேர்களா
யாயிரங் கவிவாண ருண்
டவரிலொரு சிறுவன்யான் பாடவறி யேனென்
றகற்றிவிட் டார்களென்னை
யாதலாற் பூமியிற் சஞ்சரித் தேனின்
அகந்தனின் மகிழ்ந்தருள் வையே.

## 3. ஆற்றுப்படை

### வாண பூபதியின் பெருமை

3. ஒரு பாணன் மற்றொரு பாணனை வாணபூபதி என்ற ஒரு வள்ளலிடம் அனுப்பிப் பரிசு பெறுமாறு செலுத்துவது இதன் இலக்கணம். இஃது ஒரு நாடகம்போல் அமைந்துள்ளது. இதனில் கடைசியடிகள் சிலேடையில் அமைந்துள்ளன.

“தேரு ளைப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்ன ! நின்
தேய மேதுனது நாம மேது புகல்”
“செங்கை யாழ்தடவு பாண ! கேள் :
வாரு மொத்தகுடி நீரு நானுமக
தேச ஞறைநகர் காவலன்
வாண பூபதிம கிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான் ;
நீரு மிப்பரிசு பெற்று மீளவர
லாகு மேகுமவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்குமொரு வேம்பு நிற்குமுயர்
பனையு நிற்குமத னருகிலே
அரசு நிற்குமர சைச்சு மந்தசில
வத்தி நிற்குமடை யாளமே.

## 4

### பாதி வெண்பாவில் திருமாலவதாரம் பத்தும் வரப் பாடியது

காளமேகர் நினைத்தவுடன் பாடக்கூடிய ஆசுகவியாவார். அவர் எதனையும் பாடலில் அமைத்துப்பாடக்கூடியர் என்பதற்கு இப்பாடல் சான்று கூறும். இவருடைய பாடல்கள் மிக இனியவை.

மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சென்ம மெடுக்கவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோலா மாவா வாய்.

—காளமேகர்

### 5. சாளுவ நாயக்கர் கொடுத்த படுக்கையை இகழ்ந்து பாடியது

தத்துவப் பிரகாசர் கிருஷ்ணதேவராய மன்னன் காலத் திருந்த ஒரு புலவர். ஒருமுறை அவர் மன்னனைக் காணச் சென்ற போது அவன் கொடுத்த விடுதியையும் படுக்கையையுங் குறித்து இப்பாடலைப் பாடி அவனிடம் அனுப்பினர்.

மூட்டைக் கலம்புழுதி மூக்காலும் பாழான
வீட்டை விடுதியாய் விட்டாயே—போட்ட
தடுக்கெல்லாம் பீற றலையணையோ வைக்கோல்
படுக்கலா மோசொல்லப் பா.

—தத்துவப் பிரகாசர்.

6. அந்தகக் கவி வீரராகவ முதலியார் பிறவிக்குருடராயி னும் பல பெரிய நூல்களைப்பாடும் ஆற்றல் பெற்றிருந்தார். அவர் ஒருமுறை ஈழம் சென்று அங்கு ஆண்டுவந்த மன்னனைப் பாடி யானைப்பரிசு பெற்று வந்தார். அதைக் குறித்துத் தம் மனைவி யாரிடம் அவர் கூற, அவ்விருவருக்கும் நடந்த பேச்சு இப்பாட் டாக அமைந்துள்ளது. சொல்லின் பொருளை வேறுபட உணர்ந்த தால் இப்பேச்சு நீண்டது.

இம்பர்வா னெல்லையிரா மனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணநீ யென்றாள் பாணி
வம்பதாங் களப மென்றேன் பூசுமென்றாள்
மாதங்க மென்றேன்யாம் வாழ்ந்தே மென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் றின்னு மென்றாள்
பகடென்றே னுழுமென்றாள் பழனந் தன்னை
கம்பமா வென்றேனற் களியா மென்றாள்
கைம்மாவென் றேன்சும்மா கலங்கி னாளே.

—அந்தகக் கவி வீரராகவ முதலியார்

7. பட்டினத்தார் ஒரு பெருந் துறவி. அவர் கடவுள்மீது பாடிய பாடல்கள் மிகப்பல. இப்பாடல் அவர் தம் பிழைகளைப் பொறுக்குமாறு கடவுளைப் பிரார்த்திப்பதாக அமைந்துள்ளது.

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்! கச்சி யேகம்பனே.

—பட்டினத்தார்.

## குறிப்புரை

(1) தந்தை-சிவபெருமான். குனிப்பான்-கூத்தாடுவான். மாமன்-திருமால். பூமகள் - இலக்குமி. புவிமகள் - பூமாதேவி. பணமுடி - படங்களை முடியாகக்கொண்ட. அரவணை - பாம்பாகிய படுக்கை. அகிலம்-உலகம். சக்கரம் - சக்கராயுதம்; திருவனந்தபுரத்தில் வழங்கும் ஒரு நாணயம்.

(2) மரபு - முறைமை. வாணர் - கவிவாணர்.

அஷ்டாவதானம்:—(1) கருணீகர் நால்வருக்கு நாற்கவிதை சொல்லல். (2) வாய் வேலும் மயிலும் என்னல். (3) காலில் ஒரு கவிதை, தோளில் ஒரு கவிதை, கையிலொரு கவிதை யெழுதல். (4) கணக்கொடு புறம் சொல்லல். (5) விலக்கொடு புறம் சொல்லல். (6) திரை மறைவிலே சதுரங்கமாடல். (7) முதுகில் கல் எண்ணல். (8) நெல் எண்ணல்.

ஆநந்தன் - ஆநந்தரங்கம் பிள்ளை. பஞ்ச லட்சணம்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இலக்கணங்கள்.

(3) உளை - பிடரிமயிர். வாரணத் தொகுதி - யானைக் கூட்டம். திறைகள் - கப்பங்கள். புகல் - என்றது வரையில் வந்த ஏழைப் பாணனின் வினா. பின்வருவன பரிசு பெற்றுவரும் வாணன் விடை.

மகதேசன் - மகத நாட்டுத் தலைவன். மகத நாடு - தமிழகத்திலுள்ள நடுநாடு. ஆறை - ஆற்றூர். முன்றில் - இல்லின்முன்; மருஉ. நித்திலம் - முத்து. ஆர் - ஆத்திமரம். வேம்பு - வேப்ப மரம். பனை - பனை மரம். ஆத்திப்பூமாலை சோழனுக்கும், வேப்பம்பூமாலை பாண்டியனுக்கும், பனந்தோட்டுமாலை சேரனுக்கும் உரியவை. இம் மூவேந்தரும் அவன் வாயிலில் நிற்பர் என்பதும் பொருள். சிலேடையணி. அரசு - அரசமரம்; அரசர்கள் சிலேடை. அத்தி - அத்திமரம்; யானைகள். சிலேடை.

(4) மச்சம் - மீன். கூர்மம் - ஆமை. கோலா - வராகா. சிங்கா - நரசிங்கமே. வாமா - வாமனனே. ராமா - பரசுராமா. ராமா - தசரத ராமா. ராமா - பலராமா. கோலா - கோபாலா (கிருஷ்ணன்). மா - குதிரை; கல்கி.

(5) விடுதி - வீணுக. பீறல் - கிழிசல்.

(6) யானைக்குரிய பெயர்கள்:—களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா. இவற்றுள் கைம்மா நீங்கலாகப் பிறவற்றிற்குப் பாணி

கொண்ட பொருள்கள் : சந்தனம், பொன், கரும்பு, காளை, கம்பென்னும் தானியத்தின் மா என்பன.

(7) அஞ்செழுத்து - பஞ்சாட்சரம். கச்சி - காஞ்சீபுரம். ஏகம்பன்- ஏகாம்பரேசுவரர்.

### பயிற்சி

#### சொற்கள்

(1) பொருள் கூறுக :—அம்பலம், பணமுடி, நடுநிலை, வாணர், உளை, முன்றில், களபம்.

(2) திரு, பெருமான், அருள்—இவை கடவுளரைப் பற்றிப் பேசும் போது சேர்க்கவேண்டிய சொற்கள். இவற்றை உன் வாக்கியங்களில் சேர்த்து எழுது.

(3) இருபொருள்கள் படும்படி உன் வாக்கியங்களில் அமைத்து எழுது. அவை, பணம், ஈ, அரசு, களபம், மாதங்கம், வேழம், பகடு.

#### வினாக்கள்

(1) சிவபிரானை நிந்தாஸ்துதியாகக் கூறியது எங்ஙனம் ?

(2) திருமாலின் செயல்கள் எவ்வாறு கூறப்பட்டன ?

(3) விநாயகர் எழுந்தருளும் இடங்கள் யாவை ?

(4) சீட்டுக் கவி யாருக்கு எழுதப்பட்டது ?

(5) அஷ்டாவதானங்கள் யாவை ?

(6) கவிராயர் யார் யாரிடம் பெருமை பெற்றார் ?

(7) சேதுபதியின் வாயிற்பெருமை எவ்வாறு கூறப்பட்டது ?

(8) தசாவதாரங்கள் யாவை ?

(9) தத்துவப்பிரகாசர் பெற்ற வீடும் படுக்கையும் எவ்வாறிருந்தன?

(10) பாணனுக்கும் மனைவிக்கும் நடந்த சம்பாஷணை யாது ?

#### இலக்கணம்

(1) சிலேடை என்றால் என்ன ? உதாரணங்கள் கொடுக்க.

(2) உன் பாடல்களுள் வெண்பாக்கள் யாவை ?

(3) தொடரிலக்கணம் கூறுக :—நீள்கரம், புவிமகள், அரிதுயில், நடுநிலை, சேதுபதி, அகத்தியமுனி, மாடமாளிகை, மெச்சு புகழ்.

#### கட்டுரையாக்கம்

(1) நிந்தாஸ்துதியாக வேறேதேனுமொரு கடவுளைப்பற்றிக்கூறுக.

(2) செல்வம் பெற்ற பாணனுக்கும் வறிய பாணனுக்கும் நடந்த சம்பாஷணையை நாடகரூபமாக எழுதுக.

(3) புத்தியாலாதவன், எழுந்திருக்கிறேன், நானூறு—இவற்றைச் சிலேடையாக அமைத்துச் சொல்லுக.

# உரைநடைப் பகுதி

## 1. சிலப்பதிகாரம்

### உரைபெறு கட்டுரை

சிலப்பதிகாரம் என்பது தமிழ் மொழியிலுள்ள பழைய காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்று; இந்நூல், காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்துவந்த கோவலன், கண்ணகி என்ற இருவரின் சரித்திரத்தை விரித்துக் கூறும். இதனை இயற்றியவர் சேர முனிவரான இளங்கோவடிகள் என்பவர். இவருடைய காலம் இற்றைக்கு ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முன்பாகும்.

இந்நூலில், ஆசிரியர் இயற்றிய சில உரைநடைப் பகுதிகளும் காணப்படுகின்றன. ஆகவே, இதற்கு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்ற ஒரு பெயரும் உண்டு. மிகப் பழைய காலத்தில் தமிழில் வழங்கிவந்த உரைநடைக்கு இப் பகுதிகள் உதாரணங்களாகும். அவற்றுளொன்றாகிய 'உரைபெறு கட்டுரை' என்னும் பகுதியே இங்குப் பாடமாயமைந்துள்ளது.

கோவலன் மதுரையில் அநியாயமாய்க் கொல்லப்பட்டான். அதனால், கண்ணகி கடுஞ்சினங்கொண்டு அப்பாண்டியனையும் அவன் நகரையும் அழித்துச் சுவர்க்கம் புகுந்தாள். சேரமன்னனை செங்குட்டுவன் தன் நகரில் கண்ணகிக்கு ஒரு கோயில் எழுப்பினான். அதன் பின் நடந்த செய்தி இக்கட்டுரையிற் கூறப்பட்டுள்ளது.

1. அன்றுதொட்டுப் பாண்டியநாடு மழைவறங்கூர்ந்து, வறுமையெய்தி, வெப்பு நோயுங் குருவுந் தொடர, கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்ல ராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய, நாடு மலிய, மழை பெய்து நோயுந் துன்பமும் நீங்கியது.

2. அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழிலென்றும் மாறாதாயிற்று.

3. அது கேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித் திங்கள் அகவையின் ஆங்கோர் பாடிவிழாக்கோள் பன்

முறை யெடுப்ப மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.

4. அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழி யகத்து எத்திறத்தானும் வரந்தரும் இவள் ஓர் பத்தினிக் கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே.

## குறிப்புரை

உரைபெறு கட்டுரை - உரைத்துப் போகின்ற கட்டுரை.

(1) அன்று என்றது, 'கோவலன் கொலையுண்ண, பாண்டியன் உயிரிழந்து, மதுரை நகரும் எரிந்த' அன்று என்றவாறு. மழைவறம் கூர்ந்து - மழை வறத்தல் மிகுந்து. வெப்பு - தொழுநோய்; வெதுப்பு என்றும் கூறலாம். நங்கை - கண்ணகி. பொற்கொல்லர் - தட்டார். களவேள்வி - போர்க்களத்தில் செய்யப்படுவதான வேள்வி. விழவு - திருவிழா. நோயும் துன்பமும் - முற்கூறிய வறுமையும் வெப்பு நோயும்.

(2) கொங்கிளங்கோசர் - கொங்குமண்டிலத்து இளங்கோவாகிய கோசர்; (இதற்கு, குறும்பு செலுத்துவார் சில வீரர் என்பர் அரும்பத வுரை ஆசிரியர்) மழை தொழில் - மழை பெய்தல் தொழில். மாறாதா யிற்று - பெய்யும் நாள் வழுவாதாயிற்று; பெய்யும் நாள் - திங்கள் மும் மாரி; பருவகாலென்றும் கூறலாம்.

(3) நாட்பலி பீடிகைக் கோட்டம் - நாள்தோறும் பலிகொள்ளு தலையுடைய பலிபீடத்தையுடைய கோயில். முந்து உறுத்து - முதலிற் செய்து; முதலில் பீடத்தையும் பின்பு கோயிலையும் செய்தமைத்து. அரந்தை - துக்கங்களை; வெப்பும் நோயுமாயினவற்றை. என - என்று துணிந்து. ஆடி திங்கள் அகவையின்-ஆடி மாதத்தில். விழா-ஆண்டுவிழா. பிழையா விளையுள் - குன்றா விளைவு.

(4) கோழி - உறையூர் ஒரு காலத்தில் அவ்விடத்தில் கோழி யொன்று யானையோடு போரிட்டு அதனை வென்றதால் அவ்வூர் அப் பெயர் பெற்றது. எத்திறத்தானும் - வேண்டினோர் வேண்டியவா றெல் லாம். நித்தல் விழாவணி - நித்தமாகிய அணிவிழா.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக :—

வறங்கூர்தல். வெப்பு நோய். குரு. களவேள்வி. விழைவு. சாந்தி. நாட்பலி. பீடிகை. கோட்டம். முந்துறுத்து. அரந்தை. அகவை. பாடி விழா. வீற்றிரு. விளையுள். நித்தல் விழா.

(2) இப்பகுதியிலுள்ள வடமொழிச் சொற்களை எடுத்தெழுதுக.

(3) பின்வரும் சொற்களை இக்காலத்தவர் எவ்வாறு வழங்குகின்றனர்?

(i) வறங்கூர்ந்து. (ii) பொற்கொல்லர். (iii) விழவு.

### வினாக்கள்

(1) சிலப்பதிகாரத்துக்குரிய மற்றொரு பெயர் யாது? அதன் பொருள் என்ன?

(2) பாண்டியனாட்டுக்கு உண்டான துன்பங்கள் யாவை? அவை ஏன் உண்டாயின?

(3) செழியன் அவற்றை எவ்வாறு நீக்கினான்?

(4) இவ்வரலாறு நிகழ்ந்த காலத்தில் தமிழகத்திலும் புறத்திலும் ஆண்ட மன்னர்கள் யாவர்?

(5) அக்காலத்துக் கோயில்களில் நடந்துவந்த பூசை முறைகளும் விழாக்களும் யாவை?

(6) கோழி என்ற பெயர் எவ்வூருக்கு உரியது? ஏன்?

### இலக்கணம்

(1) பிரித்தெழுதுக:—

பாண்டியனாடு, கொங்கிளங்கோசர், நாட்டகத்து, நாட்பலி, முந்துறுத்து, விழாவணி.

(2) நோயுந் துன்பமும் நீங்கியது—இவ்வாக்கியத்தில் பிழையுண்டா?

(3) விளையுள், பிழையா, ஆயிற்று—இவற்றிற்குப் பகுபத விலக்கணங் கூறுக.

(4) முதல் பாராவிலுள்ள வாக்கியத்தைச் சிதைத்து எளிய வாக்கியங்களாக ஆக்குக.

### கட்டுரையாக்கம்

கண்ணகி பத்தினிக் கடவுளான வரலாற்றை அறிந்து எழுதுக.

## 2. கல்வெட்டு

### திருப்பதியம்

இச்சாஸனம் தஞ்சையிலுள்ள, ஸ்ரீ இராஜராஜேசுவரர் கோயிலின் வடக்குப் பிராகாரத்தின் வெளிப்புறத்தில் காணப்படுவதாகும். ஸ்ரீ இராஜராஜ சோழர் ஆட்சியின் 29-வது ஆண்டில், அக்கோயிலில் திருப்பதிகம் ஓதுவதற்காக நாற்பத்தெண்மருக்குத் தினம் இவ்வளவு நெல் கொடுக்கப்படும் என்பதை இச்சாஸனம் குறிக்கும். இராஜராஜ சோழர் காலத்துக்கு

முன்னேயே, கோயில்களில் தேவாரம் ஓதும் வழக்கம் இருந்து வந்தது என்பதை இச்சாஸனம் தெரிவிக்கின்றது. இதன் காலம் ஏறக்குறைய கி. பி. 1014. அக்காலத்துத் தமிழ் உரை நடை எவ்வாறிருந்த தென்பதை இது காட்டும். அன்றியும், இராஜ ராஜரின் வெற்றிகளை அறிய இத்தகைய சாஸனங்கள் பேருதவியா யிருக்கின்றன.

ஸ்வஸ்திஸ்ரீ. திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொள் காந்தளூர்ச் சாலைக்கல மறுத்து, வேங்கை நாடுங் கங்கபாடியுந் தடிகை பாடியும் நுளம்பபாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்ட பாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னி ராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளருழியு ளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள்கோ ராஜ கேஸரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ் வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெணமரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும் இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின் மருக்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜ கேஸரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்கா லால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தேய் பெறவும். இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனார்க்குந் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந் தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யரா யிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந் நெல்லுப் பெறவும். அவ்வவர்க்கு அடுத்த முறை கடவா ரின்று ஒழியில் அந்த நியாயத்தாரே யோக்யராயிருப் பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும். ஆக இப்படி உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருவாய் மொழிந் தருளினபடி கல்லில் வெட்டியது.

## குறிப்புரை

ஸ்வஸ்திஸ்ரீ: மங்களமொழி. திருமகள் - லக்ஷ்மி. நிலச்செல்வி - பூதேவி.

கலம் - கப்பல்கள். அறுத்தருளி - தொலேத்து. வேங்கை நாடு... பன்னிராயிரமும்; சோழன் வென்ற நாடுகள்.

முரட்டெழில் - முரட்டொழில்; Warlike. தண்டு - சேனே. தொழுதக - தொழுதற்குத் தக்கபடி. ஊழி - நெடுங்காலம். செழியன் - பாண்டியர். ராஜகேசரி - சோழர்க்குரிய ஒரு பட்டப் பெயர். ராஜ கேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்கள் சோழர்களின் பரம்பரையில் மாறி மாறி வரும். ஸ்ரீ ராஜ ராஜீசவரம் - கோயிலின் பெயர். திருப் பதியம் - திருப்பதிகம்; தேவாரம். குடுத்த - கொடுத்த. பிடாரர் - பாடகர். உடுக்கை, கொட்டி, மத்தளம்: வாத்தியங்களின் பெயர்கள். நிசதம் - தினம். முக்குறுணி - மூன்று மரக்கால். நிவந்தம் - கூலி. இராஜகேஸரி, ஆடவல்லான் - இவை மரக்கால்களின் பெயர்கள். உடை யார் - அரசர். உள்ளூர்ப்பண்டாரம் - நகர கஜானு. அனுதேசம் போனுர் - ஊர்விட்டுப் போனுர். தலேமாறு - பதிலாக. அடுத்த முறை கடவார் - அடுத்த உறவினர். ஆளிட்டு - தெரிந்து. அந்த நியாயத்தார் - அந்நிலேயில் வேலே பார்ப்பவர்கள்.

## பயிற்சி

### சொற்கள்

(1) இப்பொழுது வழக்கிலில்லாத சொற்கள் இப்பாடத்தில் வந் துள்ளவை யாவை?

(2) பின்வருவனவற்றை நேர்முறையில் எழுதுக:—முரட்டெழில், திருப்பதியம். குடுத்த. பண்டாரத்தேய்.

### விஞக்கள்

(1) இராஜராஜ சோழரின் வெற்றிகள் யாவை?

(2) இச்சாஸனம் எப்பொழுது எழுந்தது?

(3) இவ்வுத்திரவு யாரால் இடப்பட்டது?

(4) இப்பகுதியில் வந்த வாத்தியப் பெயர்கள் யாவை?

(5) திருப்பதிகம் ஓதுவார் தொழில் எவ்வாறு நியமிக்கப்பெற்றது?

(6) இச்சாஸனத்தால் வெளியாகும் உண்மை யாது?

### இலக்கணம்

(1) பின்வரும் பகுதியிலுள்ள சொற்களேப் பிரித்தெழுதுக:— தண்டாற்கொண்ட தன்னெழில் வளரூழியுளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும்.

(2) இப்பகுதியில் எத்தனே வாக்கியங்கள் உள்ளன? அவற்றின் எழுவாய் பயனிலேகளே எடுத்தெழுதுக.

### கட்டுரையாக்கம்

கல்வெட்டுக்களின் தன்மைகளும், அவற்றின் பயனும் என்பது பற்றி ஒரு பாரா எழுதுக.

# 4. சத்திய வேதம்

## புதிய ஏற்பாடு

கர்த்தரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவானவர் அருளிச் செய்த புதிய ஏற்பாடு என்ற வேதநூலிலிருந்து இப் பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இது மூல பாஷையாகிய கிரேக்கு பாஷையிலிருந்து ஏறக்குறைய 100 ஆண்டுகட்கு முன் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அம்மொழிபெயர்ப்பே இங்குக் கொடுக்கப்பட்டதாகும். இம்மொழி பெயர்ப்பு மூல நூலோடு முற்றிலும் ஒத்துச் செல்ல வேண்டிச் செய்யப்பட்டிருப்பதால், இதன் நடை சிற்சில விடங்களில் செவ்விய செந்தமிழ் நடைக்கு மாறுபட்டிருக்கலாம். அன்றியும், எவரும் படித்தறிய வேண்டுமென்ற எண்ணத்துடன் இதன் நடை மிக எளிமையாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்று வழங்கும் தமிழ் உரை நடை ஆரம்ப நிலையிலிருந்த ஒரு காலத்தில் அந்நடை எவ்வாறு இருந்தது என்பதைக் காண இஃது ஓர் உதாரணமாகும்.



புதிய ஏற்பாட்டில் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் ஆறுவது அதிகாரமே நம் பாடப் பகுதியாய் அமைந்துள்ளது. கர்த்தர் தம் சீஷர்களுக்குச் செய்த உபதேசங்களுள் ஒரு பகுதியையே இது குறிக்கும். இவ்வுபதேசம் எவரும் கேட்டு உணரக்கூடிய தென்பதை இதனைப் படித்துக் காண்க. ஆடம்பரமின்றி அமையும் வாழ்க்கையின் மேன்மையும், கடவுளுக்குச் செய்ய வேண்டிய 'பிரார்த்தனை முறையும், இம்மையைப் பற்றிய கவலையில்லாமல் மறுமையைப் பற்றிக் கருத வேண்டியதன் அவசியமும் இங்குத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

### மத்தேயு - 6

### இயேசு கிறிஸ்துவின் உபதேசம்

மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.

2. ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவி

யாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்த தென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

3. நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக் கடவது.

4 அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

5. அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக் காரரைப் போலிருக்கவேண்டாம்; மனுஷர் காணும்படி யாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்தி களிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர் கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யா கவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

6 நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங் கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.

7. அன்றியும், நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல் வீண் வார்த்தைகளை அலப்பாதே யுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.

8 அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள். உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிற தற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

9. நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: "பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

10. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல, பூமியி லேயும் செய்யப்படுவதாக.

11. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்க ளுக்குத் தாரும்.

12. எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போலவே எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

13. எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை ரக்ஷித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும, மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆம்" என்பதே.

14. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கு மன்னிப்பார்.

15. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

16. நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

17. நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.

18. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

19. பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

20. பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

21. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

22. கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.

23. உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்! இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!

24. இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலுங் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது.

25. ஆகையால், என்னத்தை உண்போம். என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தைக் உடுப்போம் என்று உங்கள் சரீரத்துககாகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா!

26. ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா!

27. கவலைப்படுகிறதனாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்!

28. உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை; நூற்கிறதுமில்லை.

29. என்றாலும், சாலோமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

30. அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

31. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.

32. இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளையெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

33. முதலாவது தேவனுடைய ராஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

34. ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடுபோதும்.

## குறிப்புரை

1. பரலோகம் - மேல் உலகம். 3. அந்தரங்கம் - மறைவு. 4. வெளியரங்கம் - வெளிப்படை. 7. அலப்புதல் - வீணுகச் சத்தமிடல். வசனிப்பு - பேச்சு. 9. பரமண்டலம் - கடவுள் உலகம். 16. உபவாசம் - பட்டினி. 25. விசேஷித்தவை - மேலானவை. 29. சாலோமோன் - பண்டைக் காலத்தில் அரசாண்ட ஒரு மன்னன்.

## பயிற்சி

(1) இப்பாடத்தில் நேர்ந்துள்ள வடமொழிச் சொற்களையெல்லாம் எடுத்தெழுதி, அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களை அமைக்க.

(2) பொருள் கூறுக: மாயக்காரர், அஞ்ஞானி.

## வினுக்கள்

(1) தருமம் செய்ய வேண்டிய முறையாது?

(2) மாயக்காரர்கள் தருமம் செய்வது எப்படி?

(3) 'அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தது' என்று எவ்வெவ் விடங்களுட் சொல்லப்பட்டுள்ளது?

(4) கடவுளுக்கு ஜபம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

(5) உபவாசம் செய்வதற்கு வழியாது?

(6) பூமியிலே பொக்கிஷம் சேர்த்து வைப்பதன் குறையாது?

(7) 'இரண்டு எஜமானர்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனுலுங் கூடாது' இங்குக் குறிக்கப்பட்ட எஜமானர் யாவர்?

(8) பறவைகளைக் கண்டு நாம் அறிய வேண்டுவன யாவை?

(9) நாளைக்காக ஏன் கவலைப்படக் கூடாது?

## இலக்கணம்

(1) பின்வரும் சொற்களை இப்பொழுது வழங்கும் உருவத்தில் எழுதுக:—மனுஷர், ஜெபம், என்னத்தை, எஜமான்கள்.

(2) பின்வரும் வாக்கியங்களை நேரான முறையில் மாற்றி அமைக்க:—

(i) அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(ii) எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போலவே எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
(iii) உங்கள் பரமபிதா உங்களுக்கு மன்னிப்பார்.
(iv) அவைகள் விதைக்கிறதுமில்லை; அறுக்கிறதுமில்லை.
(v) சாலோமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை.

### கட்டுரையாக்கம்

(1) இப்பாடத்தில் வந்துள்ள சில நீதிகள் பழமொழிகளாக வழங்குகின்றன. அவற்றை ஆராய்ந்து எடுங்கள்.

(2) இப்பாடப் பகுதியில் வந்துள்ள கருத்துக்களை வேறு தமிழ் நூல்களில் நீங்கள் கண்டதுண்டா?

(3) இத்தமிழ் நடையின் தன்மை யாது?

(4) இவ்வுபதேசங்களை இன்று மக்கள் எவ்வாறு பின்பற்றி வருகின்றனர்?

---

# 4. மநுமுறைகண்ட வாசகம்

## வீதிவிடங்கன் உலாப்போந்தது

### ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்



சோழர்களின் இராஜதானிகளுள் ஒன்றான திருவாரூரில் அரசாண்ட மநுநீதிகண்ட சோழர் என்ற மன்னரின் நீதிமுறையை விளக்கும் வரலாற்றைக் கொண்ட இந்நூல் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அவர்களால் இயற்றப்பட்டது. இதன் முதனூல் சேக்கிழாரால் இயற்றப்பெற்ற பெரிய புராணத்திலுள்ள மநுநீதிகண்ட புராணமாகும் என்பர்.

சோழ மன்னரின் மகனான வீதிவிடங்கன் அரண்மனையினின்று புறப்பட்டு ஸ்ரீ தியாகராஜப் பெருமானின் கோயிலுக்குச் சென்றதை இப்பாடப் பகுதி குறிக்கும்.

இந்நூலை இயற்றிய ஸ்ரீ சுவாமிகளின் ஆழ்ந்த அறிவும், கடவுள் பக்தியும், வசனமியற்றும் வன்மையும் இப் பகுதியில் நன்கு விளங்கும். இப் பகுதியின் சொல்வளமும், பொருள் வளமும் படிப்பவர்களின் மனத்துக்குப் பெருமகிழ்ச்சியைத் தரும். பல அருமையான தொடர்மொழிகளையும், உவமைகளையும் இங்குக் காணலாம்.

வீதிவிடங்கன் தன் அரண்மனைக்கு வந்து, தயிலம், சந்தனம், கஸ்தூரி, பால், தயிர், நெய், பழம் முதலான அபிஷேக திரவியங்களும், மாணிக்க மாலை, மரகத மாலை, முத்து மாலை, பவள மாலை, பொன் மாலை, வச்சிரமுடி, இரத்தின குண்டலம் முதலான திருவாபரணங்களும், கொன்றை மாலை, தும்பை மாலை, வில்வ மாலை, சண்பக மாலை, முல்லை மாலை முதலான திருமாலைகளும், வெண் பட்டு, கோசிகப்பட்டு, பீதாம்பரம் முதலான திருவாடைகளும், மற்றும் வேண்டிய திரவியங்களெல்லாமும் தியாகேசர் கோவிலுக்குக் காரியக்காரர்கள் வசத்தில் முன்னதாக அனுப்புவித்து, பின்பு தான் மஞ்சனச் சாலையில் வாச நீராடி, வெண்பட்டுடுத்துச் சிவத்தியானத்துடன் திருநீறு தரித்துத் திலகமணிந்து, கிரீடம், குண்டலம், கண்டசரம், வாகுவலயம், பதக்கம், சரப்பளி, கடகம், ஆழி, பொற்பூணுநூல், பொன்னரைஞாண், உதரபந்தனம், வீரகண்டை முதலான பூஷணங்களும் பூண்டு கொண்டு, ஜோதிமயமான பீதாம்பர உத்தரீயம் மேலே தரித்துக்கொண்டு, நவரத்தின மிழைத்த வொரு பொற் பிரம்பைக் கையிற் பிடித்துக்கொண்டு, அரண்மனை வாசலை விட்டு வெளியே புறப்பட்டு, வேதபாரகராகிய வேதியர் முதலானவர்களுக்குப் பலபல தானங்கள் செய்து, மனோவேகம் பின்னடையத் தக்க வேகமான நடையுள்ள நான்கு குதிரைகளைக் கட்டிய மகாமேருவைப் போல உயர்வுள்ள ரத்தினகசிதமாகிய ரதத்தின்மேல் ஆரோகணித்துக்கொண்டு, வேத வேதியர், மீமாம்சகர், தார்க்கிகர், வையாகரணர், சோதிடர், ஆயுள்வேதர், வேதாந்தியர், ஆகம சித்தாந்தர், புராணிகர், சமய சாஸ்திரப்பிரசங்கர் முதலான வித்தியா வல்லபர்களும், மந்திரி, பிரதானி, தானாதிபதி முதலான காரியத்தலைவர்களும், சிநேகர், உறவினர், புரோகிதர் முதலானவர்களும், மன்னர், மண்டலீகர், பட்டவர்த்தனர், மகுட வர்த்தனர் முதலான அரசர்களும் தங்கள் தங்கள் பெருமைக்குத் தக்க வாகனங்களிலேறிச் சூழ்ந்து வரவும், நெற்றிப் பட்டம், கிம்புரி முதலான அணிகளை அணிந்து அலங்காரம் செய்த மதயானைகள் கர்ச்சித்து வரவும், முத்து வாளி, கிண்கிணி மாலை, பொற்கலனை முதலான அணிகளால் அலங்கரித்த வலியுள்ள குதிரைகள் கனைத்துவரவும், வீரபட்டம், வீரசங்கிலி, வீரகண்டை முதலான அணிகளையணிந்த வீரர்கள் ஆரவாரித்து வரவும், மங்கலப் பாடகர்

பாடவும், வந்தியர் மாகதர் புகழவும், மங்கலமங்கையர் வாழ்த்தவும், நாடகக் கணிகையர் நடனஞ் செய்யவும், பட்டாங்கு படிக்கவும், கட்டியங் கூறவும், அஷ்டமங்கலங்களை ஏந்திச் சுமங்கலிகள் சூழ்ந்து போகவும், வெள்ளை வட்டக் குடைகள் நிழற்றவும், வெண்சாமரை வீசவும், மயிற்குஞ்சங்கள் சுழற்றவும், பூந்தட்டேந்தவும், தோற் கருவி, துளைக் கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி, நரம்புக் கருவி என்கின்ற ஐவகையான வாத்தியங்களும் முழங்கவும், தேரிற் கட்டிய மணிகளினோசை கணீர்கணீ ரென்று சத்திக்கவும், ஆடுகின்ற மாதரின் அடிகளிற் பூண்ட சிலம்போசை கலீர் கலீரென்று ஒலிக்கவும், சகல மங்கல சம்பிரம ஆடம்பரங்களுடன், மாளிகைகளின் வாயில்கள் தோறும் மலர்ப்பந்தரிட்டு, மணிமாலைகள் தூக்கி, வாழை கமுகுகள் நாட்டி, மெழுகிக் கோலமிட்ட திண்ணைகளில் பூரண கலசங்களும், பொற்பாவைகளும், முளைப்பாலிகைகளும், முகவிளக்குகளும். வெண்சாமரைகளும், இணைக்கயல்களும், கண்ணாடிகளும், பூந்தட்டுகளும் மங்கலமாக வைத்து அலங்கரித்தும், பரிமள திரவியங்களைக் கலந்த பனி நீர் தெளித்துத் தூளி யெழும்பாமல் தளஞ் செய்தும், ஆடல் பாடல் முதலான விநோதங்களைக் கொண்டு விளங்கிய வீதியினிடத்துத் தேவேந்திரன் தியாகராஜ தரிசனஞ் செய்யப் போவதுபோல் அவ்வீதி விடங்க னென்னும் இராஜகுமாரன் தேரை நடத்தினான்.

## குறிப்புரை

திரவியங்கள் - பொருள்கள். மஞ்சனச்சாலை - குளிக்கும் அறை. கண்ட சரம் - கழுத்திலணியும் மாலை. வாகுவலயம் - தோள்வளை.

ஆழி - மோதிரம். உதரம் - வயிறு. பந்தனம் - கட்டு ; வயிறு சூழக்கட்டும் ஓர் அணி. நவரத்தினம்:—வயிரம், மரகதம், மாணிக்கம், புருடராகம், வயிடூரியம், நீலமணி, கோமேதகம், முத்து, பவளம். ஆரோகணித்து - ஏறி.

மீமாம்சம், தர்க்கம், வியாகரணம், சோதிடம், ஆயுள்வேதம்—இவை வேத அங்கங்கள். ஆகம சித்தாந்தம் - சைவ சித்தாந்தம். மண்டலீகர் - மண்டலங்களுக்குத் தலைவர். மண்டலம் - நாட்டின் பெரும் பிரிவு. கிம்புரி - கொம்பிலணியும் அணி. கலனை - கடிவாளம். வந்தியர் மாகதர் - இருந்தேத்துவார். அஷ்டமங்கலங்கள்—'செங்கயல் இரட்டைதிருவாடர்சுடர்கண்ணாடி, பொங்குகொடி வார்முரசம் தோட்டி புணர்கும்பம், மங்கலங்க ளெட்டும்' என்று கூறப்பட்டவை.

பூரண கலசம் - நீர்நிறைந்த குடம்.

## பயிற்சி

### சொற்கள்

(1) இப்பாடத்தில் சேர்ந்துள்ள வடமொழிச் சொற்களை அகர வரிசையாக எழுதி, அவற்றிற்குரிய தமிழ் மொழிகளை எழுதுக.

(2) பின்வரும் தொகைப் பெயர்களில் அடங்கிய பொருள்களை விரித்தெழுதுக:—நவரத்தினம், அஷ்ட மங்கலம், ஐவகை வாத்தியங்கள்.

### வினாக்கள்

(1) அபிஷேக திரவியங்கள், திருவாபரணங்கள், திருமாலைகள், பூஷணங்கள், யானைக்குரிய அணிகள், குதிரைக்குரிய அணிகள், அரச அங்கங்கள்—இவை யாவை?

(2) திரு என்னும் அடைமொழிந்த எச்சொற்கள் இப்பகுதியில் வந்துள்ளன?

(3) கோயிலுக்குச் செல்பவர் கடவுளுக்குரியனவாக எடுத்துச் செல்லவேண்டியவை யாவை?

(4) அரசகுமாரன் உலாப் புறப்பட்டபோது நகரவீதி எவ்வாறு அலங்கரிக்கப்பட்டது?

### இலக்கணம்

(1) இப்பகுதியிலுள்ள பெயர்ச் சொற்களிலிருந்து பெயர்ச்சொல் வகை ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு உதாரணம் காட்டுக.

(2) பின் வருவனவற்றிற்குத் தொடரிலக்கணம் கூறுக:—முக விளக்கு, பூங்கயல், இணைவிளக்கு, நெற்றிப் பட்டம், வட்டக் குடை மணக்கோலம்.

### கட்டுரையாக்கம்

வீதிவிடங்கன் உலாக் காட்சியைப்பற்றி ஒரு பக்கத்துக்குள் எழுதுக.

---

# 5. தமிழருக்கு

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**



மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழகத்தில் சமீபகாலத்தில் தோன்றிய பெருங் கவிஞராவர். அவருடைய நாட்டுப் பாடல்கள் மக்களின் உள்ளத்தில் பேரூக்கத்தை ஊட்டியிருக்கின்றன. அவருடைய கற்பனை சக்தி 'குயில் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' முதலிய பாடல்களில் மிகுதியாய் அமைந்திருப்பதைக் காணலாம். அவருடைய உரைநடைக் கட்டுரைகள் தமிழ் மக்களுக்குப் பெரும் பயனளிக்கத்தக்கவை. சமூகச் சீர்திருத்தத்துக்கு அவர் காட்டிய வழி மிகப் போற்றத்தக்கது. தமிழரின் மேன்மையையும் அவர்களிடம் இன்று காணும் குறைகளையும் ஆசிரியர் எடுத்துக் கூறுவதைக் காண்க.

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகிறது.

2. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங் கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல்வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள் அச்சமில்லாத கர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார்.

3. நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

4. தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு, ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடுசெய்.

5. ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே; "ஜாதி இரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

6. பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர், மனைவியை, "வாழ்க்கைத் துணை" என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று; ஆணும் பெண்ணும் சமம்.

7. வேதங்களை நம்பு. அவற்றின் பொருள்களைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமை பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே.

8. தமிழா, உன் வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உன் மதக் கொள்கைகள், லௌகிகக் கொள்கைகள், வைதிக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும் எப்போதும் நேர்மையாயிருக்க வேண்டும்; உண்மையாயிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது, பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

9. தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை; எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யு மில்லை. "முந்திய சாஸ்திரம்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்" என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? "தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்" என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

10. இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

11. இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றத்தாருக்கும், பிறர்க்கும், நீ செலுத்த வேண்டிய கடமை. 'பிறர்' என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது, தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

12. பொருள் என்பது செல்வம், நிலமும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப் பெருமை சேருதல், இவையெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

13. இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது; பாட்டு, கூத்து முதலிய ரஸவஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்ருக அமையும்படி பராசக்தி அருள்புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

14. வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. 'வீடு' என்ற சொல்லுக்கு 'விடுதலை' என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானுகவே வீட்டு நிலை அருள் செய்வான். தமிழா, உன் புருஷார்த்தங்கள் கை கூடுக!

### குறிப்புரை

(2) தர்மிஷ்டர் - அறவோர்.

(3) கணம் - கூட்டம். வீர்யம் - ஆற்றல்; வீரம்.

(8) லௌகிக - உலகத்தைப்பற்றிய. வைதிக - வேதத்தைப் பற்றிய.

(9) பஞ்சதந்திரம் - ஒரு நூலின் பெயர்.

(10) புருஷார்த்தம் - மக்கள் அடையவேண்டிய பேறுகள்.

(13) ரஸவஸ்து - சுவைப் பொருள். பராசக்தி - ஆசிரியர் வணங்கி வந்த தெய்வத்தின் பெயர். பஞ்சபூதங்கள் :—நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன.

### பயிற்சி

#### சொற்கள்

(1) இப்பகுதியிற் காணும் வடமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் எழுதுக.

(2) பின்வரும் சொற்கள் எவற்றினின்று பிறந்தவை?—வேற்றுமை, கருத்து, வீடு, பேறு, நகை.

### வினுக்கள்

(1) தமிழர் கூட்டத்தின் பெருமைகள் யாவை?

(2) பெண்களின் உயர்வு என்ன?

(3) வேதங்களுக்கும் புராணங்களுக்குமுள்ள வேற்றுமை என்ன?

(4) பொய்க் கதைகள் எங்கெங்குக் கலந்துவிட்டன?

(5) உண்மையின் உயர்வு யாது?

(6) பஞ்சதந்திரம் என்ன கூறி நகைக்கிறது? அதன் பொருள் என்ன?

(7) அறங்கள் என்பவை யாவை?

(8) எவை செல்வம் எனப்படும்?

(9) இன்பம் பயவா நிலைமைகள் யாவை?

(10) வீடு என்பது என்ன?

### இலக்கணம்

(1) நம்பு, போய், வெட்டிய, தீர்க:—இவ் வினைச்சொற்களின் வகைகளைக் கூறுக. இவற்றின் விகுதிகள் யாவை?

(2) பின்வரும் வாக்கியங்களிலுள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக்கி எழுது:—

(i) நான்கு புருஷார்த்தங்களைப் பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள்.

(ii) தகப்பன் வெட்டிய கிணறு என்று, மூடர்கள் உப்புநீரைக் கொள்ளுகிறார்கள்.

(iii) நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது.

### கட்டுரையாக்கம்

(1) எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது—இத்தலைப்பைக்கொண்டு ஒரு பாரா எழுதுக.

(2) அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சிவிட்டன—சில உதாரணங்கள் கொடுக்க.

(3) இப்பாடத்தில் குறிக்கப்பட்ட பொருள்களைச் சில தலைப்புக்களுள் அடக்குக.

## 6. நிலவில் மலர்ந்த முல்லை

### மகாமகோபாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாதையர்

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிட வித்யா பூஷணம், டாக்டர் சாமிநாத ஐயர் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான இடம் பெற்ற பெரியாராவார். இறந்துபோனவை என்று கைவிடப்பெற்ற பல பண்டை இலக்கிய நூல்களை அவர் தேடிப்பிடித்து அவற்றைச் செவ்விய முறையில் பதிப்பித்தருளினார். அவருடைய அரிய முயற்சியில்லாமற் போனால் பல சங்க நூல்களையும், காவியங்களையும் பிரபந்தங்களையும் இன்று நாம் பெற்றிருக்க மாட்டோம்.



தமிழ் நூல்களுக்காக அவர் பட்ட பிரயாசைகளுள் ஒன்றைப்பற்றி அவரே எழுதியது இப்பாடப் பகுதியாகும். ஐயரவர்களின் வாழ்க்கைக் குறிக்கோளும், தெய்வ பக்தியும், தமிழ்ப் பக்தியும், விடாமுயற்சியும், உறுதியும் இப்பகுதியால் வெளியாகும். நடை, அவர் தூய உள்ளம்போல் மிக்க எளிமையானது. நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் அவர் விளக்கி வருவதைக் காண்க.

சீவகசிந்தாமணியை நான் முதன்முறை ஆராய்ந்து பதிப்பித்து வருகையில் (1887-ல்) அதிலுள்ள மேற்கோள்கள் இன்ன இன்ன நூலிலுள்ளன வென்று கவனித்த பொழுது பல பழைய நூல்களைப்பற்றி அறிந்தேன். பத்துப்பாட்டென்று ஒரு தொகைநூல் உண்டென்பதும், அது திருமுருகாற்றுப்படை முதலிய பத்துத் தனி நூல்களை உடையதென்பதும் நாளடைவில் தெரியவந்தன. அதனால், பத்துப்பாட்டைத் தேடிப்பெற்று ஆராயவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. பல நண்பர்களுடைய உதவியால் பத்துப்பாட்டின் ஏட்டுப் பிரதிகள் சில கிடைத்தன. ஆனாலும் அவற்றில் பத்துப் பாட்டுக்களும் இல்லை. இருந்த பாட்டுக்களும் தனியே மூலமில்லாமல் உரைமட்டும் உள்ளனவாகவும், இடையிடையே குறைந்தனவாகும் இருந்தன; உள்ள பகுதிகளும் திருத்தமாக இல்லை. ஆகையால் மேலும் மேலும் பத்துப்பாட்டுப் பிரதிகளைத் தேடி வந்தேன்.

2. நான் கும்பகோணம் காலேஜில் வேலைபார்த்து வந்த அக்காலத்தில் விடுமுறைகளில் வெளியூர்களுக்கு இதன் பொருட்டுப் பிரயாணம் செய்து வருவதுண்டு.

3. ஒரு சமயம் (1868-ஆம் வருஷமென்று ஞாபகம்) ஆவணியவிட்டத்தோடு தொடர்ந்து ஒரு வாரம் விடுமுறை கிடைத்தது. திருநெல்வேலிப் பக்கத்திற் பரம்பரை வித்துவான்களுடைய வீடுகளில் தேடினால் சுத்தமான பிரதிகள் கிடைக்கக் கூடுமென்று எண்ணி யிருந்தேன். ஆதலின் அவ்விடுமுறையில் திருநெல்வேலிக்கும், ஆழ்வார் திருநகரி முதலிய ஊர்களுக்கும் சென்றுவர நிச்சயித்து அங்கங்கே யுள்ள சில அன்பர்களுக்கு நான் வருவதை எழுதியிருந்தேன். இதனை என் தந்தையாரிடம் தெரிவித்த போது அவர், "சிராவணத்திற்கு இங்கே இராமல் வெளியூருக்குப் போகவேண்டாம், அடுத்த விடுமுறையில் பார்த்துக் கொள்ளலாம்" என்று எனது எண்ணத்திற்குத் தடையை உண்டாக்கினர். நான் போகவேண்டிய அவசியத்தைச் சொன்னேன். அவர் சிறிதேனும் இணங்காமல், போகக் கூடாதென்று தடுத்தனர். சிராவணத்தைக் காட்டிலும் பத்துப்பாட்டு எனக்குப் பெரிதாயிருந்ததால் மிகவும் சிரமப்பட்டு அவரிடம் தக்க சமாதானம் கூறி விடைபெற்றுப் புறப்பட்டேன்.

4. இரவு எட்டுமணி. ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓர் ஒற்றை மாட்டுவண்டி பேசிக்கொண்டு ஏறினேன். என் தந்தையார் அரைமனத்தோடு விடைகொடுத்தனுப்பினர். ஒரு தகரப் பெட்டிமட்டும் உடன் வந்தது. வண்டி வாணதுறை என்னும் இடத்துக்குத் தென்பாற் செல்லும் போது எதன்மேலோ மோதிக் குடைசாய்ந்து விட்டது. நான் கீழே விழுந்தேன்; என்மேலே பெட்டி விழுந்தது. இந்த நிலையிலும் எனக்கு ஊக்கக்குறைவு உண்டாக வில்லை. என் மனம் முழுவதும் திருநெல்வேலியில் இருந்தது. ஏதாவது ககன குளிகையை ஒரு மகான் கொடுத்து, 'இதை மிகவும் அவசரமான சமயத்தில் உபயோகி' என்று சொல்லி யிருந்தால், அந்தச் சமயத்தில் அதை உபயோகித்திருப்பேன். என் மனவேகத்துக்கு நேர் மாறாக வண்டியின் வேகம் இருந்ததோடு இடைவழியில் கீழேயும் வீழ்த்திவிட்டது.

5. திரும்பி வீட்டுக்குப் போய் இருந்து மறுநாள் புறப்படலாமென்று முதலில் எண்ணினேன்; முன்பே எனது பிரயாணத்தைத் தடுத்த என் தந்தையாருக்கு வண்டி குடைசாய்ந்த அபசகுனமும் துணை செய்து பின்

னும் என் பிரயாணத்தைத் தடுக்க ஏதுவாகுமென்று நினைந்து அங்ஙனம் செய்வது தக்கதன்றென்று பின்பு துணிந்தேன். ஆதலால் உடனே வண்டிக்காரனுக்குரிய சத்தம் முழுவதையும் கொடுத்து விட்டுப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு 'ஸ்டேஷனை' நோக்கி நடந்தேன். நல்ல வேளையாக நான் உத்தேசித்துச் சென்ற புகைவண்டி கிடைத்தது; ஏறிச் சென்றேன்.

6. தஞ்சாவூருக்கு அப்பால் வரும்போது நடுவழியில் ஒரு காட்டில் வந்து வண்டி திடீரென்று நின்றது. ரெயில்வே அதிகாரிகள் பலர் வந்து நான் இருந்த வண்டியைக் கீழும் மேலும் பார்த்தார்கள். தூக்க மயக்கத்தோடு இருந்த என்னைக் கீழே இறங்கி வேறு வண்டிக்குப் போகும்படி அதட்டிச் சொன்னார்கள். நான் இருந்த வண்டிக்கு முன்னே இருந்த வண்டியில் தீப்பிடித்து விட்டதாம். அதனால் இரண்டு வண்டிகளையும் கழற்றிவிட அவர்கள் எண்ணினார்கள். நான் ஈசுவரத்தியானம் செய்துகொண்டு வேறு வண்டியிற் போய் ஏறினேன். புறப்பட்டது முதல் உண்டான இந்த இடையூறுகளால் மனத்துக்குள் சிறிது சஞ்சலம் உண்டாயிற்று; எனக்கு இருந்த ஊக்கமிகுதியாற் பிறகு அது நீங்கிற்று.

7. மறுநாள் காலையில் சௌக்கியமாக நான் திருநெல்வேலியை அடைந்தேன்.

* * * *

8. பிறகு கைலாசபுரத்தில் இருந்த வக்கீலும் ஜமீன்தாருமாகிய அன்பர் ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி ஐயரென்பவரது வீடுசென்றேன். அவர் மிக்க அன்போடு, "எப்போது வந்தீர்கள்? நீங்கள் வருவதை முன்பே தெரிவிக்கக் கூடாதா?" என்று சொல்லி உபசரித்து உணவு முதலிய சௌகரியங்களைச் செய்வித்தார்; ஆழ்வார் திருநகரிக்குப் போய் அங்கேயுள்ள கவிராயர்கள் வீடுகளில் ஏடு தேடுவதற்கு வந்த என் கருத்தை அவரிடம் நான் தெரிவித்தேன். அவர், "நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். என்னுடைய நண்பரும் வக்கீலுமாகிய சுப்பராய முதலியாரென்பவர் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கிறார். அவருக்கு ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். உங்களுக்கு வேண்டிய அனுகூலங்களை யெல்லாம் அவர் செய்து கொடுப்பார்" என்று கூறினார். பிறகு ஸ்ரீவைகுண்டத்திற்கு ஒரு வண்டி ஏற்பாடு செய்து கொடுத்து என்னை அனுப்பினார்.

9. அங்ஙனமே, ஸ்ரீ வைகுண்டம் போய்ச் சேர்ந்து ஸ்ரீ சுப்பராய முதலியாரைக் கண்டேன். அவர் மிக்க அன்போடு உபசரித்துப் பேசினார்; தம்மால் இயன்ற உதவிகளை யெல்லாம் செய்வதாக வாக்களித்தார். பிறகு அவருடன் அங்கிருந்து அருகிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குச் சென்றேன். நான் கடிதம் அனுப்பி யிருந்த ஆழ்வார் திருநகரி அன்பர்கள் என் வரவை எதிர்பார்த்திருந்தனர். அப்போது திருவாவடுதுறை மடத்து அதிபர்களாக இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்களும் அவ்வூர் மடத்திலுள்ள காரியஸ்தருக்கு என்னைக் கவனித்துக் கொள்ளும்படி உத்தரவு செய்திருந்தார்கள். அவர்கள் யாவரும் முயன்று கவிராயர்கள் வீட்டிலுள்ள சுவடிகளை யெல்லாம் தேடி எடுத்து நான் வந்தவுடன் பார்க்கத்தக்க நிலையில் வைத்திருந்தனர்.

10. நான் முதலில் லக்ஷ்மண கவிராயரென்ற ஒருவருடைய வீட்டிற்குப் போனேன். அவர் மிகச் சிறந்த வித்துவானாகிய, தீராத வினைதீர்த்த திருமேனி கவிராயரென்பவருடைய பரம்பரையினர். அவர் வீட்டில் ஆயிரக்கணக்கான சுவடிகள் இருந்தன. பல பழைய நூல்களும், இலக்கணங்களும், பிரபந்தங்களும், புராணங்களும் இருந்தன. எல்லாவற்றையும் பிரித்துப் பிரித்துப் பார்த்து வந்தேன். நான் தேடிவந்த பத்துப் பாட்டு மட்டும் கிடைக்கவில்லை. ஒரு சுவடியில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களின் 'ஜாப்தா' இருந்தது. அதிற் கண்டவற்றுள் பத்துப் பாட்டின் முதல் ஏழு பாடல்களுள்ள பிரதியின் பெயர் ஒன்று. ஊரைவிட்டுப் புறப்பட்டது முதல் அநுகூலமான செய்தி யொன்றையும் பெறாமல் தளர்ச்சி யடைந்திருந்த என் மனத்தில் அப்பொழுது சிறிது ஊக்கம் பிறந்தது. அந்தச் சுவடிக் குவியல்களிலே பத்துப் பாட்டு அகப்படக் கூடுமென்றே நம்பினேன்.

11. மூன்று நாட்கள் ஆழ்வார் திருநகரியில் இருந்தேன். வந்த முதல்நாள் ஆவணியவிட்டம். ஸ்ரீவைகுண்டத்தில் இருந்த பள்ளிக்கூடப் பரிசோதகரும் என் நண்பருமாகிய சிவராமைய ரென்பவருடைய வீட்டில் தங்கியிருந்தேன். ஒவ்வொரு நாளும் லக்ஷ்மண கவிராயர் வீட்டில் ஏடு பார்ப்பதும், இடையிலே சில சமயங்களில் தாயவலந்தீர்த்த கவிராயர், அமிர்த கவிராயர் முதலிய வேறு கவிராயர் வீடுகளிலுள்ளவற்றைப் பார்ப்பதும் என்னு

டைய வேலைகளாக இருந்தன. முப்பது கவிராயர்கள் வீடுகளில் தேடினேன். லக்ஷ்மண கவிராயர் வீட்டிலுள்ள ஏடுகளெல்லாவற்றையும் பார்த்தேன். பத்துப் பாட்டு அகப்படவில்லை. இது நான் புறப்பட்ட காலத்துச் சகுனங்களின் பயன் என்றெண்ணி வருந்தினேன். என் உள்ளம் சோர்ந்தது.

12. அப்பொழுது லக்ஷ்மண கவிராயர், "எங்கள் வீட்டில் அளவற்ற ஏடுகள் இருந்தன. எங்கள் முன்னோர்களில் ஒரு தலைமுறையினரில் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் இறந்துவிட்டனர். அவருடைய மனைவியாரின் பிறந்தகம் தச்சநல்லூர்; தம் புருஷர் இறந்தவுடன் அவர்கள் தச்சநல்லூர் சென்றுவிட்டார்கள். போகும்போது இங்கிருந்த சுவடிகளையெல்லாம் பாகம் பண்ணி மூன்றில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்" என்றார். "பத்துப் பாட்டும் அந்தச் சுவடிகளோடு தச்சநல்லூருக்குப் போயிருக்க வேண்டும்; சரி, இவ்வளவு சிரமப்பட்டும் பயனில்லாமற் போயிற்றே!" என்று வருந்தி நான் கூறினேன்.

13. அவர் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு, "ஒரு விஷயம்; மறந்துவிட்டேன்; இவ்வூரில் என் மாமனார் இருக்கிறார். தேவர்பிரான் பிள்ளையென்பது அவர் பெயர். அவருக்கும் எனக்கும் இப்பொழுது மனக்கலப்பில்லை. என்னுடைய வீட்டிலிருந்த வேலைக்காரனொருவன் சில சுவடிகளைக் கொண்டுபோய் அவரிடம் கொடுத்துவிட்டான். அவரிடம் நீங்கள் தேடும் புஸ்தகம் இருக்கிறதா வென்று பார்க்கச் செய்யலாம். ஆனால் நான் அவரோடு பழகுவதை இப்போது நிறுத்திவிட்டேன்" என்றார்.

14. "அவற்றையும் பார்ப்போம். தாங்கள் மட்டும் தயை செய்யவேண்டும். எனக்காகவும் தமிழுக்காகவும் மனஸ்தாபத்தை மறந்து தாங்களே அவர் வீட்டில் இருப்பவற்றை வாங்கித் தரவேண்டும்; என்னை வரச்சொன்னாலும் உடன் வருவேன்" என்று நான் அவரைக் கேட்டுக் கொண்டேன்; அருகிலுள்ளவர்களும் சொன்னார்கள்; கவிராயர் அங்ஙனமே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

15. ஏடுகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கையும் மனமும் சோர்ந்தன. அவ்வூரில் ஸப்ரிஜிஸ்திராராக இருந்த இராமசாமி ஐயரென்பவர் வீட்டுக்குப் போனேன். இரவு அவர் வீட்டிற் போஜனம் செய்து

விட்டுத் திண்ணையில் உட்கார்ந்தேன். அவ்வூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவப் பெரியார் சிலர் என் விருப்பப்படி திவ்யப் பிரபந்தத்திலுள்ள சில பாசுரங்களின் பழைய வியாக்யானங்களைச் சொல்லிக் கொண்டிருந்தனர். நான் மிக்க விருப்பத்துடன் கேட்டு மகிழ்ந்தேன். இயல்பாகவே அவ்வியாக்யானங்களைக் கேட்டு அடையும் முழு மகிழ்ச்சியும் எனக்கு அப்பொழுது உண்டாகவில்லை. அதற்குக் காரணம் அவற்றைச் சொன்னவர்களது குறையன்று; என் உள்ளத்துக்குள்ளேயிருந்த 'பத்துப் பாட்டு அகப்படவில்லையே' என்ற கவலையே.

16. இங்ஙனம் இருக்கையில், அன்று ஏதோ விசேஷமாதலின், திருவீதியில் பெருமாளும் சடகோபாழ்வாரும் எழுந்தருளினர்கள்; ஆழ்வார் அவதரித்த திவ்ய தேசம் அவ்வூரென்று நான் சொல்வது மிகை. நானும் பிறரும் எழுந்து தரிசனம் செய்தோம். நான் வணங்கினேன். பட்டர்கள் சந்தனம், புஷ்பமாலை முதலியவற்றை அளித்தார்கள். எல்லோருடைய அன்பும் ஒருமுகப்பட்டு அத்தகைய மரியாதைகளை நான் பெறும்படி செய்தது. அப்பொழுது நம்மாழ்வார் திருக்கோலத்தைத் தரிசித்தேன்; அவரைப் பார்த்து, "ஸ்வாமி! தமிழ் வேதம் செய்தவரென்று தேவரீரைப் பாராட்டுகின்றூர்கள். தேவரீருடைய ஊருக்குத் தமிழ் நூலொன்றைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன். தமிழுக்குப் பெருமையருளும் தேவரீருக்கு, நான் பட்ட சிரமம் தெரியாததன்றே! நான் தேடி வந்தது கிடைக்கும்படி கருணை செய்யாமல் இருப்பது நியாயமா?" என்று சொல்லிப் பிரார்த்தித்தேன். உள்ளம் அயர்ந்துபோய், 'இனிமேல் செய்வது ஒன்றுமில்லை' என்ற முடிவிற்கு வந்தமையினுல் இங்ஙனம் பிரார்த்தனை செய்தேன்.

17. பெருமாளும் ஆழ்வாரும் அவ்விடத்தைக் கடந்து அப்பால் எழுந்தருளினர்கள். நாங்கள் திண்ணையில் வந்து உட்கார்ந்தோம். நிலா ஒளி நன்ருக வீசியது. அப்பொழுது லக்ஷ்மண கவிராயர் எதையோ தம் மேலாடையால் மறைத்துக்கொண்டு மிகவும் வேகமாக எங்களை நோக்கி வந்தார். திருக்கோயிலில் பிரஸாதங்களைப் பெற்று அவற்றை மறைத்துக்கொண்டு வருகிறாரென்று நான் நினைத்தேன். வந்தவர், "இந்தப் புஸ்தகத்தைப் பாருங்கள்; இந்த ஒன்றுதான் என் மாமனிடம் இருக்கிறது; பார்த்துவிட்டுத் திருப்பியனுப்பிவிடுவ

தாகச் சொல்லி வாங்கி வந்தேன்'' என்று கூறி, மேல் வஸ்திரத்தால் மூடியிருந்தசுவடியை எடுத்தார். அவர் என்னிடம் கொடுப்பதற்கு முன்பே, ஆத்திரத்தால் நான் அதனைப் பிடுங்கினேன்; மேலே கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து அந்த நிலாவின் ஒளியிலேயே பிரித்தேன். சட்டென்று **முல்லைப் பாட்டு** என்றபெயர் என் கண்ணிற் பட்டது. **நிலவில் மலர்ந்த அம்** *முல்லையினால் என் உள்ளம் மலர்ந்தது. எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. மிக விரைவாக முதலிலிருந்து திருப்பித் திருப்பிப் பார்த்தேன். ஆரம்பத்தில் திருமுருகாற்றுப்படை, அப்பால் பொருநராற்றுப்படை, அதன்பின் சிறுபாணாற்றுப்படை—இப்படி நெடுநல் வாடை முடிய ஏழு பாட்டுகள் இருந்தன. ஒவ்வோர் ஏட்டையும் புரட்டிப் புரட்டிப் பார்த்ததில் என்னையே மறந்துவிட்டேன். சந்தோஷ மிகுதியினால் அப்பொழுது என் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அருகிலிருந்தவர்களுக்குப் பொருள்பட்டிரா. அந்தச் சமயத்தில் மட்டும் என்னை யாரேனும் புதிதாகப் பார்த்திருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகவே கருதியிருப்பர்; என்னுடைய மன உணர்ச்சி அவ்வளவு தீவிரமாக இருந்தது.

18. "ஆழ்வாரைப் பிரார்த்தித்தது வீண்போகவில்லை. அவர் கண்கண்ட தெய்வமென்பதில் ஐயமேயில்லை'' என்று அருகில் இருந்தவர்களிடம் கூறினேன். அன்று இரவு முழுவதும் சந்தோஷ மிகுதியினால் எனக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாட் காலையில் திருக்கோயிலுக்குச் சென்று பெருமாளையும் ஆழ்வாரையும் தரிசித்து அர்ச்சனை செய்வித்து, "இப்படியே நான் நினைத்த காரியங்களுக்கெல்லாம் அநுகூலம் செய்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்துவிட்டு வந்தேன்.

19. அப்பால், ஊற்றுமலை ஜமீன்தாராகிய ஹிருதாலய மருதப்பத் தேவருக்குக் கொடுக்கும்பொருட்டு, ஊரிலிருந்து கொண்டுபோயிருந்த சீவக சிந்தாமணிப் புஸ்தகத்தையும், வேறு சில புஸ்தகங்களையும் லக்ஷ்மண கவிராயரிடம் கொடுத்தேன். அங்கே கிடைத்த †ஐங்குறு

*பத்துப்பாட்டில் ஐந்தாவதாகிய முல்லைப் பாட்டு, முல்லையெனவும் வழங்கப் பெறும்.

†இந்தப் பிரதிதான் ஐங்குறுநூற்றை நான் பதிப்பித்ததற்கு ஆதாரமாக இருந்தது.

நூற்றின் பழைய உரையுள்ள குறை ஏட்டுப் பிரதியொன்றையும் பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பா மாலையாகிய இரண்டையும் பத்துப்பாட்டோடு கைக் கொண்டு முக்கியமானவர்களிடமெல்லாம் விடைபெற்று, வேறு சில ஊர்களிலுள்ள கவிராயர் வீடுகளிலிருந்த ஏடுகளையும் பார்த்துக்கொண்டு திருநெல்வேலி சென்றேன்.

20. அப்பால் அங்கே கைலாசபுரத்திலிருந்த கிருஷ்ணசாமி ஐயரவர்களைப் பார்த்து அவர்கள் மூலம் கிடைத்த உதவியைப் பாராட்டி விடைபெற்றுக்கொண்டு கும்பகோணம் வந்து சேர்ந்தேன்.

21. **நிலவில் மலர்ந்த முல்லையையுடைய** அப்பிரதியிலும் ஏழு பாட்டுக்களின் உரைமாத்திரம் இருந்தது; ஆனால் திருத்த முள்ளதாகக் காணப்பட்டது. நான் ஏடுகளைத் தேடிப் பட்ட சிரமத்தைப்பற்றிய வரலாறுகள் மிகப் பல. அவற்றுள் இந்த நிகழ்ச்சி ஒன்று.

## குறிப்புரை

(1) *சீவக சிந்தாமணி ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. திருத்தக்கதேவர் என்ற ஜைன முனிவரால் இயற்றப்பெற்றது. இதற்கு நச்சினார்க்கினியர் உரை வகுத்தார். இதனை ஐயரவர்கள் 1887-ஆம் ஆண்டில் பதிப்பித்தார்கள்.*

*பத்துப்பாட்டு சங்க நூல்களுள் முதன்மை பெற்று விளங்குவது. தொகைநூல் - பலர் பாடிய பாடல்களைத் தொகுத்து அமைத்த நூல்.*

(3) *ஆவணியவிட்டம்: ஆவணி மாதம் அவிட்ட நக்ஷத்திரமும் பௌர்ணமியும் கூடிய நாள். அந்தணர்களுக்கு ஒரு சிறந்த நோன்புநாள்.*

*ஆழ்வார் திருநகரி: திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஒரு விஷ்ணு க்ஷேத்திரம். நம்மாழ்வார் எழுந்தருளிய இடம்.*

*சிராவணம் - அவிட்டத்துக்கு முந்திய நக்ஷத்திரம்.*

(4) *வாணாதுறை - கும்பகோண நகரின் ஒரு பகுதி.*

*ககனகுளிகை - வானத்தில் பறக்கும் ஆற்றலைத் தரும் மருந்து.*

(8) *ஜன + உபகாரி = ஜனோபகாரி.*

(9) *திருவாவடுதுறை தஞ்சை ஜில்லாவிலுள்ளது.*

(14) *திவ்ய பிரபந்தம் - ஆழ்வார்கள் அருளிச்செய்த திருப்பாடல்கள். வியாக்யானம்-உரை; பழைய வியாக்யானங்கள்-பழைய உரைகள்.*

(15) *சடகோபாழ்வார்-நம்மாழ்வார். ஜடத்தைக் (மாயை) கோபித்தவர். ஆழ்வார்-திருமாலின் மங்கல குணங்களிலே ஆழ்ந்து ஈடுபட்டவர். திவ்யதேசம் - ஊர். பட்டர்கள்-திருமாலுக்குக் கைங்கரியம் செய்வோர். தமிழ் வேதம் செய்தவர் - நம்மாழ்வார் பாடியருளிய திருவாய்மொழி தமிழ்வேதம் எனப்படும். திண்ணை - திட்டை என்பதன் திரிபு.*

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக :—தலைமுறை, பரம்பரை, மனஸ்தாபம், பாசுரம், திவ்யசேதம், பிரஸாதம், ஏட்டுப் பிரதி, பாராட்டி, ஆழ்வார், கவிராயர்.

(2) இப்பாடத்தில் வைணவப் பரிபாஷைகளாக வந்துள்ள தொடர்களை எடுத்தெழுதுக.

(3) இப்பாடத்தில் குறிக்கப்பெற்றுள்ள நூற்பெயர்களை எடுத்தெழுதி அப்பெயர்களுக்குரிய காரணங்களையும் கண்டுகொள்க.

(4) இப்பாடத்தில் நேர்ந்துள்ள உத்தியோகப் பெயர்களைப் பொறுக்கி எழுதி அவற்றிற்குரிய தொழில்களையும் குறிக்க.

### வினாக்கள்

(1) ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களில் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

(2) ஆவணியவிட்டம் அந்தணர்களுக்குச் சிறப்பானது எப்படி?

(3) ஐயரவர்களுக்குப் பிரயாணத்தில் நேர்ந்த அபசகுனங்கள் யாவை?

(4) பிரயாணத்தில் ஐயரவர்கள் சந்தித்த மனிதர்கள் யாவர்?

(5) பத்துப்பாட்டென்ற நூல் உண்டு என்பதை ஐயரவர்கள் எவ்வாறு உணர்ந்தனர்?

(6) பத்துப்பாட்டுக்கள் யாவை?

(7) தொகைநூலென்றால் என்ன? வேறு சில தொகைநூல்களின் பெயர்களைக் கூறுக.

(8) ஆழ்வார் திருநகரியின் சிறப்பு யாது?

(9) கவிராயர்கள் வீடுகளில் காணப்பட்ட தமிழ் நூல்கள் எவ்வகையைச் சார்ந்தவை?

(10) 'அதற்குக் காரணம் அவற்றைச் சொன்னவர்களின் குறையன்று',—சந்தர்ப்பத்துடன் விளக்குக.

(11) ஆழ்வாரிடம் ஐயரவர்கள் பிரார்த்தித்தது என்ன?

(12) நிலவில் மலர்ந்த முல்லை—இதன் பொருளை விளக்குக.

### இலக்கணம்

(1) பின்வரும் வாக்கியங்களைச் செயப்பாட்டு வினைவாக்கியங்களாக மாற்றுக :—

(i) நீங்கள் வருவதை முன்பே தெரிவிக்கக் கூடாதா?

(ii) நான் தேடிவந்த பத்துப்பாட்டு மட்டும் கிடைக்கவில்லை.

(iii) எனக்காகவும் தமிழுக்காகவும் மனஸ்தாபத்தை மறந்து தாங்களே அவர் வீட்டில் இருப்பவற்றை வாங்கித் தரவேண்டும்.

(2) 12-ஆம் பாராவிலுள்ள பொருளை ஐயரவர்கள் கூறுவதுபோல் எழுதுக.

**கட்டுரையாக்கம்**

(1) இப்பாடப் பகுதியினின்று ஐயரவர்களின் குணங்களைப்பற்றி நீவிர் அறிவனவற்றைத் தொகுத்தெழுதுக.

(2) பின்வரும் தலைப்புகளை எங்கெங்கு இடலாம்?:—

(i) ஐயரவர்களுக்குண்டான அபசகுனங்கள்
(ii) கவிராயர் வீட்டுக் கலைச் செல்வம்
(iii) பொறுத்தவர் பயன் பெறுவார்
(iv) கடவுளை மனம் நொந்து பிரார்த்தித்தல்
(v) மன உணர்ச்சியின் தீவிரம்

## 7. இயற்கை வரவேற்பு

**[திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார்]**



திரு. வி. க. என்று வழங்கப்பெறும் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் (1883-ஆம் ஆண்டு பிறந்தவர்) இன்று தமிழுலகில் வாழும் தமிழ்ப் பேரறிஞர்களுள் ஒருவராவர். அவர் கல்வி, சமயம், அரசியல், சமூகச் சீர்திருத்தம் ஆகிய பல துறைகளில் தொண்டாற்றி வருபவர். பல ஆண்டுகள் கலாசாலை ஆசிரியராகவும் பத்திரிகாசிரியராகவும் அவர் விளங்கி வந்தார். அவருடைய எழுத்து வன்மையும், பேச்சுத் திறனும் தமிழ் நாட்டிற்கே புதிய வழியைக் கற்பித்துள்ளன எனலாம். அவருடைய மொழிநடை, 'பீடும் மிடுக்கும் எழுச்சியும் கிளர்ச்சியும் வீறும் வீரமும் மதர்த்து ஏக்கழுத்தம் பெற்றுள்ளது' என்று கூறுவது மிகையாகாது. அவரது உரைநடையில் கவித்திறனைக் காணலாம்.

அவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் பல. அவை பல திறப்பட்டன. அவற்றுள், 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்ற பெயருள்ள அவருடைய தற்சரிதத்தினின்று இப்பகுதி எடுக்கப் பெற்றுள்ளது. இதில் இராயப்பேட்டையின் பழைமைத் தோற்றமும், தோட்டங்களின் இயற்கையமைப்பும், முதலியாரவர்களின் இளமைத் திருவிளையாடல்களும் தன்மைநவிற்சியில் உவமையழகு விளங்கக் கூறப்பெற்றிருப்பதைக் காண்க.

அக்கால இராயப்பேட்டை வேறு; இக்கால இராயப் பேட்டை வேறு. அதன் உடைமை இயற்றைப் பசுமை; இதன் உடைமை வெறுஞ் செயற்கைக் கல்லடுக்கு. அந்த இராயப்பேட்டையிலே மருத்துவச் சாலை மிகச் சுருங்கியிருந்தது; இந்த இராயப்பேட்டை யிலே அச் சாலை மிகவும் பருத்துப் பெருத்திருக்கிறது. மருத்துவச்சாலையின் சுருக்கமும் பெருக்கமும் முறையே பழைய புதிய இராயப்பேட்டைகளின் தன்மையை உணர்த்துவனவாம். அழகிய பசுமை பழைய இராயப் பேட்டையை இயற்கை வழியில் நடாத்தி வந்தது.

2. இராயப்பேட்டை, தேனும்பேட்டை, ஆழ்வார் பேட்டை, மயிலாப்பூர் முதலிய ஊர்கள் ஒரு சிறு கோட்ட மெனத் திகழ்ந்தன. இவைகளின் பேரூர் மயிலாப்பூர். இவ்வூர்களின் ஒருமைப் பாட்டுக்கு உயிர்நாடியாயிருந்தது ஒரு சிற்றேரி. அதன் இடம் தேனும்பேட்டை. ஆனால் அது மயிலாப்பூர் ஏரி என்றே வழங்கப்பட்டது. அவ்வேரி மயிலைக் கோட்டத்தை ஓம்பியது. பின்னே அது மறைந் தது. மயிலைக் கோட்டத்தின் கட்டுங் குலைந்தது.

### இயற்கை வரவேற்பு

3. அந்நாளில் இராயப்பேட்டையினின்றும் மயிலாப் பூர் செல்வோர் வெயிலின் தாக்குதலின்றியே போய்ச் சேர்தல்கூடும். செல்வோர்க்கு வழிநெடுக வரவேற்பு நிக ழும். எத்தகைய வரவேற்பு? இயற்கை வரவேற்பு. இயற்கை அன்னை பலபட்ட பசுமைக் கோலம் பூண்டு வரவேற்பளித்தவண்ண மிருப்பாள். வழிப்போக்கரைக் கொடிகளிற் குலவும் வெற்றிலைத் தால்கள் வாழ்த்தும்; வாழைகள் பழங்களைத் தாங்கிக் கைகளை நீட்டி அழைக் கும்; மாமரங்கள் காய்கனிகளை ஏந்தி இறைஞ்சும்; தென்னைகள் காய்களைச் சுமந்து, 'இளநீர் பருக வாரும் வாரும்' என்று தலையாட்டும்; கரும்புகள், 'அருந்துக, அருந்துக' என்று சாறு பொழியும், ஆலும் அரசும் வேம் பும் ஆங்காங்கே குடை பிடித்து நிற்கும். செஞ்சாலிக் கதிர்கள் சாமரை இரட்டும். பொய்கைப் பூக்கள் கண் ணுக்கு விருந்தாகும். ஏற்றமும் மூங்கிலும் வண்டும் பற வையும் செவிக் கமுதமூட்டும். இவ்வரவேற்புகள் இப் பொழுதுண்டோ? இப்பொழுது கல் வேலியும் இரும்பு வேலியும் எவரையும் 'வரல்வேண்டா; வரல்வேண்டா;'

என்று காய்ந்து தகைகின்றன. ஏரிச்செல்வம் வற்றியது. பசுமை அன்பு அழிந்தது. இதயங்கள் கல்லும் இரும்பும் ஆயின.

4. பழைய இராயப்பேட்டை ஒரு சிற்றூர்: இயற்கைப் பசுங்குடில்; விருந்தின் உறையுள். அதனுள் மலையில்லை; அருவியில்லை; காடில்லை; கடலில்லை. ஆனால் மலையையும் அருவியையும் காட்டையும் கடலையும் நினைவூட்டும் இயற்கைக் கூறுகள் இருந்தன. பட்டத்தினின்றும் வீறி எழுந்து, வெற்றிலைக் கொடிகளாம் மரகத ஆரங்களைப் புனைந்து, தலைகளைச் சாய்த்து, ஒன்றுடன் ஒன்று முட்டியும், அசைந்து வீழாதவாறு பிணிப்புண்டு தொடர்ந்த முகடுகள் கொண்ட வாரை நிரைகளின் ஈட்டங்கள் தொடர் குன்றுகளைக் கருத்திலிருத்தும். கிடங்குகளில் பாயும் நீரோட்டம் மலைமுகடுகளினின்றும் இழிதரும் அருவிகள்போன்றிருக்கும். அட்லன் தோட்டம் என்ற சிறுவனம் காட்டைக் கடுக்கும். அவ்வனம் இராயப்பேட்டைக்குப் பொதுவுடைமையாகப் பயன் பட்டது. அதில் அத்தி, விளா, மா, நெல்லி, நாகை, கிச்சிலி, இலந்தை, இலுப்பை, புளியம், புரசை, புன்கு, முண்முருக்கு, கொன்றை, மகிழம், அசோகு, புன்னை, நுணா, ஆல், அரசு, வேம்பு, பனை, மூங்கில் முதலிய மரங்கள் விரிந்து, பரந்து, அடர்ந்து, ஓங்கி, வெய்யோனுடன் பொருதும்; பெருங்களா, காரை, கொச்சி, ஆமணக்கு, எருக்கு, வட்டத்தாரை முதலிய செடிகள் பரவி மரங்களை நோக்கும்; சிறுகளா, சங்கம், கள்ளி, கண்ணி, மருட்டி, படர்காரை முதலிய தூறுகள் செடிகளைப் பார்த்து நகைக்கும்; தாளி, கோவை, பாலை, புரண்டை முதலியன மரங்களையும் செடிகளையும் தூறுகளையும் பிணித்துப் பின்னிப் படர்ந்து இறுமாந்து கிடக்கும்; முண்டகம், கண்டகம், முள்ளி, முளரி, ஆடாதோடை, ஆடுதின்னாப்பாளை, செருப்படை, தூதுவளை, தும்பை, துழாய், சுண்டை, நாயுருவி, நாக்கடு, ஊமத்தை, கற்றாழை, கொடிவேலி, கண்டங்கத்திரி, அவுரி முதலிய மூலிகைகள் மருத்துவஞ் செய்யும்; ஆங்காங்கே குளம், கேணி, ஓடை முதலிய நீர் நிலைகள் தண்மை வழங்கும்; அவைகளின் உள்ளிலும் புறத்திலும் கொட்டி, ஆம்பல், தாமரை, நீலோற்பலம் முதலிய பூக்களும், அறுகு, தருப்பை, நாணல் முதலிய புல்லினங்களும், பொன்னாங்கண்ணி, கையாந்தகரை, வள்ளை, வல்லாரை முதலிய கீரை வகைகளும் பொலிந்து இன்பமூட்டும்; அங்கும் இங்கும் பழங்கள் தாமே கனிந்து

கனிந்து வீழும்; பாம்பு, கீரி, உடும்பு, முயல், காட்டுப் பூனே, காட்டுக் கோழி முதலியன இரிந்தோடும்; கொக்கு, உள்ளான், நாரை, கள்ளிக் காக்கை, கிளி, பூவை, சிட்டுக் குருவி, தவிட்டுக் குருவி, வர்ணக் குருவி முதலிய பறவைகள் பறந்தும், இருந்தும், பாடியும் மகிழும்; கால்நடைகள் உலவும்; மேயும்; நீர் அருந்தும்; படுக்கும்; உறங்கும்; மக்கள் விளையாடலும் நிகழும். அட்லன் தோட்டம் ஊருக்கு விறகு, பழம், கீரை, எருமுட்டை முதலியன உதவும். அதை இராயப்பேட்டையின் வனதேவதை என்று கூறலாம்.

5. இராயப்பேட்டை தோட்டங்களுக்குப் பேர்பெற்றது. அம்மையப்ப முதலி வீதி முனையிலுள்ள ஒரு சிறு சந்தில் நுழைந்து சென்றால் வேல் முதலியார் தோட்டம், மாசிலாமணி முதலியார் தோட்டம், அப்பாசாமி முதலியார் தோட்டம், முனிசாமி முதலியார் தோட்டம், அய்யாசாமி முதலியார் தோட்டம், செருக்காத்தம்மாள் தோட்டம், அரங்கநாத முதலியார் தோட்டம், திவான் சாயப் தோட்டம், மன்னுத முதலியார் தோட்டம், பூங்காவன முதலியார் தோட்டம், திருமழிசை முதலியார் தோட்டம், திருப்பளி முதலியார் தோட்டம், (திரும்பினுல்) சலவன் தோட்டம், பச்சையப்ப முதலியார் தோட்டம், மாங்காட்டு முதலியார் தோட்டம், செந்தாமரை முதலியார் தோட்டம், மூலத் தோட்டம், கன்னித் தோட்டம் போய்த் திரும்பிக் கோலக்காரன் தோட்ட வழியே புகுந்து, மீண்டும் அம்மையப்ப முதலி தெருவை அடையலாம். இத்தோட்டப் பரப்பை என்னென்று சொல்வேன்? பசுங்கடல் ஒன்று பொங்கிப் பரவிய ஒரு பெருந் தேக்கம் என்று சொல்லலாம். இராயப்பேட்டையின் மலையும் ஆறும் காடும் கடலும் எங்கே? அவை எங்கே போயின? அவை மறைந்தன. அவ்விடங்களில் பலவித புரங்கள் தோன்றியுள்ளன. மயிலாப்பூர் ஏரி, தியாகராயநகராக மாறினமையால், இராயப்பேட்டை தன் பழங்காலக் காட்சியை எப்படி வழங்குவதாகும்? பழைய இராயப்பேட்டை வேனிலிலும் மக்களை வதைப்பதில்லை. ஒய்வு நல்வழியில் செலவாகும்.

## கல்வி முறை

6. யான் விடியற்காலத்தில் எழுவேன்; பழம் பாடங்களைப் படிப்பேன்; புதிய பாடங்களையும் நெட்டி நெட்டிப்

பார்ப்பேன் ; விளங்காத இடங்களை இராயப்பேட்டையில் வதியும் நல்லாசிரியரை அணுகித் தெளிவு செய்து கொள் வேன். அவைகள் பின்னே பள்ளிக்கூடத்தில் போதிக் கப்படுங்கால் பழமையாகவே தோன்றும். எக்கூத்தாடி னும் நான் படிப்பில் கண்ணுங் கருத்துமா யிருப்பேன்.

## பிள்ளை விளையாட்டு

7. காலையில் சில மாணுக்கர் என் வீட்டுக்கு வருவர். அவருடன் யான் தோட்டங்கட்குப் போவேன். ஒவ் வொரு நாள் ஒவ்வொரு தோட்டம் எங்களை அழைக்கும். தோட்டத்தில் நாங்கள் பலவாறு பிரிந்து பிரிந்து ஆடு வோம். சிலர் ஏற்றமிறைப்பதிலும், கவலையடிப்பதிலும் தலைப்படுவர். அவ்விரண்டிலும் என் மனஞ் செல்வ தில்லை. யான் கிடங்குகளில் நீத்தியெடுத்து இறைத்துப் பார்ப்பேன் ; வெற்றிலை கிள்வோருடன் சேர்ந்துக் கொள் வேன் ; வாழை அறுப்பதில் கருத்துச் செலுத்துவேன். வாழைப் பூக் கொய்வதிலும் தண்டு உரித்தெடுப்பதிலும் எனக்கு வேட்கை அதிகம். அகத்திக் கிளைகளை வெட் டிச் சாய்த்துக் கீரைக் காம்புகளைச் சுமையாகக் கட்டுவ தில் இறங்குவேன். நாங்கள் கூட்டங் கூட்டமாக இறைப் புத் தலைப்புக்களிலும், ஓடைகளிலும் துணி தோய்ப் போம்; குளிப்போம்; ஆடுவோம்; பாடுவோம். எங்கள் ஆடல்கள் தோட்டக்காரருக்கு மகிழ்ச்சி யூட்டும். சிற்சில போது அவர்கள் எங்கட்கு அகத்திக்கீரை, வாழைப்பூ, வெற்றிலை முதலியன தருவார்கள். அவைகளைப் பெரி தும் யான் நல்லாசிரியர் வீடுகளிற் சேர்ப்பேன்.

8. தேனம்பேட்டையிலே ஒரு பெரிய தென்னந் தோப்பு உண்டு. அது சிவசங்கர முதலியாருடையது; அதில் சில மாமரங்களும் இருந்தன. அத்தோப்புக்குள் புக நேரும்போதெல்லாம் அங்கே நாங்கள் பல மணி நேரம் கழிப்போம். எங்கட்கு உச்சிவேளையும் தோன்ருது; பசியும் தோன்ருது. பிள்ளை விளையாட்டு என்னவே செய்யாது! எங்களைக் கண்டதும் மாமரங்கள் அஞ்சும். அவைகள் கொள்ளையாகும். பூ, பிஞ்சிகளும் உதிர்க்கப் படும். மரமேறிகள் இளநீர் கொடுப்பார்கள் அவைகளில் எங்கள் நாட்டம் பெரிதுஞ் செல்வதில்லை. எங்களுள் ஒருவ ராகிய நடேசன் என்பார் மரமேறித் தள்ளும் இளநீரி லேயே எங்கள் நாட்டஞ்செல்லும். யானும் மரமேறுவேன்.

9. ஒவ்வொருபோது எங்கள் கூட்டம் அட்லன் தோட்டத்துள் புகும்; புகுந்ததும் நாங்கள் வானரசேனைகள் ஆவோம் என்று கூறும் அளவில் நின்றுவிடுகிறேன். அட்லன் தோட்டத்துப் பல பொருள்கள் இராயப்பேட்டைக்கு விருந்தாவன. அவைகளுள் ஒன்று சிறந்தது; அது பருங்களாக்காய். அக்களாச் செடி அட்லன் தோட்டம் முழுவதுஞ் செறிந்திருக்கும். அக்களா ஊறுகாயில்லாத வீட்டை இராயப்பேட்டையில் காண்டல் அரிது.

### ஒரு நிகழ்ச்சி

10. ஒரு சமயம் பருங்களா பறிப்பதற்கென்று ஒரு சிறு தொகையினருடன் அட்லன் தோட்டம் போந்தேன். நாங்கள் ஒரு பெருந் தூறுக்குள் நுழைந்து காய் பறித்துக் கொண்டிருந்தோம். அவ்வேளையில் ஒரு தடியன் அங்கே வந்தான்; எங்களை அதட்டினான்; தூறுக்குள் புக முயன்றான். அது கண்ட நண்பரெல்லாங் கலங்கி ஒரு வழியே ஓட்டம் பிடித்தனர். தடியன் அவரைத் துரத்திச் சென்றான். யான் நண்பருடன் கூடி ஓடினேனில்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன். எனக்கு ஒரு வாயில் புலனாயிற்று; அதன் வழியே வெளிவந்து விரைந்து நடந்தேன்; பக்கத்திலுள்ள வெற்றிலைத் தோட்டத்தை அடைந்தேன். அத் தோட்டக்காரரிடம் நிகழ்ந்ததைச் சொன்னேன். அவர், 'எவனோ ஒரு வழிப் போக்கன் உங்களை மருட்டினான்' என்று சில ஆட்களை அட்லன் தோட்டத்துக்கு அனுப்பினார். அவர்கள் ஒருவரையுங் காணாது திரும்பினார்கள். யான் உடைந்த மனத்துடன் வீடு சேர்ந்தேன். மனம் நிலைபெறவில்லை. கவலை பெருகிற்று. சில மணி நேரத்தில் நண்பரெல்லாம் ஒவ்வொருவராக வீடு சேர்ந்தனர். தடியன், தம்மை நீண்ட தூரம் துரத்தி வரவில்லையென்றும், தமது அச்சம் தம்மைச் சிதறவடித்து ஓடச் செய்ததென்றும், எவரெவர் எவ்வெவ்விதம் எவ்வெத் தோட்டவழியே ஓடினரென்றும் விளக்கிக் கூறினர். ஒவ்வொருவரும் "யான் என்ன ஆனேனோ" என்று கவலை கொண்டதைத் தெரிவித்தனர். எனது மனம் உற்ற கவலையை நண்பர்கட்கு அறிவித்தேன். மூன்றாம் நாள், நாங்கள் பெருங்கூட்டமாக அட்லன் தோட்டம் புகுந்து பருங்களாவைச் சூறையாடினோம்.

### குறிப்புரை

(2) கோட்டம் - நாட்டின் ஒரு பகுதி. ஓம்பியது - பாதுகாத்தது.

(3) இறைஞ்சும் - வணங்கும். செஞ்சாலி - ஒருவகை நெல். காய்ந்து - கோபித்து. தகைகின்றன - தடுக்கின்றன. இங்கு தற்குறிப் பேற்ற வணிகள் அமைந்திருத்தலைக் காண்க.

(4) உறையுள் - இருப்பிடம். கூறுகள் - பகுதிகள். முகடுகள் - உச்சிகள். நிறை - வரிசை. ஈட்டம் - கூட்டம். கடுக்கும் - ஒவ்வும். வெய்யோன் - சூரியன். பொருதும் - போரிடும். தூறுகள் - புதர்கள். மூலிகை - வேர். மருத்துவம் - வைத்தியம். இரிந்து - அஞ்சி.

(5) புரம் - நகரம்.

(7) வேட்கை - விருப்பம்.

(8) வாயில் - வழி. புலனுயிற்று - தோன்றிற்று.

### பயிற்சி

#### சொற்கள்

(1) பின் வருவனவற்றை நும் வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—ஒருமைப்பாடு. பொதுவுடைமை. இறுமாந்து. பலவித. கண்ணுங்கருத்துமாக.

(2) எதிர்ப்பதங் கூறுக :—செயற்கை. பெருக்கம். சிற்றூர். உள். தண்மை.

(3) இப்பாடத்திலிருந்து, ஒப்புமைப் பொருள்தரும் சொற்களைப் பொறுக்கி எழுதுக.

(4) இப்பாடத்தில் குறிக்கப்பெற்றிருக்கும் மரங்கள், செடிகள், தூறுகள், மூலிகைகள், கீரைகள்—இவற்றின் பெயர்களை எடுத்தெழுதுக.

#### வினுக்கள்

(1) இக்கால இராயப்பேட்டையின் தன்மைகள் யாவை?

(2) மயிலைக் கோட்டத்தின் கட்டு குலையக் காரணமென்ன?

(3) இயற்கை அன்னை வழிச்செல்வோரை வரவேற்கும் தன்மைகள் யாவை?

(4) மலையையும் அருவியையும் காட்டையும் கடலையும் நினைவூட்டத் தக்க இயற்கைக் கூறுகள் இருந்தன.—அவை யாவை?

(5) அட்லன் தோட்டத்தில் வாழும் பிராணிகளும் பறவைகளும் யாவை?

(6) ஆசிரியர் காலையில் செய்துவந்த காரியங்கள் யாவை?

(7) அக்காலத்துப் பிள்ளைகள் ஆடும் ஆடல்கள் யாவை?

(8) 'நாங்கள் வானர சேனைகள் ஆவோம்'—பொருள் கூறுக.

(9) இராயப்பேட்டையின் வனதேவதை என்பது யாது? அப்பெயர் உண்டாகக் காரணம் யாது?

### இலக்கணம்

(1) இப்பாடத்திலிருந்து தற்குறிப்பேற்றவணி, உவமையணி—இவற்றிற்கு இவ்விரண்டு உதாரணங் காட்டுக.

(2) வேறு, இல்லை, உண்டு—இவை என்ன சொற்கள்? இவை அமைந்த ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(3) **கனிந்து கனிந்து** வீழும்—இஃது என்ன தொடர்? இது போன்ற வேறு சில தொடர்கள் எழுதுக.

(4) தேக்கம். தோற்றம். சுமை. நாட்டம்—இவற்றின் பகுதிகள் யாவை?

(5) கடைசிப் பாராவில் கண்ட நிகழ்ச்சியைப் படர்க்கையில் எழுதுக.

### கட்டுரையாக்கம்

(1) இக்காலத்தில் காணப்படும் ஏதேனும் ஒரு நகர்ப்புறத்தை வருணித்தெழுதுக.

(2) இயற்கைநலம் செழித்த ஏதேனுமோரிடத்துக்கு நீ சென்றிருப்பதாய்ப் பாவித்து ஆங்குள்ள காட்சிகளை விளக்கி எழுதுக.

(3) உன் வாழ்க்கையில் நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 8. சிறு கதை

[திருவாளர் இராவ்சாகிப் எஸ். வையாபுரி பிள்ளை, பி. ஏ., பி. எல்.]

திருவாளர் இராவ்சாஹிப் பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் தலைவராக விளங்குகிறார்கள். அக்கழகத்தார் வெளியிட்ட அரிய தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியராகப் பல ஆண்டுகள் உழைத்து அப்பணியை அவர்களே முடித்துவைத்தார்கள். பல நூல்களைச் சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.



தினமணி காரியாலயத்தார் வெளியிட்டுள்ள 'சிறுகதை மஞ்சரி' என்ற புத்தகத்தின் முகவுரையாகப் பிள்ளையவர்கள் எழுதியுள்ள கட்டுரையினின்று இப்பகுதி எடுத்தாளப்பெற்றுள்ளது. இதனில் சிறுகதை என்ற இலக்கியப் பகுதியின் இலக்கணங்கள் செவ்வனே கூறப்பட்டிருத்தலைக் காண்க.

பல மொழிகளிலுமுள்ள தற்கால இலங்கியங்களில் சிறுகதைகளுக்கு ஓர் உயர்ந்த ஸ்தானம் கிடைத்திருக்கிறது. அவற்றை எழுதியவர்கள் எச். ஜீ. வெல்ஸ், தாமஸ்

ஹார்டி, ஸ்டீவென்ஸன், செஸ்டர்டன் முதலிய பேரறிஞர்கள். இவர்கள் ஆங்கில மொழியில் பெரும் புலமை வாய்ந்தவர்கள்.

2. சிறுகதை எழுதுவது என்பது எளிதான காரிய மன்று. சுவையான நிகழ்ச்சிகளை, சுவையான முறையில் பொருளுக்கேற்ற நடையில் அமைத்துச் சிறுகதை எழுதவேண்டும். மனோபாவனையும் உணர்ச்சி விளக்கும் ஆற்றலும் எழுதுகிறவர்களுக்கு வேண்டும். இவை எல்லாருக்கும் வாய்க்குமா?

3. சிறுகதைக்குரிய விஷயங்கள் நம்மைச் சுற்றிச் சூழப் பெருவாரியாய்க் கிடக்கின்றன. அவற்றுள் இயைபும் சுவையுமுள்ள நிகழ்ச்சியைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். இவ்வாறு தெரிந்தெடுப்பதும் எல்லாருக்கும் முடியாது. ஓர் உதாரணம்: ஓர் இளைஞர்; நல்ல அறிவாளி; நன்றாக எழுதும் ஆற்றலுள்ளவர்; அவர் தம் வாழ்நாளிற் பெரும்பகுதியை வட இங்கிலாந்திற் கழித்தார். அவ்விடத்தில் தம் ஆற்றுலுக்கேற்ற நூல்-விஷயம் அதிகமாக இல்லையே என்று அதிக வருத்தமடைந்தார். கடைசியாக லண்டனுக்கு வந்து சேர்ந்தார். அங்கேயுள்ள பரபரப்பும், வியாபார முயற்சிகளின் நெருக்கடியும், அரசியல் நெறியின் வக்ர கதியும், பொதுமக்கள் இன்பந் தேடியலையும் வாழ்வுச் சுழற்சியும் கண்டு பிரமித்துப் போய்விட்டார். கருதிய விஷயமொன்றும் அவருக்குக் கிடைக்கவில்லை; வெறுங்கையோடு வீடு திரும்பினார். அதே சமயத்தில் லண்டனிலிருந்த ஓர் இளைஞர்; எழுத்தாளனுக்கு வேண்டுந் தகுதிகளெல்லாம் வாய்ந்தவர்; கிராம வாழ்க்கையைப்பற்றி ஒரு நூல் எழுத முயன்று கொண்டிருந்தார். முன் குறித்த இளைஞரது ஊருக்கே சென்று சிலகாலந் தங்கி அங்குள்ள வாழ்க்கை நிலையை நன்றாக நோக்கியுணர்ந்தார். தாம் விரும்பிய விஷயங்கள் அவருக்கு அங்கு ஏராளமாகக் கிடைத்தன. அவற்றையெல்லாம் நன்றாகப் பயன்படுத்திச் சிறந்த நூலொன்றையெழுதி வெளியிட்டுப் புகழ்பெற்றார்.

4. சிறுகதைகள் பலதிறப்படும். காதற் கதைகள், துப்பறி கதைகள், சாஹஸக் கதைகள் என்பன இவ்வகையுள் ஒரு சில. இவற்றை எழுதித் தன்னிகரில்லா வெற்றி பெறுவது மிகவும் அருமை. இவை ஒவ்வொன்றையும் எழுதத் தனித் தனியான ஆற்றல் வேண்டும். இவ்வாற்றல்களைக் குறித்து விவரிப்பது இங்கே எடுத்துக்

கொண்ட விஷயத்திற்குப் புறம்பானது. ஆனால், ஒன்று மாத்திரம் கூறுவேன். பலவகைப்பட்ட சிறுகதைகளும் எழுதுவதிற் பெரும் பெயர் பெற்ற ஆசிரியர்களின் நூல்களை மீண்டும் மீண்டும் கற்று, அவற்றின் நலங்களைக் காரணத்தோடு தெரிந்து உணர்ந்தவர்களுக்குத்தான் இத்துறையில் வெற்றி பெறுதல் இயலும். நமது நாட்டில் ரவீந்திரநாத டாகுர் என்ற பெருங் கவிஞர் சிறுகதைகள் பற்பல எழுதியிருக்கிறார். இவை மனுஷ்யப் பிரயத்தனத்திற்கு அப்பாற்பட்ட அபூர்வ மேதாவிலாஸத்தால் தோன்றியன. என்றாலும், இவைகளை நன்றாகக் கற்றால், சிறுகதையின் பேரெல்லையை ஒருவாறு உணரக்கூடும்.

தமிழ் எழுத்தாளர்கள் கையாளவேண்டும் தமிழ் நடையைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டாமா? அலங்கார நடை அழகைக் கெடுத்துவிடும். பொருளின்றி அள்ளி வீசும் சொல்லடுக்குக் கல்லடுக்குத்தான். மிகைச் சொற்கள் நூலுக்குப் பகையேயன்றி வேறில்லை. இவைகளையெல்லாம் அறவே ஒழித்தல்வேண்டும். சம்பாஷணைக்குரிய நடையைக் குறித்து **அன்டோனி ட்ரால்லோப்** சொல்லுவதைக் கீழே தந்திருக்கிறேன்:

5. "பொதுமக்களின் சாதாரணப் பேச்சு சிறிய, கூரிய, விளக்கமுள்ள வாக்கியங்களாக இருக்கும். இவை பெரும்பாலும் முற்றுப்பெறாத வாக்கியமாகவும் அமையும். கற்றவர்கள்கூட இலக்கணப் பிழையுள்ள பேச்சுக்களைப் பேசுவார்கள். கதையாசிரியன் சம்பாஷணையை அமைக்கும்பொழுது நடுநெறியிலே செல்லுதல் வேண்டும். இலக்கண நெறி சிறிதும் தவறாது திருத்தமாயமைந்த சம்பாஷணையை ஒருபுறம் ஒதுக்கவேண்டும். இவ்வழுவற்ற சம்பாஷணை 'பாண்டித்ய படாடோபமே'யாகும். மற்றொருபுறம் பொதுஜனங்கள் சாதாரணமாகப் பேசும் இலக்கண வழுக்கள் நிரம்பிய அருவருப்பான சம்பாஷணை வாக்கியங்களையும் ஒதுக்கவேண்டும். இவ்வழுவான சம்பாஷணையை நிகழ்ந்தபடியே எழுதினால், பொதுமக்களை வலித்துக் காட்டி நகைப்பதுபோலாகும்.

6. இயற்கையில் நிகழ்ந்த பேச்சை அப்படியே பெயர்த்தெழுதுவதானால் வேடிக்கை காட்ட முயற்சி செய்வதுபோல் தோன்றும். இலக்கணமாய்த் திருத்தமாய் எழுதுவதானால் இயற்கையோடு பொருந்தாமல் பொய்யாகிவிடும். இவ்விஷயத்தில் மக்களின் இயற்கைதான் எப்பொழுதும் எழுத்தாளனுக்கு வழிகாட்டியாக இருத்

தல்வேண்டும். ஆனால், இவ்வாறு மக்களியற்கையைப் பின்பற்றுவதில் தன் கையிலுள்ள கருவி பேனா என்பதையும், மக்களியற்கையை உணரவல்ல வாசகர்கள் தன்னிடத்துக் கலைத் திறமையையும் எழுத்து வன்மையையும் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் எழுத்தாளன் நன்றாக நினைவில் வைத்தல்வேண்டும்.''

7. இவ்வாறு கூறிய ஆசிரியர் இறந்து சுமார் ஐம்பது வருஷங்களாகின்றன. ஆனால் அவர் சொல்லியது எப்பொழுதும் இறவாத உண்மை. தமிழாசிரியர்கள் இவரது கொள்கையைப் பின்பற்றி எழுதுதல் அவசியமாகும்.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக :—1. பெருவாரி. 2. இயைபு. 3. வாழ்வுச் சுழற்சி. 4. வக்ரகதி. 5. புறம்பு.

(2) இப்பாடத்தில் வந்துள்ள வடமொழிச் சொற்களை எடுத்தெழுதி, அவை எப்பொருளில் வந்துள்ளன என்பதைக் குறிப்பிடுக.

(3) பிரித்தெழுதுக :—i. தன்னிகரில்லா. ii. பேரகராதி.

### வினாக்கள்

(1) இலக்கிய வகைகளுட் சிலவற்றைக் கூறுக.

(2) சிறு கதைகள் அமையவேண்டிய விதங்கள் யாவை?

(3) சிறு கதைகளுக்குரிய விஷயங்கள் எங்குக் கிடைக்கும்?

(4) சிறு கதை வகைகளுட் சிலவற்றைக் குறிப்பிடுக.

(5) தமிழ்நடை எவ்வெவ்வாறு குற்றப்படும்?

(6) சம்பாஷணையை அமைக்கும்போது நடுநெறியிலே செல்லுதல் வேண்டும்—நடுநெறி என்பது யாது?

(7) எழுத்தாளனுக்கு வழிகாட்டியாய் இருப்பது எது?

(8) எழுத்தாளன் நினைவில் இருத்தவேண்டியவை யாவை?

### இலக்கணம்

(1) 6-வது பாராவிலுள்ள வேற்றுமையுருபுகளைக்கொண்ட சொற்களை எடுத்தெழுது. அவை எவ்வெவ்வேற்றுமையெனக் கூறுக.

(2) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களாலான சொற்களைக் குறித்தபடி மாற்றுக :—

(i) அருவருப்பான சம்பாஷணை **வாக்கியங்களை** ஒதுக்க வேண்டும் (எழுவாயாக மாற்றுக).

(ii) **தமிழாசிரியர்கள்** இவரது கொள்கையைப் பின்பற்றியெழுதுதல் அவசியமாகும் (6-ஆம் வேற்றுமையாக மாற்றுக.)

(iii) இவ்வாறு தெரிந்தெடுப்பதும் **எல்லாருக்கும்** முடியாது (3-ஆம் வேற்றுமையாக மாற்றுக.)

(iv) சிறு **கதைகள்** பலவகைப்படும் (7-ஆம் வேற்றுமையாக மாற்றுக).

**கட்டுரையாக்கம்**

நீ படித்த ஒரு சிறந்த சிறு கதையின் சுருக்கத்தை எழுதி அதன் சிறப்பியல்களையும் கூறுக.

## 9. சேக்கிழார்

### தன்மை அணி

[திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், B.A.]



கோவை - வழக்கறிஞர் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தாம்பெற்ற தமிழறிவையும் சமய அறிவையும் பிறருக்கு அளிப்பதையே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டுள்ளபெரியார்களுள் ஒருவர். சேக்கிழார் சுவாமிகள் இயற்றிய பெரிய புராணத்தை அவர்கள் விரிந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் விளக்க உரைகளுடனும் பதிப்பித்து வருகின்றார்கள். அவர்கள் 1930ஞு ஜனவரி பிப்ரவரி மாதங்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவின்கீழ், சேக்கிழார் சுவாமிகளையும் அவர்களது நூலையும் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். அவ்வுரைகளின் பகுதியாகிய ஒன்றே இங்குப் பாடமாக அமைந்துள்ளது.

இதனில் தன்மை அணியின் தன்மைகளும், அவ்வணி பெரிய புராணத்தில் அமைந்துள்ள விதங்களும் காட்டப் பெற்றுள்ளன. உள்ளதை உள்ளவாறு கூறுதலில் உள்ள சிறப்பு தமிழ்ப் புலவர்களால் எவ்வாறு கையாளப்பட்டது என்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டாகும்.

தன்மையாவது, குறித்த பொருளை உள்ளது உள்ளவாறே அழகு பெறக் கூறுதலாம். இதனை இயற்கை வருணனை (Natural Description) எனவும் கூறுவர். இது ஆங்கிலத்திலே மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவதாகிச் சேக்ஸ்பியர் (Shakespeare), மில்டன் (Milton) முதலிய மகாகவிகளிலே காணப்பெறும் பேரழகுகளில் ஒன்றாய் விதந்து பாராட்டப் பெறும். இதனை நம் தமிழ்ப்

புலவர் கையாளுகிறதில்லை என்ற குறையும் சிலர் கூறுவர். ஆனால் நமது சேக்கிழார் பெருமானுர் இதனை எவ்வகையில் வைத்து ஆண்டிருக்கிருர்கள் என்று பார்ப்போம்.

"எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை; அதுதான்
பொருள் குணஞ் சாதி தொழிலொடு புலனும்"

என்று இதன் இலக்கணத்தை ஆசிரியர் வகுத்தனர். எவ்வகைப்பட்ட பொருளையும் உண்மைக் கூறு பாட்டிலே விளக்குஞ் சொன்முறையாற் பாடப்படுவதே தன்மை யென்னும் அணியாம் என்ருயிற்று.

2. ஒரு பொருளை உள்ளவாறு கூறுவதெவ்வாறு? ஒரு வாவியை யெடுத்துக் கொள்வோம். 'அது ஒரு நாழி சுற்றளவிருக்கும். மழைக்காலத்தில் தண்ணீர் நிறைந்தால் 10 அடி ஆழமிருக்கும். கரைகள் 20 அடி உயரம்' என்பதுபோல வெல்லாம் கூறுவதும்; இதுபோலவே, ஒரு பசுவைப் பார்த்து, 'அது வெள்ளை நிறம், கொம்பு ஒரு அடி, வயது நான்கு, இரண்டு படி பால் தரும்' என்பதுபோலக் கூறுவதும்; ஒரு பெண்ணைப் பார்த்து, 'அவள் நிறம் சிவப்பு, ஐந்தடி உயரம், மெலிந்தவள்' என்பனபோலக் கூறுவதும்; இன்னோரன்ன பிறவும் உண்மைக் கூறுபாடேயாம். ஆயினும் இவை குறித்த பொருள்களின் விவரணங்களாகுமே யன்றித் தன்மை என்ற செய்யுளணியாகா என்பதை யாவரும் ஒப்புவர். இனிச் செய்யுளணியாய்க் கருதப்பெறும் தன்மையணிகளின் உதாரணங்கள் சிலவற்றைப் பெரிய புராணத்திலிருந்து காண்போம். இவற்றைச் சிறிது ஊன்றிப் பார்ப்போமானல் இவ்வணியை நயம்பெற அமைப்பதில் ஸ்ரீ சேக்கிழார் பெருமானுக்கு ஒப்பாரும் மிக்காரும் ஆகிய கவிவாணர் தமிழ் மொழியிலே மட்டுமன்றி ஏனை ஆங்கில முதலிய பல மொழிகளிலுங் கூட இல்லை என்றே துணிந்து சொல்லலாம்.

3. "காலெல்லாம் தகட்டு வரால்"

—திருநாவுக்கரசு நாயனர் புராணம் 4

என ஓரிடத்தில் வரால் மீனின் உடம்பின் தன்மை கூறுகிருர்.

"..............பூமலி தேமாவின்
காவி னறுங்குளிர் நீழ லுறங்குவ கார்மேதி

—ஆனய நாயனர் புராணம் 2

என்று எருமைகளின் செயலைக் கூறுமிடத்து எத்தனை உவப்பான நயங்கள் உள்ளத்தே தோன்றுகின்றன!

## வேடர்சேரி

4. குறிஞ்சி வாசியர்களாகிய குறவர் தன்மையைச் சென்று காண்போம்.

"குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்திரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியின் எண்குங் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும்"

"வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னோடும்
புன்றலைச் சிறும கார்கள் புரிந்துட னாட லன்றி
அன்புறு காதல் கூர அணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி யாடும் எயிற்றியர் மகளி ரெங்கும்"

—கண்ணப்ப நாயனார் புராணம் 3, 4

மலைவாழ்நகராகிய வேடர்களது சேரியின் தன்மையைத் தன்மை யணியிலேயே இங்கு நம் முன் காண்கின்றோம். வேட்டைக்கு மிக உதவியாகும் தொங்கிய காதுகளுடைய நாய்களும், அங்குள்ள விளாமரத்திலே தொங்க விடப்பட்ட வார்வலையும், முற்றங்களில் பழக்கி வளர்க்கப் பட்டுத் தத்தம் இனமாகிய ஏனைய விலங்குகளை அகப்படுத்துக்கொண்டு வருதற்காகப் பயிற்சி செய்யப்பெற்ற காட்டுப் பன்றி - புலி - கரடி - கடமை - மான் முதலிய பார்வை மிருகங்களும், வீட்டின் முன் பாறையா லியன்ற முற்றத்தில் உணவின் பொருட்டு உணங்கும் ஐவன அரிசியும் நம் கண்முன் வருகின்றன. வேடர் சிறுவர் அங்குள்ள புலிக் குட்டிகளுடனும் யானைக் கன்றுகளுடனும் விளையாடலையும், அச்சிறுமியர் மான்பிணைகளுடன் விளையாடலையும் காண்கின்றோம். மலையில் வாழும் வேடர் சேரியின் இயல்பையும், அங்குள்ள மாவும் உணவும் தொழிலும் ஆகிய பொருள்களையும் ஆசிரியர் மிக உருசிபெற இப் பாட்டுக்களாலே படம்வரைந்து காட்ட, நாம் உள்ளதை உள்ளபடியே நம் கண்முன் நிற்பதுபோலக் காண்கின்றோம்.

5. மலையிலிருந்து மிறங்கி ஊர்கள், நகர்கள், நகர்ப் புறங்கள், சேரிகள் முதலியவற்றைச் சிறிது பார்ப்போம். பெரிய ஊர்களிலும் நகர்களிலும் உள்ள மக்களையும், மாட

மாளிகை முதலியவற்றையும் உள்ளபடி எடுத்துக் காட்டுவ தென்றால், அது பெரும்பாலும் புலவர்களுக்கு இலகு வானதே. ஆனல் நகர்ப்புறங்களிலும் சேரிகளிலும் தாழ்ந்தவர்களோ, அன்றி, இப்போது சொல்லுகிறபடி தாழ்த்தப்பட்டவர்களோ, இருக்கும் இடங்களைப் பற்றி உண்மைக் கூறுபாட்டில் கூறுவது பெரும் புலவர்களுக்கு அல்லாமல் தகுதி பெற இயலாது.

## புலைப்பாடி

6. புலைப்பாடியை ஸ்ரீ சேக்கிழார் தன்மை நவிற்சி யில் வைத்துக் கூறும் செயலையும் இயலையும் பற்றி நாம் அவருடன்கூட அச்சேரிக்குச் சென்று அவர் காட்டக் காண்போம். ஓர் ஊர்ப்புறத்து ஒரு புலைப்பாடி உள்ளது. அதனை வயல்கள் சூழ்ந்திருக்கும். அந்தப் புலைப்பாடியில் புல்லால் வேய்ந்த பழங்கூரையையுடைய பல சிறு குடிசை கள் உள்ளன. அவற்றில் வாழும் புலையர்கள் அவற்றின் கூரைகளை அடிக்கடி புதுக்க இயலாதவர்களாதலின் அவை பழங் கூரைகளாகவே நிற்கின்றன. ஆனல், பழங் கூரைகள் மழை, காற்று, வெயில் முதலியவற்றால் சிதைந்து போகாதபடி அவற்றிற்குக் காவலாக அப் பழங் கூரைகளைச் சேர்த்துப் பற்றுகின்ற மெல்லிய கைகளை யுடைய கொடிச் சுரைகளை அவற்றின்மேற் படர வைத் துள்ளார்கள். கூரைக்குக் காவலேயன்றி அந்தச் சுரைக் கொடிகள் அவர்களுக்கு உண்ணக் காய்களையும், பாத்திரங் களாகவும் பிறவாறாகவும் வழங்க நெற்றுக்களையும் தரு வனவாம். மேலும் ஏனைப் பூசுணி முதலிய போலச் சுரைக்காய்களை இவர்களின் பண்ணையாளிகள் விரும்பார் களாதலின் இவற்றின் விளைபொருள் இவர்களுக்கே முழுப்பயனும் தருவன. அன்றியும், இவர்கள் உண்ணும் இறந்த பிராணிகளின் புலால் முதலியவற்றிற்குச் சுரை கள் ஏற்ற கூட்டுணவுமாம். சுரைகள் பல நாட்களுக்கு நீடித்து வாழும். இத்தகைய காரணங்களால் ஏனைய கொடிகளை விடுத்து இவர்கள் சுரைக் கொடிகளைக் கூரை களின் மேற்படர வைத்தனர். செடிகள் படர வைப் பதற்கு வேறிட மில்லாமல் ஒரு சிறு இடத்தில் பல குடிசை கள் கட்டி வாழ்வதற்குத்தான் இவர்களுக்கு இயல்வதாகை யால் சுரைக் கொடிகளை அவரவர் சிற்றில்களின் கூரை மேற்படர விட்டார்கள். இந்தச் சிற்றில்களின் கூரை புல்லால் வேயப்பெற்றன. வெயில் மழைகளால் விரை

வில் இற்றுவிடக் கூடிய புற்களை இச்சுரைக் கொடிகள் சேர்த்துப்பற்றி மேற்படர்ந்து கொள்வன. இந்தச் சேரியில் வாழும் புலையர்கள் ஏனைச் சிலர்போல் ஊர்தோறும் திரிந்து செல்லாமல் ஊர்ப் புலைமையாகிய குடித்தொழிலில் நிலைத்து வழி வழியாக உழவுத் தொழில் செய்து விருந்தோம்பிக் கிளைஞர்களுடன் மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர். மேலே காட்டியவும் பிறவுமாகிய இத்தன்மைகளை யெல்லாம் மிக அழகாகச் சேக்கிழார் சுவாமிகள் திருநாளைப் போவார் நாயனுர் புராணத்திலே அந்நாயனுர் வாழ்ந்த ஆதனூர்ப் புலைச்சேரியை எழுதிக் காட்டிய தன்மையணியிலே நாம் உள்ளது உள்ளவாறே காண்கிறோம்.

"மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயல்மருங்கு பெருங்குலையில்
சுற்றம்விரும் பியகிழமைத் தொழிலுழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச் சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிலைத்துளதோர் புலைப்பாடி"

## நெய்தல்

7. இனி, இங்கிருந்து நெய்தல் நிலமாகிய கடலைச் சார்ந்த வலைஞர் சேரிக்குச் சேக்கிழார் சுவாமிகளைப் பின் தொடர்ந்து சென்று காண்போம். நாகப்பட்டினம் என்பது ஒரு பெரும் கடற்றுறைமுகப் பட்டினம். மலையிடத்திலே தினையும் தேனும் போலவும், ஊரிடத்திலே நெல்லும் கரும்பும் போலவும், கடற்றுறையிடத்திலே மீன் உணவே மிகுதியாம். இது, இயற்கையின் அமைப்புக்களிலே ஒன்று. யாவர் யாவர் யாங்கு யாங்கு வசிக்கின்றனரோ ஆங்கு ஆங்கு இயல்பிற் கிடைப்பனவற்றையே உணவாகக் கொள்வர் என்பது இயற்கை. இவ்வாறு துறைமுகத்தினர் மீன் மிகு விருப்பினராதலைப் பிற முகத்தினர் எடுத்துக் காட்டுதல் பரிகசித்தவாருகாது. இது அவர்க்குப் பழைய வழக்காதலால் இதனை அவர்கள் விடுதலும் கடினமென்பார்.

"அந்நெ டுந்திரு நகர்மருங் கலைகடல் விளம்பிற்
பன்னெ டுந்திரை நுரைதவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னு தொன்மையின் வலைவளத் துணவினின் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது தடநுளைப் பாடி"

—அதிபத்த நாயனுர் புராணம் 5

## குறிப்புரை

(1) இச் சூத்திரம் தண்டியலங்காரம் என்ற நூலில் கண்டது. பொருள் தன்மை, குணத் தன்மை, சாதித் தன்மை, தொழில் தன்மை எனத் தன்மை நவிற்சியணி நால்வகைப்படும். உண்மைக் கூறுபாடு - உள்ளபடி சொல்லும் வகை. சொன்முறையால் - சொற்களை அமைக்கும் முறையால்.

(2) வாவி - குளம். இன்னோரன்ன - இப்படிப்பட்ட. பெரிய புராணம் - சேக்கிழார் சுவாமிகளால் இயற்றப்பட்ட நூல். பெரியார்களைப் பற்றிக் கூறும் புராணம் என்பது பொருள். இங்குப் பெரியார்கள் என்பது சிவனடியார்களைக் குறிக்கும்.

சேக்கிழார் - அநபாய சோழனிடம் மந்திரியாயிருந்து பெரிய புராணத்தை இயற்றியவர்.

(3) தகட்டு வரால் - தகடுபோன்ற வரால். கால் - வாய்க்கால். இப்பாடலைச் செய்யுட்பகுதியிற் காண்க. கா - சோலை. நறும் - மணமுள்ள. நீழல் - நிழல். கார்மேதி - கரிய எருமை.

(4) குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும். கொடுஞ்செவி ஞமலி - வளைந்த காதுகளையுடைய நாய். ஆர்த்த - கட்டிய. விளவின் கோடு - விளாமரத்தின் கொம்பு. எண்கு - கரடி. கடமை - ஒருவகை மான். பார்வை - பழகின மிருகம். முன்றில் - வீட்டின் முன்புறம். ஐவனம் - ஒருவகை நெல். உணங்கும் - காயும். குருளை - குட்டி. வயம் - வெற்றியுள்ள. கரி - யானை. புன் தலை - அற்பமான தலையையுடைய. மகார் - பிள்ளைகள். எயிற்றியர் - குறத்திமார்.

(6) புலைப்பாடி - பறைச்சேரி. கிளை துவன்றி - சுற்றத்தார் நெருங்கி. குரம்பை - கூரை.

(7) நெய்தல் - கடலும், கடல் சார்ந்த இடமும். பாங்கரின் ஞாங்கர் - கரையோரம்.

## பயிற்சி

### சொற்கள்

(1) இரு பொருள் கூறுக:—அணி, கரை, தன்மை, கோடு, நகர்.

(2) பொருள் கூறுக:—விதந்து, ஞமலி, எண்கு, மலை, பார்வை, குருளை, நம்பி, துறைமுகம், நவிற்சி.

(3) எதிர்ப்பதங் கூறுக:—குறை. உண்மை. புறம். பல.

### வினாக்கள்

(1) தன்மை அணி என்பது யாது? அதன் வகைகள் யாவை?

(2) எருமையின் தன்மையை ஆசிரியர் கூறியது எவ்வாறு?

(3) குறவர் இயல்பு எவ்வாறு கூறப்பட்டது?

(4) பார்வை மிருகம் என்றால் என்ன?
(5) சுரை மக்களுக்குப் பயன்படுவது எங்ஙனம்?
(6) வலைஞரின் உணவு யாது? அஃதேன் அவ்வாறமைந்தது?

### இலக்கணம்

(1) உயர்வுநவிற்சி யணிக்கு ஓர் உதாரணம் கொடுக்க.

(2) பிரித்துக் காட்டுக :—கடற்றுறை. தகட்டுவரால். எவ்வகை. சற்றளவு. கார்மேதி. தத்தம்.

(3) 4-வது பாராவினுள் அமைந்த பாடல்களிற் கண்ட பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி அவற்றின் வகைகளையும் குறிக்க.

### கட்டுரையாக்கம்

(1) ஒரு குளக்கரைக் காட்சியைத் தன்மையணி அமையச் சில வாக்கியங்கள் எழுதுக.

(2) ஒரு கோயிலையும் அதன் கோபுரங்களையும் உவமைகள் காட்டி வருணிக்க.

## 10. பண்டைக் கைத்தொழில்கள்

[திருவாளர் இராவ்சாஹிப்-மு. இராகவையங்கார் அவர்கள்]



திருவாளர் இராவ்சாஹிப் மு. இராகவையங்கார் அவர்கள் ஸேது ஸமஸ்தானத்தின் தலைநகரான இராமநாதபுரத்திலுள்ள ஒரு பெரும் புலவர் குடியில் (1878-இல்) தோன்றியவர்கள். இவர்கள் இளமையிலேயே செந்தமிழ் என்னும் சிறந்த தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்து பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வந்தார்கள். பிறகு சென்னைப் பல்கலைக் கழகத்தார் தயாரித்துவந்த தமிழ்ப் பேரகராதியின் வேலையில் ஈடுபட்டு அது முடிவுபெறும் வரையில் ஆங்குத் தலைமைத்தமிழ்ப் பண்டிதராய் இருந்து வந்தார்கள். இப்பொழுது இவர்கள் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தை யொட்டிய ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராக விளங்குகிறார்கள்.

இங்குப் பாடமாக அமைந்துள்ளது திரு. ஐயங்காரவர்கள் செந்தமிழ்ப் பத்திரிகையில் (7-ஆவது தொகுதி) எழுதிய, 'பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள்' என்ற கட்டுரையின் ஒரு பகுதியாகும். இதனில் ஆசிரியர் அவர்களுடைய நடைச் சிறப்பும், பொருட் செறிவும், ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனும் நன்கு விளங்கும்.

1. ஆரிய மக்களால் 'புண்ணிய பூமி' என்று கருதப்படும் இவ் விந்தியாவுக்குப் பரத கண்டம், பாரத வர்ஷம் முதலிய பெயர்கள் முன்னுண்முதல் வழங்குவது போலவே, இதற்குக் 'கர்ம பூமி' என்னும் பெயர் வழக்கும் உண்டு. 'கர்மபூமி' என்ற தொடர்க்கு வெவ்வேறு பொருள்கள் இப்போது கூறப்படுகின்றன. கேவலம் வைதிக கர்மங்கள் பரதகண்டத்திலன்றி வேற்று நாடுகளிற் செய்யப்படின் பயனளியாவாதலால், அப் பெயர் பெற்றதென்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார் சுவர்க்க நரகங்கள் இன்ப துன்பங்களை அநுபவித்தற்குரிய இடங்களாதலால் அவை 'போக பூமிகள்' எனவும் அவ்வின்பதுன்ப அநுபவங்கட்குக் காரணமான நல்வினை தீவினைகள் செய்யப்படும் இடம் இப் பரதகண்டமின்றி வேறில்லையாதலின் இது 'கர்மபூமி' எனவும் பெயர் பெற்றது என்று கூறுவர். இப்பொருள்கள் ஒருவாறு இசைத்துக் கூறப்பட்டனவேனும் அத்தொடரை வழங்கிய முன்னோர்களிலே ஒரு சாராரின் எண்ணம் இன்னும் விரிந்ததாகும். அத் தொடரிலுள்ள 'கர்மம்' என்பதை வைதிக கர்மமொன்றிற்கே கொண்டு பொருளைக் குறுக்கியும் நற்கருமத்துடன் தீக்கருமமும் செய்தற்குரிய இடம் என ஒன்றைக் கூட்டியும் கூறாமல், 'உயர்ந்த தொழில்களையே செய்தற்குரிய பூமி' என்பதே முன்னோர் கருத்து என்க. அஃதாவது, அவ்வவ் வருணத்தார் ஜீவனோபாயத்துக்குரிய நற்கருமங்களை முறைப்படி செய்துவந்த பூமி இப் பரதகண்டமாதலின் இது 'கர்மபூமி' எனப்பட்டதென்பதாம். முன்பு, அவ்வவ் வருணத்தார் தத்தம் செய்தொழிலைக் குறைவறப் புரிந்து விளங்கிய பாரத நாட்டில், பிற்காலத்து வர்ணங்களும் கர்மங்களும் தலைதடுமாறினமையால் கர்மபூமி என்னுந் தொடர்ப் பொருளுந் தடுமாறியது போலும்!

2. இனி, இக்கர்மபூமிக்குரிய அறுவகைத் தொழில்களிலே, உழவும் வாணிபமுமே தலைசிறந்தன என்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்தது. ஒரு நாட்டின் மேம்பாட்டுக்கு இவ்விரண்டு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் இன்றியமையாததாகும். இவ் விரண்டில் ஒன்று செழித்து ஒன்று செழித்ததில்லையேல், அந் நாடு பரிபூர்த்தி பெற்ற வளமுடையதென்று சொல்லத் தகாததாம். நம் தமிழகமோ முற்காலத்தே இவ்விரண்டு தொழில்களும் குறைவறப் பெற்றிருந்ததென்பதற்கு எண்ணிறந்த சான்றுகளுள்ளன.

வணிகர்க்கு முக்கியமாக வேண்டப்படுங் குணங்கள் பழைய நிகண்டான திவாகரத்திலே பின்வருமாறு கூறப்படுகின்றன:—

"தனிமை யாதல், முனிவில னாதல்,
இடனறிந் தொழுகல், பொழுதொடு புணர்தல்,
உறுவது தெரிதல், இறுவதஞ் சாமை,
ஈட்டல், பகுத்தல் என்றிவை யெட்டும்
வாட்ட மில்லா வணிகர தியற்குணம்."

வியாபார முறைக்கு வேண்டியனவாக இக்காலத்தாரால் சொல்லப்படுங் குணங்களில் முக்கியமானவை இவ்வெட்டுமேயன்றோ. இவற்றுள் 'தனிமையாதல்' என்னுங் குணம் வியாபாரத்துக்கு உரியதாக முன்பு கருதப்பட்டது. 'கொள்ளைக்குப் போனாலும் கூட்டுப் பங்குதவாது' என்பது நம்மவர் பழமொழி. கூட்டு வர்த்தக முறையில் இக்காலத்துப்போல எண்ணிறந்த சௌகரியம் முன்பு அமைந்திராமையால் அஃது ஒதுக்கப்பட்டது போலும். ஆயினும் அக்கூட்டு வியாபாரமும் முன்னிகழ்ந்ததேயென்பதும், அக்காலவியல்புக்கு அது பெரும்பாலும் ஒவ்வாததாயிற்றென்பதும், 'தனிமையாதல்' என ஒன்றை எடுத்துக் கூறுதலானே உய்த்தறியப்படும். மனு முதலிய நீதிநூல்களிற் சொல்லப்படும் பதினெட்டு வியவகார பதங்களில் 'கூடி மேம்படல்'—அஃதாவது, கூடியில்பம் சம்பாதித்தலும் ஒன்றாக விருத்தலால், முற்காலத்தே அவ்வியாபார முறைமை நழுவப்பட்டிருத்தல் காண்க. இனி, தனிமையாதலென்பது கூட்டு வியாபாரத்தை விலக்காது, வாணிபத் தொழிலில் சுதந்திரமுடையனாதல் என்பதைக் குறிக்கும் எனினும் அமையும்.

3. இத்தகைய குணங்களுடன் தமிழ் மக்கள் பண்டைக் காலத்தே அந்நிய நாடுகளிலும் உண்ணாடுகளிலும் தங்கள் வாணிப நிலையைப் பெருக்கி வந்தார்கள். வெளி நாடுகளுடன், இவர்கள் முக்கியமாகச் செய்து போந்த வியாபாரம் துணி, மணி, மிளகு முதலியனவாம். நம் நாட்டில் நெய்யப்பட்ட துணிகள் மிகப் பழங்காலத்திலேயே அந்நியரால் பேராச்சரியத்துடன் புகழப்பட்டுள்ளன. ஏறக்குறைய இற்றைக்கு 2400 வருஷங்கட்கு முன்பிருந்தவரும், 'சரித்திர வாசிரியர்க்கெல்லாந் தகப்பன்' என்று புகழப்படுபவருமாகிய 'ஹெரடோடஸ்' என்னும் யவனாசிரியர் நமது பஞ்சைப்பற்றிப் பேசும்போது, "அங்கு (இந்தியாவில்) மரங்களில் வளரும் உரோமம்" என்றும்,

"அஃது ஆட்டு ரோமங்களால் உண்டாம் கம்பளிகளினும் விசேடமானது" என்றுங் கூறுகின்றார். இத்துணி நெய் தற்றொழில் இலக்கியங்களில், 'காருக வினை' என்று கூறப்படும். தத்தம் கிருகங்களில் இருந்துகொண்டே செய்துவந்த தொழிலாதலின் அப்பெயர் பெற்றது. முற்காலத்தே, தத்தம் வீடுகளிலேயே அருமையான ஆடை வகைகள் நெய்வதற்கு வேண்டிய நுண்ணிய நூலிழைகள் முழுதும் பெண்பாலரால் நூற்கப்பட்டு வந்தன என்பதற்குப் பற்பல மேற்கோள்கள் தமிழிற் காணலாம். பஞ்சு நூலையும் படிப்பு நூலையும் ஒற்றுமைப் படுத்துமிடத்தில் பவணந்தி முனிவர்,

"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு"

என்று கூறுகின்றார். சொல்லானது பஞ்சாகவும், அச்சொற்களால் தொடுக்கப்படும் தொடை இழையாகவும், புலவனே அவ்விழையை நூற்கும் பெண்ணாகவும், அப்புலவனது வாயே கையாகவும், அவன் அறிவே கதிராகவும்—இவ்வாறு பஞ்சிநூல் போலப் படிப்பு நூலும் அமைகின்றது என்பது இப்பாட்டின் கருத்து. இதனுள், புலவனைப் பெண்ணாக வைத்து உருவகப்படுத்திக் கூறியதனாலேயே, நூல் நூற்றல் பெண்டிர்க்கன்றி ஆடவர்க்கு அதிக உரிமையில்லாதிருந்த தொழில் என்பது தெளிவாகும்,

"நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளால்
கைவண் மகடூஉத் தன்செயற் கைநலந்
தோன்ற ஓரிழைப் படுத்தலால் உலகத்து
நூல் நூற்றல் என்பது"

என்று இறையனார் களவியலுரையிற் காணுந் தொடரும் இக் கருத்தையே வற்புறுத்தல் காண்க. ஆகவே, மகளிர் நூற்ற நுண்ணிய நூலிழைகளே, பழங்காலத்திற் சிறந்த ஆடைகளாகி அரசர் முதலியவரை அலங்கரித்து வந்தன என்பது பெறப்படும்.

4. "நம் தேசத்தில், கைம்பெண்களின் தொகை மிகுதிப்பட்டு வருதலால், அவர்கள் வருத்தமின்றிச் சீவிப்பதற்கு இராட்டினமாகிய 'சர்க்கா' வேலை இன்றியமையாதது" என்று நம் நாட்டுத் தலைவர்கள் கூறியுள்ளதைப் பலரும் அறிவர். இந் நூற்றற்றொழில் பொதுவாக மகளிர்

கையாண்டதாயினும், சிறப்பாகக் கைம்பெண்களுக்கு மிகவும் ஏற்ற விருத்தியாக முற்காலத்தில் அமைந்திருந்ததாகும். உயர்ந்த ஆடைகள் உண்டாக்குதற்குரிய பஞ்சுப் பனுவல்கள் தம்மைப் போஷித்தற்குரிய கணவரையிழந்த மகளிரால் அரும்பாடுபட்டு நூற்கப்பட்டு வந்தன. இவ்வாறு பெண்டிர் நூற்கும் வழக்கம் இன்னும் நம் நாட்டுள் நடைபெறுவதேயாம். இங்ஙனம் நூற்றுவந்த இழைகளின் சிறப்புப் பற்றியே, பாண்டிய நாட்டில், சிறப்பாக மதுரையிலே செய்யப்பட்ட நுண்ணிய நூலிழைகளையும், ஆடைகளையும், ரத்ன கம்பளங்களையும் பரதகண்டத்திற் சிறந்த வினங்களாகக் கௌடில்யரும் தம் அர்த்த சாஸ்திரத்திற் பாராட்டியுள்ளார். இவற்றின் சிறப்புப்பற்றியே, நூலிழைகளைக் கொண்டு அரிய வேலை செய்து வந்த தொழிலாளர் வாழும் மதுரை வீதியை,

"பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டும் நுண்வினைக் காருக ரிருக்கையும்"

என்று இளங்கோவடிகளும் கூறினர். இவர் கூற்றுள், 'மயிரினும்' என்பதற்கு 'எலி மயிரானும்' என்று பொருள் கூறப்பட்டுளது. இவ் வெலிமயிராடை மிகுந்த குளிரையுந் தாங்கக்கூடியதென்பதும் முன்னோர் கூற்றுக்களால் அறியப்படும். இங்ஙனம் போர்வைக்குரிய மயிருதவும் எலிகளை 'மயிரெலி' என்பர். இவ்வெலியினம் செம்மை நிறமும், பூனையினும் பெரிய உருவும் உடையவாய் மலையிடங்களில் வாழ்வது என்பதும் அறியப்படுகின்றது. இதனால் நாட்டெலிகளினும் வேறுபட்ட பெரிய பிராணி வகை இஃதென்பது விளங்கும். இத்தகைய சாதியொன்று அமெரிக்கா நாட்டில் உள்ளதென்றும், அங்கே கஸ்தூரி எலி என அது வழங்குவதென்றும், பீவர் என்ற பிராணியையும் முயலையும் ஒப்ப மதிக்கப்படுவது இஃதென்றும், இதன் மயிரால் உயர்ந்த ஆடை கம்பள முதலியன செய்யப்படுமென்றும் கூறுவர். இத்தகைய எலியினம் போன்ற வகையே முற்காலத்தில் இத்தேசத்திலும் பெருகியிருந்ததாக வேண்டும். உயர்ந்த ஆடை போர்வை முதலியன நெய்தமைத்தற்கு இப்பிராணிகளின் மயிர்கள் அக்காலத்துப் பெரிதும் உபயோகிக்கப்பட்டு வந்தமையால் அவ்வினமே அழிவுண்டு இக்காலத்து முற்றும் ஒழிந்தனபோலும். குளிரைத் தாங்குவதிற் சிறந்தனவாகவும், அரசரும் செல்வர்களும் உபயோகித்து வந்தனவாகவும் இவ்வெலிமயிராடை நூல்களிற் சிறப்பிக்கப்படுதலின்

விலையுயர்ந்த பொருள்களுள் ஒன்றாக இது விளங்கிய தென்பது பெறப்படுகிறது. இங்ஙனம், பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் நெய்யப்பட்ட ஆடை முதலியவற்றின் பல்வகைப்பட்ட தொகுதி சிலப்பதிகார வுரையால் தெரியவருகின்றது.

## குறிப்புரை

(1) பரதகண்டம் - துஷ்யந்த மன்னனின் மகனான பரதன் ஆண்ட கண்டம்; பாரத வர்ஷம்.

வருணத்தார் - ஜாதியார். அறுவகைத் தொழிலைப் பின்வரும் திவாகரச் செய்யுளால் அறிக:—"உழவு தொழிலே வரைவு வாணிபம், வித்தை, சிற்பமென்றித்திறத் தறுதொழில், கற்கும் நடையது கருமபூமி". பரிபூர்த்தி - முழுமை.

(2) நிகண்டு - சொற்களின் பொருள்களைக் கூறும் நூல். திவாகர நிகண்டு.

வியவகாரபதம் - தொழில்களுக்குரிய சொற்கள்.

முனிவிலன் - கோபமில்லாதவன். இறுவது - அற்றுப்போவது. ஈட்டல் - தொகுத்தல்.

(3) இறையனார் அகப்பொருள் உரை - இறையனார் என்பவர் இயற்றிய அகப்பொருள் நூலின் உரை. உள் + நாடு - உண்ணாடு. பவணந்தி முனிவர் - நன்னூல் என்ற இலக்கண நூலின் ஆசிரியர். கைவன் மகடூஉ - கைத்தேர்ச்சி பெற்ற பெண். விருத்தி - பிழைப்பு.

பஞ்சுப்பனுவல் - பஞ்சு நூல்.

கௌடில்யர் - சாணக்கியர் என்ற பெயருள்ள ஓர் ஆசிரியர். இவர் ஓர் அர்த்த சாஸ்திர நூலை இயற்றியுள்ளார்.

அர்த்த சாஸ்திரம் - பொருள் நூல்.

இளங்கோவடிகள் - சிலப்பதிகாரவாசிரியர்.

காவிரிப்பூம்பட்டினம் - கீழ்கடற்கரையிலுள்ளது. முசிறி, தொண்டி என்பன மேல் கடற்கரையிலிருந்தன.

## பயிற்சி

### சொற்கள்

(1) 'இன்பதுன்பம்' என்றதுபோல, எதிரிடைச் சொற்கள் இணைந்து வருவன வேறு சில கூறுக.

(2) பின்வரும் சொற்களுக்குக் காரணங் காட்டிப் பொருள் கூறுக:—கர்மபூமி, காருகமடந்தை.

## வினாக்கள்

(1) கர்மபூமி என்ற தொடரின் பொருளை ஆராய்க.

(2) போகபூமிகள் என்பன யாவை? காரணத்துடன் கூறுக.

(3) கர்ம பூமிக்குரிய அறுவகைத் தொழில்கள் யாவை?

(4) வணிகர்க்கு வேண்டப்படும் குணங்கள் யாவை?

(5) பண்டைத் தமிழகத்தில் கூட்டு வியாபாரம் உண்டா?

(6) காருகம் என்ற சொல்லின் பொருளென்ன?

(7) புலவரையும் சேயிழையையும் ஒருமைப்படுத்தியதெங்ஙனம்?

(8) நூல் ஆகுபெயரானது எங்ஙனம்?

(9) நூல் நூற்றல் பெண்களின் தொழிலாய் அமைந்தது என்பதை எவ்வாறு அறியலாம்?

(10) 'எலிமயிர்'—இதனைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

## இலக்கணம்

(1) பின் வருவனவற்றிற்குத் தொடரிலக்கணங் கூறுக:—செய்தொழில். தமிழகம். பதினெட்டு. துணிமணி. களவியலுரை.

(2) பிரித்துக் காட்டுக:—ஜீவனோபாயம், தத்தம், நூற்றற்றொழில், முன்னூல்.

(3) பஞ்சிதன் சொல்லா...என்னும் பாடலில் அமைந்துள்ள அணி யாது?

## கட்டுரையாக்கம்

(1) உன் கிராமக் கைத்தொழில்களின் நிலைமையைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

(2) 'சர்க்கா' நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுவதாகும். இரண்டு பாராக்களில் விளக்குக.

# 11. பத்திரிகைகள்

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

தமிழ் மக்களின் மனத்தில் உணர்ச்சியெழும்படி எழுதும் வன்மை வாய்ந்த எழுத்தாளர்களாய் இன்று தலைமை சிறந்து விளங்குபவர்களுள் சுவாமி சுத்தானந்த பாரதியார் ஒருவராவர். அவர்கள் இலக்கியம், கலைகள், சமயம், சமூகச் சீர்திருத்தம், சாஸ்திரம், முதலிய பல துறைகளில் உரை நடையாகவும், பாடலாகவும், பல நூல்களை இயற்றித் தமிழ்த்தொண்டு புரிந்து வருகிறார்கள்.



பத்திரிகைகளின் மேன்மையும் பயனும் இப்பாடத்தில் சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்டப்பட்டுள்ளன. ஆசிரியரின் நடைவேகத்தில் அவர் மனவேகம் வெளிப்படுகிறது. அதனைக் காண்க.

பத்திரிகை காலக் கண்ணாடி; பொது மனப்பளிங்கு; மக்கள் வாழ்வை ஒளிபெறத் தூண்டும் உணர்ச்சிக்கோல். குறைகளைத் தடுத்து, நிறை புகுத்தலே பத்திரிகையின் வேலை. பத்திரிகையே சமுதாயத்தின் நாக்கு. "பாரோர் வாய்ச்சொல் பரமன் வாய்ச்சொல்." பத்திரிகை சமுதாயக் கடவுளின் உள்ளமாகும். நீதியைப் போற்றியும், அநீதியைத் திருத்தியும், பத்திரிகைகள் நீதிபதியாய் விளங்குகின்றன. பத்திரிகை ஜனசமூகத்திற்குப் பல துறை யறிவைத் தரும் ஆசானாக விளங்குகின்றது. பத்திரிகையின் நோக்கம் மிகவும் மேலானது. அது மனித வர்க்கத்தின் ஒற்றுமை, அறிவு, நலம், செல்வம், ஊக்கம் முதலியவற்றை ஓங்கச் செய்கிறது. எண்ணங்களின் போக்கு வரவை நடத்தும் பெரிய சாதகம் பத்திரிகைகளே. நாட்டின் முன்னேற்றம் பத்திரிகையின் வாயிலாக நிகழும். ஒரு பத்திரிகை ஜனசமூகத்தை எப்படி வேண்டுமெனினும் மாற்றலாம். மனித சமூகத்தின் நலத்தைக் காட்டுவோன் பத்திராதிபன். அவன் ஒவ்வொரு நேர்மையான காரியத்திற்கும் தோழன்; வறுமை, மடமை, அடிமைப் பிணிகளைப் போக்குவோன்; தேசப் பெருமையையும் தேச நலத்தையும் முன்னேறச் செய்பவன்; தேச ஒற்றுமையை வளர்ப்போன்; தேச உரிமையைக் காப்போன்; தீமை செய்வோரைக் கண்டிப்போன்; இரகசியமாக நடக்கும் தீமைகளை யெல்லாம்

பொதுஜனங்களின் நன்மைக்காக வெளியிடுவோன்; அக்கிரமம், அடிமைத்தனம் ஆகிய இவற்றின் பெரும் பகைவன்; தாழ்த்தப்பட்டோர், எளியோர், அநாதைகளுக்காகப் பரிந்து பேசுவோன்; எல்லாப் பிழைகளையும் சரிப்படுத்துவோன்; செய்திகளைக் குறிப்போன்; எண்ணங்களையும், செய்திகளையும் விளக்கிக் கூறுவோன். ஜனங்களைச் சுதந்திரப்படுத்தும் வீறு அவனிடமுண்டு. அவன் புதியவற்றை விளக்குவான்; பழையவற்றை நினைப்பூட்டுவான்; எதிர்காலத்தை அறிவிப்பான்; சுதந்திரத்தைக் காத்து, ஜன சுயாட்சிக்குப் பெருந்துணையாய் நிற்பான். அவன் சமூக வாழ்வைச் சீர்திருத்துவான்; கல்வி, கலை, அறிவு முதலியவற்றை மக்களிடை ஓங்கச் செய்வான்.

பத்திரிகையால் நமது மக்களுக்கு அறவுணர்ச்சியும், மொழியன்பும், தொழில் மாண்பும், உரிமை வேட்கையும், ஒற்றுமையும் பெருகும். சகிப்புத் தன்மையும், அன்பும், நீதி நெறியும் வளரும்படிப் பத்திரிகைகள் வாழவேண்டும். சாதாரணமாகப் பத்திரிகைகள் தற்காலத்தில் நாட்டு உலக வரலாறு, தமிழர் வரலாறு, சமுதாயச் சீர்திருத்தம் போன்ற பல முக்கியமான விஷயங்களைப் பற்றி எழுதலாம்:—

இன்னும் அவை,

1. முற்காலத்து ஆட்சிமுறை, செல்வப் பெருக்கு, ஒழுக்க மேன்மை, நல்லறிவு முதலியவற்றை எழுதி ஜனங்களுக்கு ஒரு ஆவேசம் பிறக்கும்படி செய்யலாம்.

2. சிறந்த உலக வீரர்களின் சரித்திரங்களையும், பெரியோர் திருவாக்குகளையும் வெளியிட்டு, நாட்டில் வீரவுணர்ச்சியை ஓங்குவிக்கலாம்.

3. மனித வர்க்கத்தைத் தூய்மைப்படுத்தி, அறவுணர்ச்சி யெழும்படி, சீரிய சமயக் கட்டுரைகளை ஏராளமாக வெளியிடலாம். தேவாரம், திருப்புகழ், திருவாசகம், திருவாய்மொழி போன்ற அருள் நூல்களை விளக்கலாம்.

4. சுவை பொருந்திய சிறுகதைகளாலும், கட்டுரைகளாலும், நாடகங்களாலும், கற்பனைகளாலும், ஜனசமூகத்தின் ஊழல்களைக் காட்டி, அவற்றைத் திருத்த முயலலாம்.

5. நிகழ்காலக் குறிப்புக்களை எழுதி, மக்களின் அறிவை வளர்க்கலாம்; எதிர்கால உலகையும் தோற்றுவிக்கலாம்.

6. கிராமங்களின் சீர்திருத்தத்தைப் பற்றி விரிவாக எழுதலாம். கட் குடி, புகைக்குடிகளை யொழிக்கலாம்.

7. இந்து முஸ்லிம் ஒற்றுமை, இந்திய சமூக ஒற்றுமை, தன்னுதவி, எளிய வாழ்வு, உயர்ந்த நோக்கம் முதலியவற்றைப் பத்திரிகைகள் வற்புறுத்தலாம்.

8. அறிவு நூலுக்குரிய மொழிகளைத் தமிழாக்கி உலகிற்குத் தரலாம். "நாம் தமிழர்" என்னும் ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கவேண்டிய வேலைகளைச் செய்யலாம்.

9. போர்களற்று, பொறுமையும், சுத்தமும் சுதந்திரமும், சமத்துவமும் பொலியும் ஒரு சாந்த உலகைக் காலம் எதிர்ப்பார்க்கிறது. அக்காலத்தை நமது ஆத்ம சக்தியால் அருகில் கொண்டுவரும் வழிகளைப் பத்திரிகைகள் செய்யலாம்.

10. மக்களறத்தையும், மன்னறத்தையும் புகட்டி அறம் வளர்ப்பதே பத்திரிகைகளின் நோக்கம்.

இன்னும் எத்தனையோ நலங்களைப் பத்திரிகைகள் செய்யலாம்.

பத்திரிகை நடத்துவோன், உலகிற்குத்தான் கண்டு, நடந்து, அறிந்து, தரக்கூடிய ஒரு நோக்கும் வாக்கும் (Mission and Message) உடையவனாக இருக்கவேண்டும். அத்தகைய நோக்குடன் சில பத்திரிகைகள் வேலை செய்தாற்கூட உலகை எவ்வளவோ முன்னேற்றமடைவிக்கலாம்.

அன்றன்று உலகில் நடப்பதைத் தினசரிப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. அவை பொதுஜன வாழ்வைப் பெரிதும் சார்ந்த பொருள்களைப் பற்றி நடுக்கண்ட நீதியுரைக்கலாம். அநீதிகளைக் கண்டிக்கலாம். நல்லதைப் போற்றலாம். வரம்பு கடந்து மஞ்சட் கண்களால் பிறரைக் குறுகுறுவென்று குறித்து, நகையும் பகையும், இழிவும் வசையும் கொட்டுவது பத்திரிகை யறத்தைப் பழிப்பதாகும். நல்ல தமிழில் தெளிவாக நிகழ்ச்சிகளை மட்டும் காட்டினாலும் போதும் வாரப் பத்திரிகைகள், நாள் நிகழ்ச்சிகளை வடிகட்டி, இரத்தினச் சுருக்கமாக இரண்டொரு பக்கங்களில் ஈந்து, மீதிப் பக்கங்களில் தமிழர் முன்னேற்றம், தமிழ்க் கலை வளர்ச்சிக்கேற்ற கதைகள், கட்டுரைகள், பாக்கள் படங்கள், பல நாட்டுப் புலவர் மொழிகள் முதலியவற்றை வெளியிடலாம். மாதப் பத்திரிகைகள் கழக ஆராய்ச்சிகள், அருங்கலை நுட்பங்கள், இயலறிவு ஆராய்ச்சிகள் அருங்கவிகள், ஓவி

யங்கள், தொழிலாளிகளுக்கு வேண்டிய குறிப்புகளுடன் பொலிந்து கண்குளிர வெளிவரவேண்டும். ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒரு குறித்த நோக்கம் இருக்கவேண்டும். பத்திரிகைகள் சுயநல வம்பைப் பெருக்காமல் பொதுநலச் செழிப்பிற்கே உழைக்க வேண்டும்.

## குறிப்புரை

காலக்கண்ணாடி - காலத்தைக் காட்டும் கண்ணாடி. பிறவற்றையும் அப்படியே கொள்க. சமுதாயம் - Community. பாரோர் - உலகத்தோர். பரமன் - கடவுள். சாதகம் - துணை. வீறு - பெருமை. வேட்கை - ஆசை.

ஆவேசம் - மனவெழுச்சி. இரத்தினச் சுருக்கம் - இரத்தினங்கள் போன்று சிறந்தவற்றை மட்டும் காட்டும் சுருக்கம். இப்பெயர் கொண்ட தமிழ் நூலொன்றும் உண்டு.

## பயிற்சி

### சொற்கள்

(1) பொருள் கூறுக :—சமுதாயம், சமூகம், வர்க்கம், நேர்மை, வீறு, கற்பனை, சமத்துவம், கலை, கழகம், ஓவியம், கட்டுரை.

(2) தொடர் மொழிகளை விளக்கு :—நீதிபதி, ஜனசமூகம், மனித வர்க்கம், தேசஉரிமை, சுயாட்சி, அறவுணர்ச்சி, ஆட்சிமுறை, தன்னுதவி, ஆத்மசக்தி, மன்னறம், இயலறிவு, சுயநலம்.

### வினுக்கள்

(1) பத்திரிகைகளைக் கண்ணாடி, பளிங்கு, கோல் எனக் கூறுவது எப்படி?

(2) ஆசிரியன் சமூகத்திலுள்ள குறைகளை எவ்வாறு நீக்குவான்?

(3) ஆக்க வழிகளில் அவன் உதவுமாறு எங்ஙனம்?

(4) தினசரிப் பத்திரிகைகள் உரைக்கக்கூடியவை யாவை?

(5) வாரப் பத்திரிகைகளில் வெளிவரக்கூடிய பொருள்கள் யாவை?

### கட்டுரையாக்கம்

(1) நம் நாட்டில் வழங்கும் தினசரி, வார, மாதப்பத்திரிகைகளின் பெயர்கள், ஆசிரியரின் பெயர்கள் வெளிவரும் பொருள்கள் முதலியனவற்றை அறிந்தெழுதுக.

(2) இன்று வெளியான ஒரு தினசரிப் பத்திரிகையில் வெளியான விஷயங்களின் தலைப்புக்கள் யாவை?

(3) சமூகச் சீர்திருத்த விஷயமாகப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.

## 12. தமிழ் நாடகக்கலையின் வளர்ச்சி

[வித்துவான் R. விசுவநாதையர், M. A., B. O. L.]

இக்கட்டுரையில் கலைகளின் தன்மைகளும், அவற்றுள் நாடகக்கலை தமிழகத்தில் தோன்றி வளர்ந்த முறைகளும் படிப்படியாக விளக்கப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சி தமிழிலுள்ள பண்டை இலக்கண இலக்கிய நூல்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. மக்களின் நாகரிக வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்குமுள்ள ஒற்றுமையை இப் பகுதியால் உணரலாம்.



சில ஆண்டுகட்குமுன் சென்னைச் சர்வகலாசாலையின் ஆதரவின்கீழ் ஆசிரியர் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் பகுதியின் சுருக்கமே இக்கட்டுரையாகும்.

1. கலை என்பது படைக்கவேண்டும் என்ற அவாவினால் எழுவது. அக்கலைக்கு அழகுணர்ச்சியும், பயனும் குறிக்கோள்களாக அமையும். ஒரு நாட்டின் நாகரிக உயர்வை அதன் கலைகளே விளக்கும்.

2. அக்கலைகள் **பருக்கலைகள்** என்றும், **நுண்கலைகள்** என்றும் இருதிறப்படும். அவற்றுள் பருக்கலைகள் என்பன ஐம்பொறிகளாலும் உணர்ந்து அனுபவிக்க வல்லன. தச்சு, கொத்து முதலிய சாதாரண கிராமத் தொழில்களும், பௌதிகம், இரசாயனம் என்ற உயர்ந்த விஞ்ஞானங்களும் அவற்றின் பாற்படும். நுண்கலைகள் என்பன மனத்தில் எழுந்து, உள் உணர்வுகளால் உணரத் தக்கன. அவற்றையும் பிறபொருள்களின் வழியாக அமைக்கலாம் எனினும் அவற்றின் அழகும், பயனும் மனத்திற்கே ஒத்தனவாகும். இவ்வகையைச் சார்ந்தவை சிற்பம், ஓவியம், இசை, இலக்கியம், நாடகம் முதலியனவாகும்.

3. இவ்வாறு பகுக்கப்பட்ட நுண்கலைகளுள் நாடகம் மிகச்சிறந்து விளங்குவது ஊன்றி நோக்குவோர்க்குப் புலனாகும். அதில் மேலே கூறிய பல நுண்கலைகளும் பொருந்தியிருக்கின்றன. எந்த நாடு உயர்வான நாடகங்களைப் பெற்றுள்ளதோ அந்த நாடே பல கலைகளிலும் வளம்பெற்று, நாகரிகத்திலும் தலைசிறந்து விளங்கும் என்பது ஒருதலை.

4. பண்டைத் தமிழர் நாடகத்தை அவர்களின் முத்தமிழில் ஒன்றாகவும், அவற்றுள் சிறந்ததாகவும் கருதி வந்தனர். சங்க காலத்தின் கடையெல்லை எனக் கருதப் படும் சிலப்பதிகார காலத்தே இக்கலை மிகவுயர்ந்த நிலையை அடைந்திருந்தது. அதற்காகப் பல தனி இலக்கண நூல்களும் நாட்டில் எழுந்திருந்தன. இவ்வாறு உயர்ந்த நிலையை அடைந்த இக்கலையின் வளர்ச்சியை ஆராய்வது சிறந்ததொன்றாகும்.

5. மிகப்பழைய காலத்திலே தமிழர் பல சிறு பிரிவினராய் மலை, காடு, நாடு, கடலோரம் முதலிய இடங்களில் வாழ்ந்து வந்தனர். அவர்களிடையே பல நேரங்களில் போர்கள் எழலாயின. இயற்கையிலேயே வீரம் செறிந்த தமிழர் இப்போர்களில் வெற்றி பெறுவதோ அல்லது விழுப்புண் பெற்று மடிதலோ தம் வாழ்க்கையின் பயன் என்று கருதினர். இவர்கள் போர்க்களங்களில் காட்டிவந்த வீரச்செயல்களைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

6. அப்போர்களின் இடையே வெற்றி பெற்ற வீரர்கள், தனித்தனியே அரசர்களின் அடையாளப் பூக்களை அணிந்து உள்ளத்தில் எழுந்த வீரக்களிப்பைப் புறத்தே காட்டி நடிக்கலாயினர். இதனை "மலர்மலைந்தாட்டு" என்பர் இலக்கண நூலார். சில நேரங்களில் வெற்றி பெற்ற அரசன் தேர்த்தட்டிலேயே நின்றுகொண்டு அருகிலுள்ள வீரர்களோடு கைகோத்து வீராவேசம் கொண்டு ஆடுவதும் உண்டு. இதனை "முன்தேர்க் குரவை" என்பர். இவ்வாறு தனித்தும், கூடியும் வீரர்கள் தங்கள் வீரமகிழ்ச்சியைப் புலப்படுத்தும் காரணத்தால் தமிழ்நாட்டில் கூத்துக்கள் எழுந்திருக்கக்கூடும்.

7. இப்போர்க்களங்களில் வெற்றி பெற்ற அரசன் தனக்குக் கிடைத்த வெற்றிக்காக வீரக்கடவுளாகிய கொற்றவைக்குப் பூசையிடுதல் உண்டு. இதன் முறை பார்ப்போரை அச்சுறுத்தும் தன்மையுடையதாய் இருக்கும். வெட்டுண்ட தலைகளையே அடுப்பாகவும், குடைந்தெடுத்த மற்றொரு தலையையே அடுகலனாகவும், நிணத்தையும் குருதியையுமே உணவாகவும், தொடித்தோளையே துடுப்பாகவும் கொண்டு பலிச்சோறு ஆக்கிப் படைப்பது இப்பூசையின் முறையாகும். இதனைக் "களவேள்வி" என்பர். இப்பலியை உண்ட கொற்றவையின் பேய்கள் அரசனுடைய தேரின் பின்புறத்தில் நின்று ஆடுவதாகக்

கருதப்படும். இதனை "பின்தேர்க்குரவை" என்பர். சின்னேரங்களில் வீரர்களே பேய்களாகத் தம்மை அழைத்துக் கொண்டு ஆடுதலும் பழக்கமாய் இருந்திருக்கலாம்.

8. இப்பேய்களின் கூத்து பிற்காலத்தில் "துணங்கை" என்று அழைக்கப்பட்டது. முருகன் முதலிய தெய்வங்களுக்குத் திருவிழாக்கொண்டாடுங் காலத்தில்இக்கூத்தும் நிகழும். ஆனல் முருகனுக்கு உரிய சிறந்த ஆடல் "வெறி" எனப்படும். அஃது, அக்கடவுளுக்குப் பூசை செய்வோன், வேல் ஒன்றைக் கையிலேந்திக் கடவுளை வழிபட்டு, அக்கடவுள் தன்மேல் ஏறப்பெற்று, ஆவேசமுற்று ஆடுவதாகும். அவ்வாறு ஆடும்பொழுது அவன் தன் கையில் வேலைத்தாங்கி ஆடும் வழக்கம் இருந்ததால் அப்பூசாரிக்கு 'வேலன்' என்ற பெயரே உண்டாயிற்று. நாட்டில் நாகரிகம் முதிர முதிர இவ்வெறியாடலும் மிகச் சிறந்தோங்கியது. வெறியாடுங்களன் முன்னதாகவே செப்பனிடப் பெற்று பலவகை மலர்களும், குருதிதோய்ந்த அரிசிகளும் சிந்தப்பெற்று அலங்கரிக்கப்பட்டிருக்கும். வேலன் ஆடுங்கால், அந்த ஆடலுக்கு ஒவ்வ, கொம்பு, பறை, கஞ்சதாளம் முதலிய இசைக்கருவிகளும் சேர்ந்து ஒலியெழுப்பும். இவ்வாறு கூத்து, தனி மனிதனின் வீரத்திலிருந்து எழுந்து, கடவுள் பூசைக்கு உரிய ஒரு கலையாக வளரலாயிற்று.

9. சில இடங்களில் பஞ்சம் முதலிய உற்பாதங்கள் தோன்றும்போது அந்நிலத்துக்குரிய தெய்வத்திற்குக் கூத்துடன் பூசையிட்டு வந்தனர். அக்காலங்களில் அவ்வூரிலுள்ள சிறுவன் ஒருவனுக்கு அத்தெய்வத்தைப் போல் உடை, அணி முதலியன அணிவித்து, உயர் இடத்தே அவனை ஏற்றி, அவன் முன் பல பொருள்களைப் படைத்து, பலர் கூடிக் கூத்தாடி வழிபடுவர். இதனை "வரிக்கூத்து" என்பர்.

10. பின்பு இராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலிய நூல்கள் தமிழரிடத்திலே அதிகமாகப் பரவி, அவற்றில் கூறப்படும் தெய்வங்களின் வழிபாடுகள் தமிழ் நாட்டில் சிறந்தோங்க, அத்தெய்வங்களின் பெயர்களால் பலவகைக் கூத்துக்களும் தமிழ் நாட்டில் எழலாயின. திரிபுரம் எரித்து, அச்சாம்பற்களத்தில் ஜயானந்தம் கொண்டு, விரிசடைக்கடவுள் ஆடிய கொடுகொட்டி, குவலயாபீடம் என்னும் களிற்றின் கொம்புகளை ஒடித்து, மாயோன் நின்ருடிய அல்லியாடல், அசுரர்களை வென்று,

முருகன் ஒரு குடையைத்தாங்கி, ஆடிய குடைக்கூத்து ஆகியன போன்ற பல தெய்வ ஆடல்களும் மக்களால் நகரங்களிலும், கிராமங்களிலும், திருவிழாக் காலங்களிலும் ஆடப் பெற்றுவந்தன.

11. இவ்வாறு சிறுகச்சிறுக மக்களின் நாகரிக முதிர்ச்சியோடு வளர்ந்துவந்த கூத்துக்குத் துணையாகப் பல இசைக் கருவிகள் சேர்ந்தன. கூத்தர், விறலியர் என்ற கூட்டத்தார் இக்கூத்துக்களையே தம் தொழிலாகக் கொண்டு நாட்டில் பல்கலாயினர். அவர்களை அரசர்களும், பிற வள்ளல்களும் பெரிதும் ஆதரித்து, இக்கலையை நன்கு வளர்த்தனர். வடமொழியிலுள்ள பரத நாட்டியம் முதலிய உயர்ந்த கலைப்பகுதிகள் எல்லாம் தமிழரால் பின்பற்றப்பட்டன. வடுகு, சிங்களம் முதலிய அருகிலுள்ள நாட்டினரின் கூத்துக் கலைகளும் தமிழிலே புகுந்தன. யாழ், குழல், தண்ணுமை முதலிய பல இசைக்கருவிகளும் மிக மேனிலையை அடைந்தன. களன் வகுக்கும் இடத்திற்கும், அரங்கின் அமைதிக்கும், ஆடல் முறைமைக்கும் மிக நுட்பமான சிறந்த விதிகள் எழுந்தன. கணிகையர் என்ற ஓரினத்தார் நாட்டியக் கலையைப் பெரிதும் வளர்த்தனர்.

12. இன்னவாறு பல வழிகளிலும் இக்கலை ஓங்கி, தமிழ் நாடு மிக்க உச்சநிலையை அடைந்திருந்த சிலப்பதிகாரக் காலத்தில், இக்கலையும் தனக்கு இணையில்லாத ஒரு நிலையைப் பெற்றிருந்தது. இதன் தன்மைகளையெல்லாம் சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் பரக்கக் காணலாம்.

## பயிற்சி

### சொற்கள்

(1) பின்வரும் சொற்களின் பொருள் வேற்றுமையைக் காண்க: கலை, களை, கழை. பொறி, பொரி. கூறிய, கூரிய. தலை, தளை, தழை. களம், கலம். வேல், வேள். அல்லி, அள்ளி.

(2) இப்பாடத்திலிருந்து கூத்துக்குரிய பெயர்களை எடுத்தெழுதுக.

(3) வீரம் என்ற சொல்லாலான தொடர்மொழிகளாக இப்பாடத்தில் வந்துள்ளன யாவை?

(4) இப்பாடத்தில் காணப்படும் தமிழ் நூல்களின் பெயர்களை எடுத்தெழுதுக.

## வினாக்கள்

(1) கலை எழுவது எப்படி? அதன் குறிக்கோள்கள் யாவை?

(2) பருக்கலைகள் என்பன யாவை? உதாரணங் கொடுக்க.

(3) நுண்கலைகள் என்பன யாவை? உதாரணங் கொடுக்க.

(4) நாடகத்தில் பல நுண்கலைகள் பொருந்தியுள்ளன என்பது எப்படி?

(5) முத்தமிழ் என்றால் என்ன?

(6) தமிழ் நாடகக்கலை மிக உயர்ந்திருந்த காலம் யாது?

(7) தமிழ் மக்கள் வாழ்ந்திருந்த இடங்கள் யாவை?

(8) மலர்மலைந்தாட்டு என்றால் என்ன?

(9) முன்தேர்க் குரவை யாரால், எங்கு, எப்பொழுது ஆடப்பெறும்?

(10) கொற்றவை யார்?

(11) களவேள்வி எவ்வாறு செய்யப்படும்?

(12) துணங்கைக்கூத்து என்பது யாது?

(13) வெறியாடல் எவ்வாறு நிகழும்?

(14) கூத்து, தனிமனிதனின் வீரத்தினின்றெழுந்து கடவுள் பூசைக்கு உரிய ஒரு கலையாக வளரலாயிற்று—விளக்குக.

(15) வரிக்கூத்து எவ்வாறு ஆடப்பெறும்?

(16) புராணகாலத்தில் எழுந்த கூத்துக்கள் யாவை?

(17) இக்கலையை வளர்த்தவர் யாவர்?

## இலக்கணம்

(1) பின்வரும் சொற்களுக்குப் பகுபத இலக்கணங் கூறுக :— கலை, குடைந்து, பழக்கம், வழிபடுவர்.

(2) பின்வரும் தொடர்களைப் பிரித்துக் காட்டுக :- அழகுணர்ச்சி, இவ்வகை, வீராவேசம், சின்னேரம், ஜயானந்தம், ஓரினத்தார்.

(3) பின் வருவன என்ன தொகைகள்? நுண்கலை. முத்தமிழ். இலக்கண நூல். கடலோரம். தொடித்தோள். வெறியாடல்.

(4) ஐந்தாவது பாராவிலுள்ள முதல் வாக்கியத்தை எளிய வாக்கியங்களாகச் சிதைக்க.

## கட்டுரையாக்கம்

(1) நீ பார்த்த ஏதேனும் ஒரு நாடகத்தின் கலைத்தன்மையைப் பற்றி ஒரு பாரா எழுதுக.

(2) சிலப்பதிகார காலத்தில் நாடகக்கலை எந்நிலையிலிருந்தது? ஒரு பாரா எழுதுக.

(3) நீ விரும்பும் கலை எது? அதன் சிறப்புக்கள் யாவை?

# 13. கீசகன்

[கா. ரா. நமச்சிவாய முதலியார், எம். ஆர். ஏ. எஸ்.]

பல இயற்றமிழ் நூல்களையும், பாடப் புத்தகங்களையும் எழுதியும் பதிப்பித்தும் தம் பெயரை உலகில் நிலைநாட்டிய திருவாளர் கா. ரா. நமச்சிவாய முதலியார் அவர்கள் சென்னை மேரி அரசியார் கல்லூரியிலும், இராஜதானிக் கல்லூரியிலும் பல்லாண்டுகள் தமிழ் விரிவுரையாளராய் விளங்கினார்கள். இக்காலத் தமிழ் வசன நடைக்கு உருவளித்த பெரியார்களுள் திரு. முதலியாரவர்கள் ஒருவர். அவர்கள் இயற்றியுள்ள கீசகன் என்னும் நாடகத்தின் இரண்டாம் அங்கமே இங்குப் பாடமாய் அமைந்துள்ளது.



மகாபாரதத்தில் விராடப்பருவக் கதையின் ஒரு பகுதியைக் கொண்டது இந்நாடகமாகும். ஓராண்டு அஞ்ஞாதவாசம் செய்வதற்காகப் பாண்டவர்கள் மாறுவேடத்துடன் அங்கே சென்றிருந்தார்கள். அவர்கள் அந்நகர மன்னனின் சேவையிற் புகுந்த வரலாறு இவ்வங்கத்திற் கூறப்படும். மருத்துவம், அசுவ சாஸ்திரம், இசை, நாடகம் ஆகிய பல கலைகளைப்பற்றிய நுண்ணிய கருத்துக்கள் இப்பகுதியில் அமைந்து கிடப்பதைக் காண்க.

**நாடக பாத்திரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| விராடன் | ... | விராடநாட்டு மன்னன் | |
| உத்தரன் | ... | விராடன் மகன் | |
| கங்கபட்டர் | ... | தருமபுத்திரர் (மாறு வேடத்தில்) | |
| பலாயனன் | ... | பீமன் | ,, |
| தந்திரபாலன் | ... | நகுலன் | ,, |
| தாமக்கிரந்தி | ... | சகாதேவன் | ,, |
| பிருகந்நளை | ... | அர்ஜுனன் (அலி வேடத்தில்) | |
| விரதசாரணி | ... | திரௌபதி | |
| சுதேஷ்ணை | ... | விராடன் மனைவி | |
| உத்தரை | ... | விராடன் மகள் | |
| கல்யாணி | ... | உத்தரையின் தோழி | |

## இரண்டாம் அங்கம்

### முதற் களம்

இடம் : விராடன் அரண்மனை.

காலம் : பிற்பகல்.

பாத்திரங்கள் : தருமர், விராடன், பீமன்.

காவலன் :—ஆண்டவரே, யாரோ ஒருவர் சமுகத்தை நாடி வந்திருக்கிறார்.

விராடன் :—உள்ளே வரட்டும்.

[பீமன் பலாயனன் என்னும் பெயருடன் வருகிறான்.]

பலாயனன் :—(வணங்கி) ஆண்டவரே, வந்தனம்.

விராடன் :—நல்லது, நீ யார்? என்ன விஷயம்?

பலாயனன் :—பெருமானே, என் பேர் பலாயனன். சமையல் செய்ய நன்கு அறிவேன்; பதார்த்தங்களின் குணுகுணங்களும் தெரிவேன். மல்யுத்தம் செய்யும் வல்லமையும் உண்டு. உத்தரவானால் அரண்மனையில் அமர்ந்து தொழில் செய்துவருகிறேன், அரசே.

விராடன் :—பதார்த்தங்களின் குணங்களை நன்கு அறிவையா—நல்லது, கிழங்குகளில் சிறந்தது எது?

பலாயனன் :—அரசே, கிழங்குகளில் சிறந்தது கருணைக் கிழங்கு. 'மண்பரவு கிழங்குகளில் கருணையன்றிப் புசியோம்' என்று வாகடம் கூறுகிறது.

விராடன் :—சரி, விளாம்பழத்தின் விசேஷம் என்ன?

பலாயனன் :—

வெண்பா

எப்போதும் மெய்க்கிதமாம் ஈளையிரு மல்கபமும்
வெப்பாகுந் தாகமும்போம் மெய்ப்பசியாம்—இப்புவியில்
என்ருகி லும்கனிமேல் இச்சைவைத்துத் தின்னவெண்ணித்
தின்ருல் விளாங்கனியைத் தின். (1)

விராடன் :—அப்படியா, நல்லது, நெய் கலந்த சாதத்தின் குணமென்ன?

பலாயனன் :—

வெண்பா

வெறுநெய்யுஞ் சோறுமுண்ணில் வீறுபலம் நண்ணும்
கிறுகிறுத்த பித்தநோய் கிட்டா—தறுவிக்கும்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காட்டுமிக ஜீரணமாம்
உண்ணற்குப் பத்தியமுண் டோ. (2)

[தருமர் கங்கபட்டராகக் கையில் ஜபமாலை உருட்டிக் கொண்டு வருகின்றனர்; அப்பெரியார் வரவு கண்டு எழுந்து]

விராடன் :—சுவாமி, எழுந்தருள வேண்டும். (வணங்குகின்றான், பலாயனனைப் பார்த்து) நல்லது, பலாயனா, நீ மடைப்பள்ளிக்குப் போகலாம்.

கங்கபட்டர் :—மன்னர் மன்னா, நீயும் நினது நாடும் நீடு வாழ்க.

விராடன் :—

விருத்தம்

மாதவ முனிவ ரேறே மனத்தினி லடிய னேனைக்
காதலித் தருள முன்னாள் கடையனேன் புரிந்து வைத்த
ஓதருந் தவமோ இந்த ஊர்புரி தவமோ அன்றி
ஏதமில் எந்தை முன்னோர் இயற்றிய தவமோ யாதோ. (3)

முனிவர் நாயக, இன்றே என் இல்லம் தூய்மை யடைந்தது. அடியேன் இயற்றிய தவவே தவம் சுவாமீ, அடியேன் செய்யவேண்டிய குற்றேவல் ஏதேனும் உண்டாயின் உரைத்தருள வேண்டும்.

கங்கபட்டர் :—மன்னர் மன்ன, யாம் சிறிது காலம் நின் சமுகத்திலிருக்க நாடி வந்தோம்.

விராடன் :—முனிவர் பெரும, இதனினும் அடியேன் பெறத்தக்க பேறு வேறு யாது?

விருத்தம்

பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளா னுயிடினும்
என்னுள்ளா னுவனவன் இருந்தவத்தோர் நட்பிலனேல்
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லா னுயிடினும்
என்னில்லா னுவனவன் இருந்தவத்தோர் நட்புளனேல். (4)

என்று கூறுவர் தம்மையொத்த பெரியோர். ஆதலால், இனி இது,

பாட்டு

உங்கள்வீ டுங்கள்வாசல் உங்கள்நா டடியேனும்
ஊழியஞ் செய்வேனே—ஒரு
சங்கையில் லாமலே தங்கியி ருக்கலாம்
சந்தோஷ மாகத்தானே. (5)

**கங்கபட்டர்:—**

அகவல்

மன்ன வாழி வள்ளால் வாழி
இறைவ வாழி ஏந்தால் வாழி
வாழி வாழி வாழிநின் வளம்பதி
வாழி மக்களும் வாழிவா ழியவே. (6)

மன்னர் மன்ன, யாம் உன் மனநலத்தை எண்ணி இங்கே வந்ததல்லது வேறன்று.

**விராடன்:—**முனிவர் நாயக, தேவரீர் எப்போதும் அடியேன் அருகிலிருந்து நன்மதி கூறி ஆசீர்வதித்து ஆதரித்தருளல் வேண்டும்.

**கங்கபட்டர்:—**அவ்வாறே யாகுக.

**விராடன்:—**பட்டர் பெரும, வெளியே சற்று உலாவப் போகலாமே.

**கங்கபட்டர்:—**ஆகா, போகலாம். [போகின்றனர்.]

## இரண்டாங் களம்

**இடம்:** விராடபுரத்தின் ராஜவீதி.

**காலம்:** மாலை.

**பாத்திரங்கள்:** உத்தரன், நகுலன், சகாதேவன்.

[உத்தரன் தேரேறி வரும் வழியில் குதிரை வெருண்டு ஓட, நகுலன் தந்திரபாலனாக வந்து அக்குதிரையைப் பிடித்து நிறுத்தி]

**தந்திரபாலன்:—**முகத்தைப் பார்த்ததே இது முரட்டுக் குதிரையென்று தெரிந்தது.

**உத்தரன்:—**அப்படியா? எப்படித் தெரியும் உனக்கு?

**தந்திரபாலன்:—**அரசே, அடியேன் அசுவ லக்ஷணங்களிற் சிறிது அறிவேன்; அவற்றிற்கு உண்டாகும் நோய்களையும் உணர்ந்து நுட்பமாகச் சிகிச்சை புரிவேன். அடியேன் அரசர்களிடம் சென்று, குதிரைகளுக்குச் சிகிச்சை செய்வது வழக்கம்.

**உத்தரன்:—**சரிதான், குதிரைச் சுழிகளின் குணகுணங்கள் உனக்குத் தெரியுமோ? குதிரையின் வர்ண பேதங்கள் எவை? அவற்றின் குணங்கள் என்ன? சொல் பார்ப்போம்.

**தந்திரபாலன்:—**அரசே, அசுவ சாஸ்திரமோ அகன்ற சாஸ்திரம். அதில் அடியேன் சிற்றறிவிற்கு எட்டிய

மட்டும் கூறுகிறேன்; வெள்ளி, முத்து, பால், சங்கு, பனி ஆகிய இவற்றின் நிறம்போல் இருப்பன வெண்மைக் குதிரைகள். மாதுளம்பூ, செம்பஞ்சிக்குழம்பு ஆகிய இவற்றின் நிறம்போலிருப்பன சிவப்புக் குதிரைகள். மை, வண்டு, குயில், மேகம் ஆகிய இவற்றைப்போல் இருப்பன கருங் குதிரைகள். நெருப்பு, கோரோசனை ஆகிய இவற்றைப்போல் இருப்பன பொன்னிறக் குதிரைகள் ஆகும்.

**உத்தரன்** :—இந்த நான்குதானே? இன்னும் ஏதேனும் உண்டோ?

**தந்திரபாலன்** :—இன்னும் பல உண்டு. வெண்மை, செம்மை, கருமை, பொன்மை ஆகிய நான்கு நிறமும் கலந்தது மிசிரமம். முகம், மார்பு, உச்சி, வால், கால் ஆகிய எட்டு உறுப்பிலும் வெண்மையுடையது அஷ்டமங்கலம். உச்சி, கால்கள் ஆகிய ஐந்து இடங்களில் வெண்மை நிறமுள்ளது பஞ்சகல்யாணி. இவை போன்றவை இன்னும் பல உண்டு, அரசே.

**உத்தரன்** :—நிறங்கள் சரிதான். அவற்றில் இன்ன நிறம் நல்லது என்பதில்லையோ?

**தந்திரபாலன்** :—இருக்கிறது; அதையும் கூறுகின்றேன், அரசே.

விருத்தம்

எவ்வண்ணப் பேதமிகுந் திருந்தாலும் வெள்ளைகலந்
திருந்த தானல்
அவ்வண்ணப் பரிநன்று கரும்புரவிக் ககடேனும்
அதன் மார்பேனும்
செவ்வண்ண மிருக்கின் அது ஜயமுளதப் படி வெண்மை
சேர்ந்தா லந்த
மைவண்ணப் பரியின்பேர் வாருணமாம் ஜயங்கொடுக்கும்
மாற்றார் போரில். (7)

மகவளிக்கும் பிடர்வெளுப்பு; மகிழ்வளிக்கும் உரவெளுப்பு;
மணித்தார் கண்டத்(து)
அகவெளுப்புப் பொருள்கொடுக்கும்; முகவெளுப்பு ஜயங்
அதன்பின் பக்கத் [கொடுக்கும்;
தகவெளுப்புச் சுகம்பயக்கும்; இடவெளுப்புச் சந்தானம்
தழைக்கும்; செல்வ
மிகவளர்க்கும், தனம்பலதா னியம்நல்கும், வலப்புறத்து
வெள்ளை மாதோ. (8)

அரசே, இன்னும் அதனதன் நடை, சாயல், சுழி முதலிய வற்றிற்கும் குணகுணங்கள் உண்டு.

உத்தரன் :—சரி, அதிருக்கட்டும், குதிரையின் ஆயுள் நிலை எவ்வளவு?

தந்திரபாலன் :—அரசே, குதிரைக்கு வயது முப்பத் திரண்டு. இதில் பத்துப் பருவங்கள் உண்டு. ஒவ்வொரு பருவமும் மூன்று வருஷம், இரண்டு மாதம், பன்னிரண்டு நாள் என்பர் பெரியோர்.

உத்தரன் :—தந்திரபாலா, உனது புலமையைக் கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். என் தந்தையிடம் சொல்லி, உன்னை அசுவசாலைக்குத் தலைவனாக அமர்த்திக்கொள் கிறேன், வா; உன்னோடு வந்த இவன் யார்?

தந்திரபாலன் :—அரசே, இவன் பெயர் தாமக்கிரந்தி; என்னோடு வாசித்தவன்; பசுவின் லக்ஷணங்களை நன்கு அறிவான்.

உத்தரன் :—அப்படியா! குதிரைக்கு வல்லவன் ஒருவன் இருக்கும்போது, கோவுக்கு வல்லவனும் ஒருவன் இருக்க வேண்டுவது அவசியந்தானே? நல்லது, தாமக்கிரந்தி, மாடுகளின் வகைகளெல்லாம் உனக்குத் தெரியுமோ?

தாமக்கிரந்தி :—தெரிந்தமட்டும் சொல்லுகிறேன், அரசே.

சிந்து

குட்டைநாம்பன் வெள்ளிக்கண்ணன் குறுங்கழுத்தன்
கூழைவாலன் வெடிவாலன் வட்டச்செவியன்
மொட்டைத்தலை மோழைக்காளை புள்ளிக்கறுப்பன்
முறிகொம்பன் தறிகொம்பன் சுத்தக்கறுப்பன்
பட்டிக்காளை குன்றுமணிக் கண்ணன்மயிலை
பால்வெள்ளை நாரைக்காளை காலிற்சிலம்பன்
துட்டக்கள்ளன் வளைகொம்பன் ஒற்றைக்கொம்பனும்
சூழும்பல மாட்டின்வகை சொன்னேனரசே. (9)

உத்தரன் :—இத்தனை வகையா! நல்லது, நீயும் வா.

[மூவரும் போகின்றனர்.]

## மூன்றாங் களம்

**இடம்:** அந்தப்புரம்.
**காலம் :** மாலை.
**பாத்திரங்கள் :** சுதேஷ்ணை, விரதசாரணி, பிருகந்நளை, கல்யாணி.

**கல்யாணி** :—அம்மணி, யாரோ இரண்டு பேர் மாதர்கள் வந்து, தங்களைக் காண விரும்புகிறார்கள்.

**சுதேஷ்ணை** :—கல்யாணி, யாரவர்கள், வரவிடு.

[அர்ஜுனன் பிருகந்நளை என்னும் பெயரை மேற்கொண்டு, திரௌபதிக்கு விரதசாரணி என்னும் பெயரிட்டு அழைத்துக்கொண்டு வருகிறான்.]

**பிருகந்நளை** :—அம்மணீ, நமஸ்கரிக்கின்றேன்.

**சுதேஷ்ணை** :—நல்லது, நீ யார்? எங்கு வந்தாய்?

**பிருகந்நளை** :—அம்மணீ, என் பெயர் பிருகந்நளை. நான் நாடகமும் சங்கீதமும் நன்கு அறிவேன். இவள் பெயர் விரதசாரணி; என்னிடம் பயின்றவள். வண்ணமகளாக இருக்கும் வகைகளெல்லாம் கற்றிருக்கிறாள். இவளைத் தங்கள் ஆதரவில் வைத்துவிட்டுப் போகலாம் என்று அழைத்து வந்தேன்.

**சுதேஷ்ணை** :—நல்லது, இருக்கட்டும்; பிருகந்நளா, உனக்குச் சங்கீதம் தெரியும் என்கிறாயே, ஒரு பாட்டுப் பாடு, கேட்போம்.

**பிருகந்நளை** :—அம்மணி, இதோ பாடுகிறேன்.

[பாடுகிறாள்]

**சுதேஷ்ணை** :—கல்யாணி, நமது குழந்தை உத்தரையை ஓடி அழைத்து வா.

[உத்தரை வருகிறாள்.]

**உத்தரை** :—அம்மா, இந்தப் பாடலும் இசையும் என் மனத்தைக் கவர்கின்றன; நானும் இவ்வகையான பாடல்களைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

**சுதேஷ்ணை** :—உனக்குக் கற்பிக்கத்தான் வந்திருக்கிறாள்; உன் இஷ்டம்போல் கற்றுக்கொள்ளலாமே.

**உத்தரை** :—அப்படியானால் நான் இவரை இப்பொழுதே அழைத்துக்கொண்டு போகிறேன்.

**சுதேஷ்ணை** :—பிருகந்நளா, நமது குழந்தையைக் கொஞ்சம் பரீக்ஷித்துப் பார்.

**பிருகந்நளை** :—அப்படியே அம்மணீ; குழந்தாய், நீ ஏதாவது ஒரு கீர்த்தனம் பாடு, கேட்போம்.

**உத்தரை** :—(பாடுகிறாள்.)

காம்போஜி] பல்லவி [ரூபக தாளம்

ஏழைக்குனதருள் செய்யா - தின்னம்
இருப்பதேன் முருகையா (ஏழைக்)

அநுபல்லவி

வாழை கமுகு மலர்ச்சோலை சூழும்
வளமிகும் சமராபுரி வாழும்
கோழை மும்மல வினையை யகற்றும்
குமர சற்குரு பரனே முற்றும் (ஏழைக்)

சரணம்

பெற்றவர் பிள்ளையைக் கைவிடு வாரோ
பேசாதிருந் தால்உனைத் தெய்வமென் பாரோ
சற்றுந் தெரியாதோ யான்படும் பாடும்
சஞ்சல மேஐய னேஎன்று வாடும் (ஏழைக்)(10)

**பிருகந்நளை** :—*போதும், இது என்ன ராகம்? சொல் பார்ப்போம்.*

**உத்தரை** :—*இது காம்போஜி.*

**பிருகந்நளை** :—*சரி, முக்கிய ராகங்கள் எவை?*

**உத்தரை** :— அகவல்

மேக விரஞ்சி குறிஞ்சி பூபாளம்
வாகுசேர் கைசிகம் வராளி மலகரி
பலலதி யிந்தோளம் படமஞ் சரியே
நல்லநா ராயணி நாட்டை வசந்தம்
பௌளி சீராகம் பங்காளம் கூர்ச்சரி
கௌளி காந்தாரி காம்போஜி லலிதை
தேவக் கிரியைதே சாக்ஷரி மாளவி
சாவேரி தேசி சாரங்கந் தோடி
இராமக் கிரியைவே ளாவளி பைரவி
குண்டக் கிரியை கூறுதன் னியாசியோ
டொன்றிய நாலெட் டாக வுரைத்தவை
நிலைபெறு தலைமை நெறிப்படு மிசையே. (11)

**பிருகந்நளை** :—*குழந்தாய், காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய காலங்களில் முறையே பாடவேண்டிய ராகங்களைச் சொல்லு.*

**உத்தரை** :—

தேவ காந்தாரி தேசாக்ஷி பாண்டி
தேவக் கிரியை கௌரி பூபாளம்

தன்னி யாசிமாந் தாளி மாருவ
தன்யாசி ஒன்பதும் உதயந் தனக்காம்.

பிருகந்நளை :—சரி, உச்சியிற் பாடவேண்டியது?

உத்தரை :—ஆகா சொல்லுகிறேன்.

மேக விரஞ்சி சாரங்கம் பல்லதி
வாகுசேர் மத்திய மாவதி தேசி
மங்கள பௌளநீ லாம்பரி சீரா
கம்ஓர் எட்டும் உச்சி யதற்காம். (12)

பிருகந்நளை :—நன்ருகவே பாடம் செய்திருக்கிருய்; மாலைக்கும் இரவுக்கும் சொல்லு.

உத்தரை :—

இந்தோளம் தோடி இராமளி கௌளி
பந்து வராளி வராளி உசேனி
சவுராஷ் டிரநா ராயணி மாளவி
தவலறு சாயான் னத்தினைச் சாரும். (13)

இரவுக்குரிய ராகங்கள் எனக்கு ஞாபகமில்லை.

பிருகந்நளை :—இவ்வளவு ஞாபகத்திலிருந்ததே விசேஷம். மறதி என்பது எல்லோருக்கும் உண்டு; நான் சொல்லுகிறேன், அப்போது ஞாபகத்திற்கு வரும். முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு என இரவை மூன்ருகப் பிரிக்கலாம். ஒவ்வொரு காலத்திற்கும் வெவ்வேறு ராகங்கள் உண்டு.

இலலிதை காம்போஜி சாவேரி பியாகடம்
வேளா வளியிவை இராமுதற் சாமம்.

பங்காளம் பௌளம் ஆகிரி நாட்டை
மங்களக் கௌசிகை மனோஹரி குண்டக்
கிரியை கேதரர கௌளமோ ரெட்டும்
உரிய நிசியின் நடுவினை உறுமே.

சுருட்டி மஞ்சரி ஜோஹினி சித்திர
வேளாவளி கர்னுட்டம் ஓரைந்தும்
வைகுபின் னிரவு மருவிடு மென்ப.

உத்தரை :—இவைகளில் நான் அதிகம் பழகுவதில்லை.

பிருகந்நளை :—பழகுவது கஷ்டம். நள்ளிரவும், பின்னிரவும் நன்ருகத் தூங்குங் காலம் அல்லவா?—இருக்கட்டும். நீ யாடிய பாட்டு என்ன தாளத்தில் அமைந்தது?

**உத்தரை** :—ரூபக தாளம்.

**பிருகந்நளை** :—தாளங்களின் வகைகளைச் சொல்லு.

**உத்தரை** :—தாளங்கள் ஏழு. அவற்றின் பெயர்: துருவம், மட்டயம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம் என்பனவாம்.

**பிருகந்நளை** :—சரிதான், உனக்குப் பரதம் என்பதன் விவரம் தெரியுமா?

**உத்தரை** :—பரதம் என்ருல்—நடனம்.

**பிருகந்நளை** :—நடனமல்ல; நான் சொல்லுகிறேன் கேள்:

விருத்தம்

பாவமோ டிராகம் தாளமிம் மூன்றும்
பகர்வதால் பரதமென் றுரைப்பர்
ஆவதாம்ஆதி அக்ஷரக் குறியே
அமைந்திடு நாமமா மிதற்கு
மேவிய பாவம் அகத்துறு நினைவை
விளக்கிடல்; இராகமோ இசையாம்;
தாவறுதாளம் பாவநல் லிசைக்குத்
தக்கவா றிசைத்திட ஒலித்தல். (14)

இப்போது தெரிகிறதா?

**உத்தரை** :—நன்ருய்த் தெரிகிறது.

**சுதேஷ்ணை** :—பிருகந்நளா, விரதசாரணி இங்கேயே இருக்கட்டும்; நீ நமது குழந்தையுடன் இருந்து அவளுக்குச் சங்கீதமும், அபிநயமும் கற்றுக்கொடு; அந்தப்புரம் போங்கள்.

[போகிருர்கள்]

## குறிப்புரை

(பாடல்களுக்கு அரும்பதவுரை)

(1) ஈளை, இருமல், கபம்—நோய்களின் பெயர்கள்.
(2) வீறு - பெரிய. அறுவிக்கும் - நீக்கும்.
(3) முன்நாள் - முன்ஞள். ஏதம் - குற்றம்.
(4) புந்தி - புத்தி; மெலித்தல். இருந்தவத்தோர் - பெரிய தவசிகள்.
(5) சங்கை - சந்தேகம்.
(6) ஏந்தால் - அரசனே.
(7) வண்ணம் - நிறம். பரி-குதிரை. அகடு - வயிறு, மை - கருமை. மாற்ருர் - பகைவர்.

(8) உரம் - மார்பு. கண்டம் - கழுத்து.

(10) மும்மலம் - ஆணவம், மாயை, கருமம் என்பன.

(14) ஆதி அக்ஷரக்குறியே அமைந்திடும் நாமம் ஆம். பாவம், ராகம், தாளம் இம் மூன்றின் முதலெழுத்துக்கள் கூடி பரத(ம்) என்றாயிற்று. தாஅறு - குற்றமற்ற.

## பயிற்சி

### சொற்கள்

(1) பின் வருவனவற்றிற்குப் பொருள் கூறுக:—மல் யுத்தம், வாகடம், குற்றேவல், நள்ளிரவு.

(2) பின்வரும் வடமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் மொழிகள் யாவை? சமுகம், வந்தனம், விசேஷம், வருஷம், லக்ஷணம், ஞாபகம்.

### வினாக்கள்

(1) பாண்டவர்கள் விராட நகரத்திற்கொண்ட கோலங்களும் பெயர்களும் யாவை?

(2) விளாம்பழத்தின் விசேஷமென்ன?

(3) நெய்ச்சோற்றா லுண்டாகும் நன்மைகள் யாவை?

(4) விராடன் கங்கபட்டருக்கு எவ்வாறு முகமன் கூறினான்?

(5) நால்வகை நிறக் குதிரைகளின் வகைகள் யாவை?

(6) மிசிரமம், அஷ்டமங்கலம், பஞ்சகல்யாணி—இவை யாவை?

(7) ஜயங்கொடுக்கும் குதிரைகளின் தன்மைகள் யாவை?

(8) வண்ணமகள் என்பவள் யார்?

(9) உத்தரை முருகனைக் குறித்துப் பாடியதன் பொருள் யாது?

(10) பரதம் என்ற பெயர் எவ்வாறு உண்டாயிற்று?

### இலக்கணம்

(1) விராடன் பலாயனனை விளித்து "நீ யார்? என்ன விஷயம்?" என்று கேட்டதற்கு அவன் கூறிய பதிலைப் படர்க்கையில் எழுது.

(2) அடியேன் பெறத்தக்க **பேறு, வேறு, யாது**?—தடித்த சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.

(3) அடியேன் அசுவலக்ஷணங்களிற் சிறிது அறிவேன்; அவற்றிற்கு உண்டாகும் நோய்களையும் உணர்ந்து நுட்பமாகச் சிகிச்சை புரிவேன்—இவ்வாக்கியங்களைச் செயப்பாட்டு வினைவாக்கியங்களாக மாற்றுக.

### கட்டுரையாக்கம்

(1) இசையின் தன்மைகளையும், சிறப்புக்களையும்பற்றி ஒரு பக்கத்தில் எழுதுக.

(2) பாண்டவர்கள் விராடநகரத்தில் எவ்வெவ்வாறு காலங்கழிப்பதாகத் தீர்மானித்தார்கள்?—ஒரு பாராவில் எழுதுக.

## 14. சுவாமி விவேகாநந்தர் கடிதம்

இந்தியாவின் ஆத்மீகசக்தியை உலகுக்குக்காட்டி, அதன் புகழை எங்கும் நிலைக்கச்செய்த பெரியார் சுவாமி விவேகாநந்தராவார். அவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சீடராகி, உண்மைப் பொருளை உணர்ந்து, துறவியாகி அமெரிக்கா முதலிய அந்நிய நாடுகளுக்கும் சென்று, அரிய உபந்யாசங்களைப் புரிந்தும் கட்டுரைகளை எழுதியும் நம் தாய்நாட்டின் பெருமைகளை எங்கும் நிலவச் செய்தார். அவர் சிகாகோ (அமெரிக்கா)விலிருந்து மைசூர் மன்னர் பெருமானுக்கு எழுதிய ஒரு கடிதத்தின் மொழிபெயர்ப்புப் பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.



இக்கடிதத்தால் சுவாமிகள் அவர்களின் இருதயம் நன்கு புலப்படும். அமெரிக்கர்களிடம் காணப்படும் உயர்வுதாழ்வுகளையும், இந்திய மக்களின் நிலையையும், அவர்களுக்காகச் செய்யப்படவேண்டிய காரியங்களையும் அவர் சித்திரித்துக் காட்டுவதைக் காண்க.

சிகாகோ,
1894ஆ ஜூன்மீ 23உ

**மாட்சிமை தங்கிய மன்னர் அவர்களே,**

ஸ்ரீமந் நாராயணர் தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் அருள் புரிவாராக. தங்களுடைய அன்பு மிகுந்த உதவியினலேயே இத்தேசத்திற்கு நான் வர முடிந்தது. வந்த நாள் முதலாக இங்குப் பலரும் என்னை நன்கறியும் பேறு பெற்றுள்ளேன். விருந்தோம்பும் இந் நாட்டு மக்களும் எனக்கு வேண்டியவெல்லாம் தருகிறார்கள். இது மிகவும் வியக்கத்தக்க ஒரு நாடே; பல வழியாலும் இத்தேசத்தினர் வியக்கத் தக்கவர்களே. அன்றாட வாழ்க்கைக்கு இத்தேசத்தினரைப்போல் அவ்வளவு இயந்திரங்களைப் பயன்படுத்துபவர்கள் வேறு எந்தத் தேசத்திலுமில்லை; ஒவ்வொன்றுக்கும் இயந்திரந்தான். மேலும், உலகத்திலுள்ள மக்களின் தொகையில் இவர்கள் தொகை 20-இல் ஒரு கூறுதான்; ஆயினும், இவர்கள் உலகத்திலுள்ள செல்வத்தில் ஆறில் ஒரு பகுதியைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களுடைய செல்வத்திற்கும் இன்ப வசதிகட்கும் குறைவில்லை. ஆனல், இங்கு எப் பொருளும் விலைமிக்கதா யிருக்கிறது. உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களினும் இவ்விடத்தே வேலைக்குக் கூலி

மிகவும் அதிகம். ஆயினும், உழைப்பாளிக்கும் முதலாளிக்கும் ஓவாத போராட்டம் நடந்துகொண்டே யிருக்கிறது.

2. அமெரிக்காவிற்போல் இப்பூவுலகில் வேறெங்கும் மகளிர் இத்தனை உரிமைகளைப் பெற்றிருப்பதில்லை. அவர்கள் அனைத்தையும் மெல்ல மெல்லத் தம் வசப்படுத்திக் கொண்டு வருகின்றனர். இங்கே, பண்புமிக்க ஆடவர் தொகையினும் அத்தகைய மகளிர் தொகை மிகப் பெரிதாதல் ஒரு விந்தை. ஆனாலும் அறிவாற்றல் மிக்க மேதாவியர் பெரும்பாலும் ஆண்பாலராகத்தான் இருக்கின்றனர். நமது சாதிப்பகுப்பு முறைமையை மேற்குத் தேசத்தார் எவ்வளவுதான் குற்றங் கூறினும், அவர்களிடத்து அதனினும் இழிந்ததொன்றாகிய சாதி முறைமை வழங்கி வருகின்றது. அமெரிக்கர்கள் சொல்லுவதைப் போல் எல்லாம் வல்ல டாலர் பெருமான் இங்கு என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம்.

3. இப்புவியில் வேறெந்த நாட்டிலும் இத்தனைச் சட்டங்களில்லை; அவைகளை இவ்வளவு அலக்ஷியம் செய்வதும் வேறெங்கும் கிடையாது. மொத்தத்தில் மேற்றிசையாரில் எப்பகுதியாளரையும்விட நம் ஏழை இந்து மக்கள் ஒழுக்கத்தால் எவ்வளவோ விழுப்பமுடையோர். மத விஷயத்தில் அமெரிக்கர் போலி வேடத்தையாயினும் மதவெறியையாயினும் கைக்கொள்ளுகிறார்கள். அவர்களுள் ஆழ்ந்தயோசனையுள்ள மக்கள் மூட நம்பிக்கை வாய்ந்த மதத்தின்மீது வெறுப்புக் கொண்டு விட்டனர்; புத்தொளி பெற அவர்களெல்லாரும் இந்தியாவை எதிர்நோக்கி யிருக்கின்றனர். தற்கால அறிவியல் நூலின் கோரமான தாக்குதல்களை எதிர்த்துக் கொண்டே ஊறுறாது நிற்கும் பரிசுத்தமான வேதங்களிலுள்ள சிறந்த கருத்துக்களுள் ஒரு சிறிதையும் எவ்வளவு ஆவலுடன் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைத் தாங்கள் நேரில் பார்க்காமல் அறிந்துகொள்ளல் அரிதாகும். என் முடிவென்னவென்றால், அவர்களுக்கு ஆத்மிக நாகரிகம் அதிகமும் நமக்கு லௌகிக ஞானம் அதிகமும் வேண்டுமென்பதுதான்.

4. இந்தியாவில் எல்லாத் தீமைகளுக்கும் காரணமாயிருப்பது ஜனங்களின் ஏழ்மையே. மேற்குத் தேசங்களிலுள்ள ஏழைகள் பிசாசுகளே; அவர்களுடன் நம்ம

வர்களை ஒப்பிட்டுப் பார்க்கின் நம்மவர்களைத் தேவதைகள் என்னலாம். அதனால்தான் நம் ஏழைகளை முன்னேற்றுவது மிக எளிதாகும். நாம் தாழ்ந்த வகுப்பினர்களுக்குச் செய்யவேண்டிய பணியாதெனில், கல்வியை அளித்தலே—அவர்களிழந்துவிட்ட தனியியல்பைத் தளிர்க்கச் செய்தலே. நம்முடைய ஜனங்களும் அரசர்களும் செய்துமுடிக்கவேண்டிய பணி இதுவே. இத்துறையில் இதுகாறும் யாதொன்றும் செய்யப்படவில்லை. வைதிகரது வன்மையும் அயல் நாட்டாரின் வெற்றியும் அநேக நூற்றாண்டுகளாக அவர்களை நசுக்கிவிட்டன. அதன் முடிவாக, ஏழைமக்கள் தாம்மக்கள் என்பதையே மறந்துவிட்டனர். அவர்களுக்குச் சிறந்த கருத்துக்கள் புகட்டப்படவேண்டும். உலகத்தில் என்ன நடக்கிறதென்பதைப் பார்க்க அவர்களது கண்கள் திறக்கப்படவேண்டும். அதன் பிறகு அவர்கள் தாங்களே உழைத்து உய்திபெறுவார்கள்.

5. ஒவ்வொரு ஜாதியரும், ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு ஸ்திரீயும், தம்தம் விடுதலையைத் தாமே நாடி அடையவேண்டும். அவர்களுக்கு எண்ணங்களை ஊட்டுங்கள். அவைதாம் அவர்கட்கு வேண்டும் உதவியெல்லாம். மற்றவை யாவும் அதன் பலனாகப் பின்தொடரும். ரஸாயனப் பொருள்களை ஒன்று சேர்த்து வைக்கவேண்டியது நமது கடமை. இயற்கைமுறைமை பற்றிப் படிகமாதல் தானே நிகழும். அவர்கள் அறிவிற்கு நாம் கருத்துக்களை ஊட்டவேண்டியதுதான் இந்தியாவில் இனிச் செய்யவேண்டியது. இந்த எண்ணந்தான் என் உள்ளத்தில் நெடுங்காலமாக இருந்துள்ளது. இந்தியாவில் என்னால் அதைச்செய்ய முடியவில்லை. இத்தேசத்திற்கு நான் வந்ததும் அதற்காகத்தான். ஏழைகளுக்குக் கல்வி போதிப்பதில் உள்ள பெருங்கஷ்டம் இது; மன்னராகிய தாங்களே ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் இலவசப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி யிருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அப்பொழுதுகூட ஒரு நன்மையும் விளையாது. ஏனெனில், பள்ளிக்கூடத்திற்கு வருவதை விட்டு, ஏழைச் சிறுவர்கள் தம் பெற்றோர்களுக்கு வயல்களில் உதவி செய்வார்கள்; அல்லது பிழைப்பதற்கு வேறு ஏதாவது ஒரு வழியைத் தேடுவார்கள். இந்தியாவின் வறுமை இவ்வளவு கொடியது. ஏழை, கல்வியை நாடி வராவிட்டால், கல்வி அவனைத் தேடிப் போகவேண்டும். கிராமம் கிராமமாகச் சென்று, மத உபதேசஞ் செய்யும்

ஒரே நினைவோடும், சுயநலம் கருதாதும் உள்ள துறவிகள் நம் தேசத்தில் ஆயிரக்கணக்கி லிருக்கிறார்கள். அவர்களில் சிலரை உலகியற் கல்வியும் கற்பிப்பவராக ஏற்பாடு செய்ய முடியுமானல், அவர்கள் ஊரூராக, வீடு வீடாகச் சென்று, மதப் பிரசாரம் செய்வதோடு, கல்வி புகட்டியும் வருவார்கள். இத்தகைய மக்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்திற்கு, மாலைவேளையில், ஓர் ஒளிப்பட விளக்கு, பூகோள உருண்டை, தேசப்படங்கள் முதலியன எடுத்துப் போவதாக வைத்துக்கொள்வோம். ஒன்றுமறியாதவர்களுக்கு வான நூலைப் பற்றியும், பூகோளத்தைப் பற்றியும் ஏராளமாகச் சொல்லிக் கொடுக்கக்கூடும். வெவ்வேறு நாட்டு மக்களைப் பற்றிய கதைகள் சொல்வதானல், தம் ஆயுள் முழுவதும் புஸ்தகங்களைப் படிப்பதால் பெறும் அறிவைக்காட்டிலும், நூறு மடங்கு மிக்க அறிவை ஏழைகளுக்குப் புகட்டலாம். இதற்கு ஓர் ஏற்பாடு வேண்டும். ஆனல், அதற்குப் பணம் வேண்டியதாக இருக்கிறது. இவ்வேற்பாட்டின்படி நடத்திவைக்க இந்தியாவில் போதிய மக்கள் உளர். ஆனல், அந்தோ! அவர்களிடம் பணமில்லை. ஒரு வலிய சக்கரத்தைச் சுற்றச் செய்வது மிகவும் கஷ்டம். ஆனல், ஒருமுறை சுற்றவைத்த பிறகு, அதிகரிக்கும் வேகத்தோடு அது செல்கிறது.

6. என் தேசத்திலேயே யான் உதவிபெற நாடியும், பணக்காரர்களிடமிருந்து ஓர் அனுதாபமும் பெற முடியாமையால், தங்களுடைய உதவிகொண்டு இவ்விடம் வந்தேன். இந்தியாவின் ஏழை மக்கள் இறந்தாலும் இருந்தாலும் அமெரிக்கர்கள் அதுபற்றி ஒன்றும் கவலையுறார். நமது நாட்டினரே தங்களுடைய சுயநலக் காரியங்களைத் தவிர வேறொன்றையும் நினைக்காமலிருக்கும்போது, அமெரிக்கர் ஏன் நம்மவர்களைப்பற்றி நினைக்கவேண்டும்?

7. எனது பெருந்தகை அரசரே! இவ்வாழ்வோ குறுகியது. இவ்வுலகத்தின் ஆடம்பரங்களோ நிலையற்றவை. தமக்கென வாழப் பிறர்க்குரியாளரே, வாழ்பவராவர். மற்றவர்கள் எல்லாரும் உயிரற்றவர்களேயொழிய உயிருள்ளவர்களல்லர். தங்களைப்போல் உயர்வும், பெருந்தன்மையும், அரசுரிமையும் பெற்றுள்ள புதல்வன் ஒருவன், இந்தியா பண்டுபோல் எழுந்து நிற்கப் பேருதவி புரிய முடியும். அவ்வாயிலாக நம்பின் சந்ததியார்கள் அனைவரும்

போற்றும்படியான பெயரை நாம் பெறமுடியும். அறியாமையில் ஆழ்ந்து கஷ்டப்படும் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்காகத் தங்களது கருணை நிரம்பிய இருதயம் உருகவேண்டுமென்று எம்பெருமானிடம் முறையிடும்.

—விவேகாநந்தன்.

## பயிற்சி

### சொற்கள்

பொருள் கூறுக: ஓவாத. ரஸாயனம். சுயநலம். அநுதாபம். உலகியற்கல்வி. வானநூல். புத்தொளி.

### வினுக்கள்

(1) அமெரிக்கரின் மேன்மைகள் யாவை?

(2) அமெரிக்காவில் மகளிர் நிலை எவ்வாறு இருக்கிறது

(3) அமெரிக்காவில் காணப்படும் வகுப்பு வேற்றுமை ல் அமைந்தது?

(4) ஏழைகளுக்கு நாம் செய்யவேண்டிய சிறந்த கடமை

(5) இந்தியாவில் என்னல் அதைச் செய்ய முடியவில்லை ?

(6) கல்விச் சீர்திருத்தத்துக்குச் சுவாமிகள் காட்டும் வ ?

(7) அரசரை அவர் வேண்டிக்கொள்வது யாது?

### இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களைக் குறித்தபடி மாற்றியமைக்க.

(1) கல்வி போதிப்பதில் உள்ள பெருங்கஷ்டம் இ து என்பதை எழுவாயாக மாற்றுக).

(2) டாலர் பெருமான் என்ன வேண்டுமானுலும் ம் (செயப்பாட்டு வினைவாக்கியமாக மாற்றுக).

(3) அமெரிக்காவிற் **போல்** இப்பூவுலகில் வேறெங்கு ர் இத்தனை உரிமைகளைப் பெற்றிருக்கவில்லை. (**போல்** என்பதை ).

(4) இது மிகவும் வியக்கத்தக்க நாடே (இதனை வினுவா க மாற்றுக).

(5) இவர்களுடைய செல்வத்திற்குக் குறைவில்லை. உட டு வாக்கியமாக்குக.

### கட்டுரையாக்கம்

(1) உன் ஊரிலுள்ள ஏழை மக்களின் நிலைமையைப் ரு கடிதம் வரைக.

(2) கல்வியொன்றே சீர்திருத்தங்களுக்கெல்லாம் அடிப்படையானது - ஒரு கட்டுரை வரைக.